

# இறுதி இலக்கு

## சுபா



இரண்டாவது மாடியில் லிஃப்ட் திறந்து வெளிப்பட்ட போதே, இளங்கோ அந்த இரைச்சலால் தாக்கப் பட்டான்.

காற்றில் கனமான மரச்சாமான் எதுவோ பறந்து கதவைத் 'தொம்' என்று தாக்கியது. உயரத்திலிருந்து தரைக்கு நழுவவிடப்பட்ட ஒரு கண்ணாடிப் பொருள் 'சிலீர்' என்று நூறு சுக்கலாகியது. இரும்புக் கட்டில் மொஸய்க் தரையில் தாராளமாய்த் தேய்க்கப்பட்டது. இரண்டு மருந்து பாட்டில்கள் ஜன்னல் வழியே வெளியே பறந்தன.

இளங்கோ பரபரப்பானான்.

காரிடாரில் நிற்க வேண்டிய கான்ஸ்டபிள் எங்கே?

கேள்விக்கு உடனே பதில் கிடைத்தது.

புயலால் எழுப்பி வீசப்பட்டவர் போல் கான்ஸ்டபிள் கதவை விட்டு வெளிப்பட்டு, காரிடாரின் வெளிச் சுவரில் மோதி, துப்பாக்கி ஒரு பக்கம், பெல்ட் மறுபக்கம் என பறந்து சரிந்தார்.

அந்த அறையிலிருந்து ஒரு நர்ஸ் வெளிப்பட்டு ஓடி வந்தாள். இளங்கோ தடுத்தான்.

"என்ன ஆயிற்று?"

"போகாதீர்கள். இன்றைக்கு சந்திரநாத் ரொம்ப வயலண்ட்டாக இருக்கிறான்" நர்ஸ் யாரையோ கூட்டிட்டுவர ஓடினாள்.

இளங்கோ காரிடாரில் ஓடி அந்த அறைக்குள் நுழைந்தான்.

எல்லாம் கவிழ்ந்திருந்தன.

கட்டில், நாற்காலி, பெஞ்ச், மேஜை, தண்ணீர் ஜாடி.

ஓர் இளம் டாக்டர் முகம் நிறையப் பயத்தை ஏந்திக் கொண்டு சுவரின் பல்லி மாதிரி ஒட்டியிருந்தார். அவருடைய கழுத்துக் குழியில் இரு கட்டை விரல்களாலும் நசுக்கிக் கொண்டு சந்திரநாத்.

"சந்திரநாத்" இளங்கோ அதட்டினான்.

சந்திரநாத்தின் முகம் டிகிரி டிகிரியாகத் திரும்பியது.

நெற்றியில் கீறல், கன்னத்தில் ரத்தம், கண்களில் அர்த்தமில்லாத வெறி, வேட்டை நாய்போல் மூச்சு. ஹஷ்ஹ் என்ற வினோதமான சப்தம். பற்கள் கடிபட்டதன் "நறநற"

"சந்திரநாத்"

இளங்கோ பயமில்லாமல் அவனை நெருங்கினான். தோளைப்பிடித்துத் திருப்பினான். "டாக்டரை விடு" என்றான்.

"ஊஹூ..." சந்திரநாத் முடியாது என்று தலையசைத்தான்.

"ஜெயஸ்ரீயை உனக்குப் பார்க்க வேண்டாமா?"

அந்தக் கேள்வி சந்திரநாத்தில் மாற்றங்களை நிகழ்த்தியது. செங்குத்தாய் நின்றிருந்த முதுகு சற்றுத் தளர்ந்தது. டாக்டரின் கழுத்தில் பதிந்திருந்த விரல்கள் வலுவிழந்தன. நழுவின.

சந்திரநாத் திரும்பினான். இளங்கோவின் தோள்களைப் பற்றி உலுக்கினான். ராட்சத ரோபோவால் உலுக்கப்படுவது போன்ற குலுக்கல்.

"எங்கே ஜெயஸ்ரீ? எங்கே என் ஜெயஸ்ரீ?"

"சொல்கிறேன். முதலில் உட்கார்"

சந்திரநாத் காலாலேயே கட்டிலை நிமிர்த்தினான். கீழே வழிந்திருந்த மெத்தையை ஒற்றைக் கையால் கட்டிலில் இழுத்துப் போட்டான். அமர்ந்தான்.

அவனுக்கு அருகில் இளங்கோ உட்கார்ந்தான். கிட்டத்தட்ட முழங்கால் உயரத்தில் அவன் கை ரகசியமாகச் சைகை செய்தது. டாக்டர் எழுந்து கழுத்தை உதறிக் கொண்டார். சிறுத்தை போல பாதத்தை மெத் மெத்தென்று வைத்து



சந்திரநாத்தின் முதுகுப்புறம் நெருங்கினார். கையில் ஊசி.

"ஜெயஸ்ரீ இன்றைக்கு வருவதாகச் சொல்லியிருக்கிறாள்"

"எங்கே, எங்கே?" சந்திரநாத் பரபரத்தான்.

"இங்கே, ஆஸ்பத்திரிக்கு....."

"வா..... வெளியே போய்க் காத்திருப்போம்....."

"வெளியே இல்லை..... இந்த அறைக்கு வருகிறாள். உன்னை மட்டும் பார்க்க."

"என்னை மட்டுமா?"

"ஆமாம்..... உன்னிடம் ஏதோ சொல்ல வேண்டுமாம். ரகசியமாக. அதனால் உன் கனவில் வருகிறேன் என்றாள்."

"கனவிலா!"

"ஆமாம்.... அதனால்தான் டாக்டர் உனக்கு ஊசி போட வந்தார். நீ தூங்கினால்தானே கனவு வரும்"

"சத்தியமாக வருவாளா?"

"சத்தியமாக..."

சந்திரநாத் வெடுக்கென்று டாக்டரைத் திரும்பிப் பார்த்தான்.

அவர் அரண்டு இரண்டடி பின்வாங்க, தன் சட்டையை புஜத்தில் ஏற்றிக் கொண்டான். "ம்... குத்துங்கள் ஊசியை...."

ஊசி இறக்கப்பட்டு, சந்திரநாத் காற்றுச் சருகுபோல மெல்லக் கட்டிலில் சரிந்த நேரம், காரிடாரில் தபதபவென்று கால்கள் ஓடிவந்தன.

"என்ன ஆயிற்று?" பெரிய டாக்டர்.

"சந்திரநாத்திற்கு செடேடிவ் இன்ஜக்ட் பண்ண வந்தபோது திமிறினான். செம கலாட்டா. அப்புறம் இளங்கோ வந்துதான் அமைதியானான்." ஜூனியர் டாக்டர் கிழிந்த சட்டையைச் சரிப்படுத்திக் கொண்டே உதறினார்.

தள்ளாடிக் கொண்டு உள்ளே நுழைந்த கான்ஸ்டபிள் சந்திரநாத்தைத் தாக்க கையை ஓங்கினார்.

"நோ..." என்று பெரிய டாக்டர் தடுத்தார். "அவனுக்கு இப்போது மயக்க மருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது."

"இரும்பு மெஷின் மாதிரி இருக்கிறது இவன் உடம்பு..." கான்ஸ்டபிள் தன் காயத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டார்.

"மெஷினுக்கு மூளை இல்லை, இவனுக்கு உண்டு."

"அதுவும் கோணலான மூளை. ஒரு குறுக்கு புத்திசாலித்தனம்" என்றான் இளங்கோ.

"தாங்க்ஸ் தம்பி....." என்றார் கான்ஸ்டபிள் இளங்கோவின் தோளைத் தொட்டு. "நீ மட்டும் வராவிட்டால்

அவன் தப்பித்திருப்பான். எனக்கு வேலை போயிருக்கும்!''

''கொலைக் கைதிக்கு இன்னும் பலமான காவல் போடுங்கள் என்று எத்தனை தடவை சொல்லி விட்டேன்.''

''இல்லை சிஸ்டர், கைதி மாதிரி அவனைச் சிறையில் வைத்தால்தான் ஆத்திரம் அதிகமாகிறது. யாரையாவது தாக்க வேண்டும் என்று வெறி வருகிறது'' என்றான் இளங்கோ. கீழே சிதறிக் கிடந்ததையெல்லாம் ஒவ்வொன்றாகப் பொறுக்கிக் கொண்டே...

காரிடாரில் போய் நின்ற கான்ஸ்டபிள் விறைப்பானார். ''இன்ஸ்பெக்டர் வருகிறார்'' என்றார் திரும்பி.

கீழே ஜீப்பிலிருந்து பூட்ஸ் கால்கள் வெளிப்பட்டன.

''நான்தான் போன் செய்தேன்'' என்றாள் நர்ஸ்.

எல்லோரும் லிஃப்டை எதிர்பார்த்தனர். அது பிளந்து நரசிம்மாவதாரம் போல் இன்ஸ்பெக்டர் வெளிப்பட்டார்.

''கன்ட்ரோல் பண்ணிவிட்டோம் சார்....'' என்றார் கான்ஸ்டபிள்.

இன்ஸ்பெக்டர் சூழ்நிலையை ஆராய்ந்தார்.

''ஏன் இத்தனை பேர்? எங்கே டாக்டர்... இது யார்?''

''என் பெயர் இளங்கோ. பத்திரிகை நிருபர்''

''ஒரு ஆள் தும்மி முடிப்பதற்குள் அதைப்பற்றி நியூஸ் எழுத எப்படியோ வந்து சேர்ந்து விடுவீர்கள்....''

''இல்லை இன்ஸ்பெக்டர். சந்திரநாதத்தைப் பற்றி இவர் தொடர் கட்டுரை எழுதப் பர்மிஷன் வாங்கியிருக்கிறார். அதற்காக அடிக்கடி அவனைச் சந்தித்து....''

''இதுதான் இந்த பத்திரிகைக்காரர்களிடம் பிரச்னை.... கொலைகாரனைப் பற்றி கதை எழுதி அவனை ஹீரோவாக்கி விடுவார்கள்! இவன் எத்தனைக் கொலை செய்திருக்கிறான், தெரியுமாப்பா உனக்கு?''

''தெரியும்.... நான்கு!''

''நான்கும் பெண்கள். இளம் பெண்கள். கொஞ்சம்கூட இரக்கம் இல்லாமல் கழுத்தில் இரும்புக் கம்பியைப் போட்டு நெரித்துக் கொன்றிருக்கிறான். இவனைப் பற்றிக் கதை எழுத வேண்டுமா?''

''ஏன்? ஏன்? அவனுக்கு இந்த வெறி என்று அவனுடைய வாழ்க்கையின் வேர் வரை தோண்டிப் பார்க்கிறேன், இன்ஸ்பெக்டர். இவன் வெறும் மிருகமில்லை. பெண்களைத் திடீர் என்று போய்த் தாக்கிக் கொலை செய்யவில்லை. திட்டமிட்டு, காத்திருந்து, அவர்களைத் தனிமைப்படுத்திச்



செய்திருக்கிறான். அதற்குப் புத்திசாலித்தனம் வேண்டும்.''

''பார்.... ஹீரோவாக்கி விட்டாய்...''

''காம் டவுன்.... ப்ளீஸ் காம் டவுன்...'' என்றார் டாக்டர் குறுக்கிட்டு. ''இன்றைக்கு இளங்கோ வந்ததால்தான் நிலைமை கட்டுக்குள் அடங்கியது.''

இளங்கோ, இன்ஸ்பெக்டர் பால்ராஜை நட்புப் புன்னகையுடன் பார்த்தான். ''நாம் இன்னொரு சந்தர்ப்பத்தில் சந்திரநாதத்தைப் பற்றி ஆற அமர உட்கார்ந்து பேசுவோம் இன்ஸ்பெக்டர்'' என்றான்.

***

அதே நாள். பின்மாலை. ஆரோக்கியமாய் இருந்த தெருவிளக்குகள் மட்டும் விழித்துக் கொண்டன.

அந்த ஒற்றையடுக்குக் கட்டிடத்தின் உச்சியில் நிலா தெரிந்தது. கீழே ஹாலில் தாளம் தப்பாத சங்கீதம்.

''தக்கதிமி தக்க ஜுனோ. தக்கதிமி தக்கஜுனோ.....''

மீசை, கிராப், சிலாக் அணிந்து நட்டுவனார் தட்டினார். இருபத்திரண்டு பெண்களும் சொல்லி வைத்தாற்போல் ஒரே கதியில் கால்களைத் தரையில் உதைத்து, சேர்த்து, விலக்கி, உயர்த்தி, வளைத்து நடமாடினார்கள்.

பின்னணியில் நடராஜர் சிலை. ஊதுவத்திப்புகை. பெரிய வாழை இலைகளில் பொரிக்குவியல். உடைத்த தேங்காய்கள். வாழைப்பழங்கள். ஆப்பிள்கள். ஆரஞ்சுகள். சிலசதங்கைகள்.

நடனப் பெண்களின் மை விளிம்புகள். விரல்களில், நகங்களில் மருதாணிச் சிவப்பு. உடம்பெங்கும் வியர்வை.

தக்கதிமியின் வேகம் தடதடவென்று கூடியது. சரசரவென்று இறங்கியது. பெண்களின் பாதங்களின் வேகமும்.

ஹாலின் வாசலில் ஒரு பையன் ஓடிவந்து நின்றான்.

''சந்தியா அக்காவிற்கு போன்'' என்றான்.

இரண்டாவது வரிசையில் இருந்த சந்தியா விலகி, நட்டுவனாரை நடனத்தில் நமஸ்கரித்து சதங்கை ஒலிக்க வெளியேறி னாள்.

மூன்று ரூம்கள் தள்ளி குருஜியின் வீட்டு ஹாலில் டெலிபோன். மல்லாந்திருந்த ரிசீவரை எடுத்து, ''ஹலோ'' என்றாள். நடனத்தின் அதிர்வுகள் உடம்பின் நரம்புகளில் இன்னும் தங்கியிருக்க மூச்சிரைத்தது.

''நான் தேவகுமாரின் நண்பன் பேசுகிறேன்.''

அவள் முகம் மிருதுவானது. ''சொல்லுங்கள்.''

"தேவாவின் அப்பாவும் அம்மாவும் உங்கள் வீட்டிற்கு கிளம்பி விட்டார்களாம். அவளுடைய அத்தை நைட் ரயிலில் புறப்பட வேண்டும் என்பதால் விசிட்டைக் கொஞ்சம் அட்வான்ஸ் பண்ணி விட்டார்களாம். இன்னும் அரைமணி நேரத்திற்குள் வந்துவிட முடியுமா என்று கேட்கச் சொன்னார்கள்"

"ஆ.... வந்துவிட முடியும்."

"நான் காரில்தான் வந்திருக்கிறேன். TMI 4031 டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் அருகே நிறுத்தியிருக்கிறேன். நானே வீட்டில் கொண்டு போய் டிராப் செய்கிறேன்."

"நம்பரை இன்னொரு முறை சொல்லுங்கள் TMI 4031 ஆ... உங்கள் பெயர் என்னவென்று சொல்லவில்லையே!"

"என் பெயர் சந்திரநாத்."

## 2

அவருக்கு நாற்பத்தைந்து வயது. திரிசூர்ண வடிவ நெற்றி. கறுப்பு பிரேம் கண்ணாடி. மூக்கில் மிளகு மச்சம். ரேகை பிசகிய முகவாய்க் குழி. காதோரத்தில் பூனை மீசை. ஒரே ஒரு பட்டன் மட்டும் கலர் நூலில் தைத்த முழுக்கைச் சட்டை. பாலீஷ் இழந்த பெல்ட். பிரித்துத் தைத்த பேண்ட். ஸான்டல் செருப்புகள்.

அவளுக்கு நாற்பது வயது. பெரிய குங்குமம். மூக்கில் தப்பான மையத்தில் மூக்குத்தி. பராமரிக்காத பற்கள். வைரம் கனக்கும் காதுகள். பிரக்ஞை இல்லாத புடவை. பொருத்தமில்லாத ரவிக்கை. கழுத்தில் தங்கக் கயிறு. கால்களில் ஹவாய்.

இருவர் கண்களிலும் பொதுவான கவலை.

மூட்டைப் பூச்சியைத் தொடைக்கடியில் சொறிந்து கொண்டு அவர்தான் பேசினார்.

"என் பெயர் வெங்கடேசன். சென்னை சிமெண்ட்ஸில் ஏரியா சேல்ஸ் ஆபீசர். இவள் என் மனைவி. அப்பர் தெருவில் நம்பர் பதினொன்றில் எங்களுக்கு வீடு. ஒரே ஒரு மகள்தான். பெயர் சந்தியா. காலேஜில் படிக்கிறாள். பி.எஸ்ஸி. இரண்டாம் வருஷம். அவள் இன்றைக்கு இன்னும் வீடு திரும்பவில்லை இன்ஸ்பெக்டர்" கண்களில் பதட்டக் கண்ணீர்.

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் நாற்காலியில் நிமிர்ந்தார். மேலேயிருந்து தொங்கிய நாற்பது வாட் பெண்டுலம் ஆடியது.



கறுப்பு டெலிபோன் மீது ஊதுவத்திச் சாம்பல். செங்கல் செக்கலாய் வரைந்த சுவரில் பிரிட்டிஷ் கடிகாரம்.

"வழக்கமாக எத்தனை மணிக்கு வீடு திரும்புவாள்?"

"டான்ஸ் கிளாஸ் போய்விட்டு வந்தால்கூட ஏழரைக்கு மேல் ஆனதில்லை."

"இரண்டு மணி நேரம்தானே வந்து விடுவாள்."

"இல்லை இன்ஸ்பெக்டர். இன்றைக்கு அவளைப் பெண் பார்க்க ஏற்பாடாயிருந்தது. ஏழு, ஏழரை மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்துவிடுவதாகச் சொல்லியிருந்தாள். அவர்களெல்லாம் வந்து காத்திருந்து காத்திருந்து... என் மகள் அப்படிப் பொறுப்பில்லாமல் நடந்து கொள்ள மாட்டாள்."

"மிஸ்டர் வெங்கடேசன், உங்கள் மகளுக்கு வயது என்ன?"

"இருபது."

"காதலிக்கிற வயது..."

"என்ன சொல்கிறீர்கள்?"

"உங்கள் மகளுக்கு இந்த மாப்பிள்ளை பிடிக்காமல் இருந்திருக்கலாம். பெண் பார்க்கும் சடங்கிலிருந்து தப்பிப்பதற்காக ஒருவேளை..."

"உங்கள் நினைப்பு தவறு இன்ஸ்பெக்டர். அவள் யாரைக் காதலித்தாளோ, அந்தப் பையனின் வீட்டிலிருந்துதான் இன்றைக்கு வந்திருந்தார்கள். நான் டான்ஸ் கிளாஸிலேயே போய் விசாரித்து விட்டேன். ஆறரை மணிக்கு அவளுக்கு ஒரு போன் வந்தது. உடனே குருஜியிடம் பர்மிஷன் வாங்கிக் கொண்டு புறப்பட்டு விட்டாள் என்றார்கள்."

"போனா? யார் செய்திருக்கக் கூடும்?"

"தெரியவில்லை இன்ஸ்பெக்டர். அவளுக்கு என்ன ஆயிற்று, எங்காவது விபத்தில் மாட்டிக் கொண்டாளா, தெரிந்து கொள்ளும்வரை நெஞ்சு பதைக்கிறது இன்ஸ்பெக்டர்."

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் டெலிபோனை அருகே இழுத்தார்.

* * *

சூரியன் இருட்டை உடைத்து நொறுக்கிக் கொண்டு சதுரக் கம்பிகள் பதித்த ஜன்னல்கள் வழியே அந்த வீட்டிற்குள் நுழைந்திருந்தான்.

வெங்கடேசன் தூணில் சாய்ந்து உட்கார்ந்திருந்தார். கண்ணாடி மூக்கில் தழைந்திருந்தது. முந்தின இரவு அணிந்திருந்த அதே பேண்ட். அதே சட்டை. அவர் மனைவி

அதே ஹாலின் ஒரு சுவர் மூலையில் பாயின்றி, படுக்கையின்றி தரையில் அப்படியே ஒருக்களித்துச் சரிந்திருந்தாள். கன்னத்தில் கண்ணீரின் அழுக்கு.

வாசலில் ஜீப்பின் டயர் பிரேக் அடிக்கும் சப்தம் கேட்டு இருவரும் பதைத்து எழுந்தனர். நிழலை முதலில் அனுப்பி விட்டு, பின்னாலேயே இன்ஸ்பெக்டர் பால்ராஜ் நுழைந்தார்.

ஆர்வமும் நம்பிக்கையும் மிளிரத் தன்னை நிமிர்ந்து நோக்கும் இரு ஜோடி விழிகளையும் பரிதாபத்துடன் பார்த்தார்.

''ஸாரி...'' என்றார் கால் மாற்றி நின்று. ''சந்தியாவின் ஃப்ரெண்ட்ஸ் வீட்டிலெல்லாம் பர்ஸனலாகப் போய் விசாரித்து விட்டேன். ஆஸ்பத்திரிகளில் நேற்று மாலையிலிருந்து அட்மிட் ஆன விபத்து கேஸ்களையெல்லாம் பார்த்து விட்டேன். அத்தனை போலீஸ் ஸ்டேஷன்களிலிருந்தும் மெஸேஜ் வந்து விட்டது. சந்தியா எங்கே இருக்கிறாள் என்று இன்னும் தெரியவில்லை.''

''ஐயோ'' வெங்கடேசனின் மனைவி புடவைத் தலைப்பை வாயில் பொத்தியிருந்தும், அழுகை தப்பித்து வந்தது. ''என் பெண்ணுக்கு ஒன்றும் ஆகியிருக்காதே? அவள் உயிரோடு கிடைப்பாளா இன்ஸ்பெக்டர்?''

''காரணங்கள் என்ன என்று இனிமேல்தான் தெரிய வரலாம். சார், உங்களுக்குத் தெரியாத ஒரு கோணம் உங்கள் மகள் வாழ்க்கையில் இருந்திருக்கலாம். டைரி எழுதும் பழக்கம் உண்டா அவளுக்கு?''

''உண்டு.''

''அவள் அறையை நான் பார்க்க விரும்புகிறேன்.''

* * *

அறை சுத்தமாய் வைக்கப்பட்டிருந்தது. உறங்காத மெத்தை. கண்களை இடதும் வலதுமாய்ப் பெண்டுலமாக ஆட்டும் கடிகாரக் கரடி. ஹாங்கர்களில் சீராகத் தொங்கும் புடவைகள்... சுரிதார்கள்... இன்ன பிற உடைகள். சுவரில் ஒட்டப்பட்டிருந்த மஞ்சள் நிற Memo Pad. அதில் 'ஹை இன்றைக்கு மாலை தேவகுமார் அண்ட் கோ. பெஸ்ட் ஆஃப் லக். சந்தியா, என்று அவளே எழுதிய வாசகம். கறுப்பு உறை போட்ட டைரி.

**எத்தனை உற்சாகமாயிருக்கிறேன்! தேவாவின் அப்பாவும் அம்மாவும் ஒரு பார்மாலிட்டிக்காக என்னைப் பார்த்து ஓ.கே. சொன்னதும், தேவா! உன் காலைப் பிடித்து ஒரே கடி! எப்படித் துள்ளப் போகிறாய் நீ!**



டைரியில் முந்தின தேதியில் எழுதப்பட்ட வரிகள் பால்ராஜைக் குழப்பின. இந்தக் கல்யாணத்தை அந்தப் பெண் உற்சாகமாய் எதிர்பார்த்திருக்கிறாள். வீட்டை விட்டு அவள் ஓட வேண்டிய அபத்தம் ஏன் நிகழப் போகிறது?

''இன்ஸ்பெக்டர்......''

புதிய குரல்.

டைரியை மூடிவிட்டுத் திரும்பினார். உயரமான ஓர் இளைஞன் நின்றிருந்தான். உறங்காத கண்கள். கலைந்த தலைமுடி. கசங்கிய உடை. அத்தனை மைனஸ் பாயிண்ட்களையும் மீறி அவனிடம் ஒரு தனிப் பிரகாசம் இருந்தது.

''என் பெயர் தேவகுமார்''

கை குலுக்கினான். அழுத்தமான குலுக்கல். ''என் சந்தியாவை கண்டுபிடித்தீர்களா?''

''கண்டுபிடித்து விடுவோம்.''

தேவகுமார் அந்த அறையில் நுழைந்து சுவரில் மாட்டியிருந்த சந்தியாவின் புகைப் படத்தைக் காதலுடன் வருடிக் கொடுத்தான்.

''திடீர் என்று அவள் எப்படிக் காற்றில் மறைவாள்? அவளை யாராவது கடத்திப் போயிருப்பார்களோ?''

திடீரெனப் போன் மணி ஒலித்து அத்தனை பேர் கவனத்தையும் திருப்பியது.

மற்றவர்களை ஒதுங்கச் சொல்லி சைகை செய்துவிட்டு இன்ஸ்பெக்டர் போனை எடுத்தார்.

''இன்ஸ்பெக்டர் பால்ராஜ் இருக்கிறாரா?''

''ஸ்பீக்கிங்'' என்றார் சற்றே தொனி மாற்றத்துடன். எதிர்முனைக் குரல் எந்தக் கடத்தல்காரனுக்கும் சொந்தமில்லை. அவருடைய ஸ்டேஷன் சப்-இன்ஸ்பெக்டர்.

''சார்.... குரோம்பேட்டைக்கும் பல்லாவரத்திற்கும் நடுவில் ரயில் பாதைக்கருகில் ஒரு பெண்ணின் பிணம் கிடக்கிறது. அவளுடைய பர்ஸில் சந்தியா என்று பெயர் பதித்த சாவிக் கொத்து ஒன்று, வெங்கடேசன் என்பவருடைய விசிட்டிங் கார்டு இதெல்லாம் கிடைத்தது.''

பால்ராஜின் முகம் சிதறியது.

''எல்லாம் அப்படியே இருக்கட்டும். இன்னும் அரைமணி நேரத்திற்குள் நான் அங்கே இருப்பேன்.''

ரிசீவரை வைத்தார்.

''என்ன இன்ஸ்பெக்டர்?''

''தேவகுமார், நீங்கள் மட்டும் என்னுடன் வாருங்கள்'' பால்ராஜ் ஜீப்பிற்குள் ஓடினார்.

***

பொது மருத்துவமனை.

ராட்சசக் குடை விரித்தது போன்ற புளிய மர நிழல். பூமியில் திட்டுத் திட்டாய் பறவை எச்சங்கள்.

தேவகுமார் மரத்தில் நெற்றியை மோதிக் கொண்டான்.

''அவள்தான் இன்ஸ்பெக்டர்.... சந்தியாதான். அவளை... அவளை.... இப்படி அநியாயமாய்.....''

''எக்ஸ்க்யூஸ் மீ'' டாக்டர் தன் வெள்ளைக் கோட் காற்றில் பறக்க நடந்து வந்தார். ''நீங்கள் கேட்ட அன் அஃபிஷியல் ரிப்போர்ட் ரெடி இன்ஸ்பெக்டர்.''

பால்ராஜ் கேள்வியுடன் நிமிர்ந்தார்.

''அந்தப் பெண் நேற்று மாலை ஆறரை மணிக்கு மேல் ஏழரை மணிக்குள் சாகடிக்கப்பட்டிருக்கிறாள். சாவதற்கு முன் அவள் பயங்கரமாய்ச் சித்ரவதை செய்யப்பட்டிருக்கிறாள்.''

''யூ மீன்....''

''இல்லை. ரேப் இல்லை. அவள் கால் கட்டை விரல்களில் லைட்டர் ஜோதியால் பொசுக்கியது போல் கொப்புளங்கள். உடம்பில் அங்கங்கே சிகரெட் நசுக்கப்பட்டிருக்கிறது. கை நகத்தில் ஊசி குத்தப்பட்டிருக்கிறது.''

''ஒரு வேளை அவளை பலவந்தம் செய்யப் பார்த்து அந்தச் சித்ரவதையில் அவள் செத்துப் போய்விட்டாளா?''

''இல்லையில்லை. அவள் கழுத்தை சுற்றி மெல்லிய இரும்புக் கம்பி போட்டு இறுக்கி மூச்சுக் குழாய் நெரிக்கப்பட்டுதான் இறந்திருக்கிறாள்.''

''இரும்புக்கம்பியா?!'' இன்ஸ்பெக்டர் பால்ராஜின் புருவம் தூக்கியது. ''சந்திரநாத்! அவன் ஒரு சைக்கோ கிரிமினல். அவன்தான் பெண்களின் கழுத்தை இரும்புக் கம்பியால் நெரித்துக் கொலை செய்பவன். கொலைகாரன் யார் என்று கண்டுபிடித்து விட்டேன் என்று நினைக்கிறேன்.''

பால்ராஜ் ஜீப்பில் பரபரப்பாக ஏறினார்.

***

பால்ராஜை காரிடாரில் பார்த்ததும், காவலுக்கு நின்ற கான்ஸ்டபிள் விறைத்தார். சல்யூட் அடித்தார்.

பால்ராஜ் அந்த அறைக்குள் மின்னலாய் நுழைந்தார். கட்டில் காலியாய் இருக்கும் என்று எதிர்பார்த்தார். ஆனால்



கழுத்துவரை போர்த்திக் கொண்டு, கர்ர்... கர்ர்.... என்று குறட்டை விட்டபடி தூங்கிக் கொண்டிருந்தான் சந்திரநாத்.

## 3

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் கணநேரம்கூடத் தயங்கவில்லை. கட்டிலை நோக்கி வேகமாக நடந்தார். சந்திரநாத்தின் மீது போர்த்தியிருந்த போர்வையை சரேலென்று சுண்டி எறிந்தார். அவனுடைய சட்டையைக் கொத்தாகப் பற்றினார். உலுக்கி நிமிர்த்தினார்.

சந்திரநாத் தூக்கத்தில் தொய்ந்தான். அவனுடைய சட்டையில் சில பட்டன்கள் 'படபட' என்று விட்டுப் போயின. பால்ராஜ் புறங்கையால் அவன் கன்னத்தில் பொறி பறக்க அறைந்தார். சந்திரநாத் திடுக்கிட்டு விழித்தான். விழிப்பிற்கு வந்ததும் பால்ராஜிடமிருந்து உதறிக் கொண்டு கட்டிலிலிருந்து இறங்கினான்.

''நேற்று எங்கே போயிருந்தாய்?'' வெகு கோபமாகக் கேட்டார்.

சந்திரநாத் திருதிருவென முறைத்தான்.

''என்ன முறைக்கிறாய்? நீ தப்பித்து வெளியே போனது எனக்குத் தெரியாது என்று நினைத்தாயா?''

''இவ்வளவு காலை வேளையில் ஒரு இன்ஸ்பெக்டருக்கு மூளை பிசகிப் போகும் என்று நான் நினைத்ததேயில்லை'' என்றான் சந்திரநாத் தூக்கம் கலந்த கரகரப்பான குரலில்.

''யூ ராஸ்கல்!'' பால்ராஜ் அவன் கன்னத்தில் மறுபடி கையை வீசினார். ஆனால் கை அவன் கன்னத்தை எட்டுமுன் சந்திரநாத் அதைத் தடுத்துப் பிடித்தான். அவனுடைய இன்னொரு கை பால்ராஜின் அடுத்த கையைப் பற்றியது. அப்படியே பால்ராஜை நெம்பித் தள்ளினான். சுவரில் முதுகு மோதி நின்றபோது, பால்ராஜ் அசைய முடியாமல் நின்றார்.

சந்திரநாத் அவர் முகத்துக்கு மிக நெருக்கமாகத் தன் முகத்தைக் கொண்டு போனான். அவர் விழிகளுக்குள் வெறியுடன் தன் பார்வையைச் செலுத்தினான்.

இருட்டில் தனிமையான தெருவில் நிராயுதபாணியாக பற்கள் தெரிய உறுமும் ஒரு நாய்க்கெதிரில் நிற்கையில் ஏற்படும் உணர்வு இப்போது பால்ராஜுக்கு ஏற்பட்டது!

எத்தனை வலுவான கைகள் இவனுக்கு!

"சந்திரநாத்.... விடு!"

குரல் கேட்டு சந்திரநாத் திரும்பினான். பெரிய டாக்டர் பால்ராஜை இன்னொரு முறை முறைத்துவிட்டு சட்டையிலிருந்து தன் பிடியை உதறினான்.

பால்ராஜின் விரல்கள் ரிவால்வர் பெல்ட்டைத் தொட, டாக்டர் கையை உயர்த்தி அமைதிப்படுத்தினார்.

"இன்ஸ்பெக்டர், உங்கள் செய்கை எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. திடீரென்று நுழைந்து இவனை அடித்து உயர்த்தி எழுப்ப வேண்டிய அவசியம் என்ன?"

சந்திரநாத் இறுக்கிய தன் விரல்களை உருவிக் கொண்டே பால்ராஜ் பேசினார். "சந்தியா, கல்லூரி மாணவி, இருபது வயது. குழந்தைத்தனம் மாறாத முகம். அவளை நீங்கள் மார்ச்சுவரியின் இரக்கமில்லாத கட்டிலில் பார்த்திருந்தால் என்னைவிட அதிகமாகக் கோபம் வந்திருக்கும் டாக்டர் உங்களுக்கு!"

"சந்தியாவா? யார் அது?" சந்திரநாத் கட்டிலில் அலட்சியமாக உட்கார்ந்து கேட்டான்.

"டாக்டர், உங்களுடன் நான் தனியே பேசவேண்டும்" என்றார் பால்ராஜ் சந்திரநாத்தை பார்வையின் ஓரத்தால் தொட்டபடி.

* * *

டாக்டரின் பிரத்யேகக் குளிரூட்டப்பட்ட அறை

"கழுத்து, கம்பியால் நெரிபட்டிருக்கிறது என்றா சொன்னீர்கள்!"

"ஆமாம் டாக்டர். முந்தின நான்கு கொலைகளிலும் சந்திரநாத் பயன்படுத்திய அதே முறையில் அந்தப் பெண் கொல்லப்பட்டிருக்கிறாள்." என்றார் இன்ஸ்பெக்டர் பால்ராஜ், தன் தொப்பியைக் கழற்றி மேசை மீது வைத்து.

"கொலை நடந்த நேரம் நேற்று மாலை ஆறரை மணிக்கு மேல் ஏழரைக்குள்!"

"அப்படித்தான் அரசாங்க டாக்டர் அபிப்ராயம் தெரிவித்திருக்கிறார்."

"அந்த நேரத்தில் சந்திரநாத் ஆஸ்பத்திரியில் அல்லவா இருந்தான்!"

"அதைப்பற்றி உறுதிப்படுத்திக் கொள்ளத்தான் வந்தேன் டாக்டர். அந்த நேரத்தில் ட்யூட்டியில் இருந்த நர்ஸை நான் விசாரிக்க விரும்புகிறேன்."

முதலில் காஃபி வந்தது. அப்புறம் நர்ஸ் வந்தாள்.



"நேற்று எத்தனை மணியிலிருந்து உங்களுக்கு ட்யூட்டி?"

"மாலை ஐந்தரையிலிருந்து இரவு பத்தரை மணி வரை."

"சந்திரநாத் ஆஸ்பத்திரியை விட்டு எங்காவது வெளியே போயிருக்க வாய்ப்புண்டா?"

"சந்திரநாத் நேற்று மதியம் சற்றுப் படபடப்பாயிருந்தான். அதனால் அவனுக்கு மாலை ஆறு மணிக்கு ஒரு மாத்திரை கொடுத்தேன். அந்த மாத்திரை சாப்பிட்டதும் அவன் அமைதியாகத் தூங்கியிருப்பான் என்பதால் மறுபடி நான் அவன் ரூமிற்கு எட்டு மணிக்கு முன்பு போகவில்லை."

"மாலை ஆறரை மணிக்கு மேல் ஏழரை மணிவரை சந்திரநாத் ஆஸ்பத்திரியில்தான் இருந்தான் என்று உங்களால் உறுதியாகச் சொல்ல முடியுமா?"

"வேறெங்கும் போகும் நிலையில் அவன் இருந்திருக்க மாட்டான்."

"அப்படிப் போயிருந்தால் உங்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை?"

"ஆமாம்.... ஆறு மணிக்கும், அப்புறம் எட்டு மணிக்கும் சந்திரநாத் ஆஸ்பத்திரியில் இருந்தான் என்பது வரைதான் என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்."

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் குழப்பத்துடன் எழுந்தார். அடுத்தது முந்தின மாலை ட்யூட்டியில் இருந்த கான்ஸ்டபிள். அவரும் சந்திரநாத்தை ஆறரை மணியிலிருந்து ஏழரை மணிக்குள் ரூமிற்குள் போய்ப் பார்த்திருக்கவில்லை.

பால்ராஜ் சந்திரநாத்தின் அறைக்குள் நுழைந்தார்.

சந்திரநாத் ஜன்னல் வழியே வெளியே வெறித்துக் கொண்டிருந்தான். பூட்ஸ் சத்தம் கேட்டுத் திரும்பினான். கண்களில் ஆத்திரம்!

இன்ஸ்பெக்டர் கட்டிலிலிருந்து மெத்தையை உருவிக் கீழே போட்டார். மெத்தையைப் புரட்டிப் பார்த்தார். தலையணைகளைக் கையால் அழுத்திப் பார்த்தார். மேஜையின் அடிப்புறம், கட்டிலின் அடிப்புறம், பாத்ரூம் கதவுக்குப் பின்னால் என்று ஒவ்வோர் இடமாக ஆராய்ந்தார்.

"என்ன தேடுகிறீர்கள் இன்ஸ்பெக்டர்?"

குரல் கேட்டு நிமிர்ந்தார். பத்திரிகை நிருபர் இளங்கோ.

பால்ராஜின் நெற்றி சுருங்கியது.

"இவனை யாருய்யா உள்ளே விட்டது?"

கான்ஸ்டபிள் பதறிக் கொண்டு உள்ளே ஓடி வந்தார். "சொல்லச் சொல்லக் கேட்காமல் உள்ளே புகுந்து விட்டார்

இளங்கோ நட்பாகப் புன்னகைத்தான். ''ஸாரி'' என்றான்.

''இளங்கோ என்னுடைய நண்பன்......'' என்றான் சந்திரநாத். இளங்கோவை நெருங்கி அவனை அணைத்துக் கொண்டான்.

''நோ, நோ......'' இளங்கோ அவனிடமிருந்து மெல்ல உருவிக் கொண்டான். ''இன்ஸ்பெக்டருக்குக் கோபம் வந்து விட்டால், அப்புறம் நாம் சந்திப்பதையே தடுத்து விடக்கூடும்'' என்று சிரித்துக் கொண்டே வெளியேறினான்.

சந்திரநாத்தின் முகம் இறுகியது. பால்ராஜின் எதிரில் நின்றான்.

''எல்லோரையும் ஏமாற்றிவிட்டு இதோ இந்த ஜன்னல் கம்பி வழியே என்னால் தப்பிக்க முடிந்தால் முதலில் உங்களைத்தான் தேடி வருவேன் இன்ஸ்பெக்டர். உங்கள் கழுத்தை இந்த விரல்களால் நெரித்துவிட்டுத்தான் மறுவேலை.''

பால்ராஜ் க்ஷணமானார். அவருடைய காதுகள் சிவந்தன. அவருக்கு ஒன்று மட்டும் தெளிவாகப் புரிந்தது. சந்தியாவைக் கொன்றவன் இந்த 'ஆஸ்'தானா என்று ஊர்ஜிதம் செய்து கொள்ள முடியாத இயலாமைதான் தனக்குக் கோபமாக வெடிக்கிறது. சந்திரநாத்திடமிருந்து பார்வையை விலக்கி, அந்த அறையை விட்டு வெளியேறினார்.

***

இரவுப் பூச்சிகள் 'தப்சிப்..... தப்சிப்.....'' என்று பிடிவாதமாக முனகிக் கொண்டிருந்தன. ஜன்னல் கண்ணாடியில் ஒரு கருவண்டு 'விர்ர்......' என்று மோதி உள்ளே நுழைய வழி கேட்டுக் கொண்டிருந்தது.

கதவு திறக்கப்படும் சப்தம் கேட்டு சந்திரநாத் கண்களைத் திறந்தான். நர்ஸ்! கையில் ஒரு இன்ஜெக்ஷன் சிரிஞ்சை வைத்திருந்தாள். ஸ்விட்சைப் போட்டாள்.

அறையில் பளீர் என்று வெளிச்சம் பாய்ந்தது.

சந்திரநாத் சடக்கென்று எழுந்து உட்கார்ந்தான். மார்புவரை போர்த்தியிருந்த போர்வை மடியில் சேகரமானது.

''விளக்கை அணையுங்கள். கண்கள் கூசுகின்றன.''

''ஒரே ஒரு இன்ஜெக்ஷன்''

''விளக்கை அணையுங்கள்'' என்றான் மிரட்டலாக.

கதவருகே நின்ற கான்ஸ்டபிள், ''டேய்..... ஒழுங்கா இன்ஜெக்ஷனை போட்டுக் கொள்'' என்றார் அதட்டலுடன்.

''தட்ஸ் ஆல்ரைட்'' நர்ஸ் டியூப் லைட்டை அணைத்தான்.



இப்போது அறையில் நீல வெளிச்சம் மட்டும்.

சந்திரநாத் குறுக்களித்துப் படுத்தான். நர்ஸ் அவனை நெருங்கி புஜத்தில் ஊசியை செருகினாள். அவன் உடல் விரைத்தது. நர்ஸ் இன்ஜெக்ஷனை உருவிக் கொண்டு அவனுக்குப் போர்த்திவிட்டு வெளியேறினாள்.

''இன்னும் மூன்று மணி நேரத்திற்கு அசைவில்லாமல் தூங்குவான்.'' என்றாள் கான்ஸ்டபிளிடம்.

கான்ஸ்டபிள் கதவை இழுத்துச் சாத்தி வெளியே நாற்காலியிட்டு உட்கார்ந்தார்.

டிக்...டிக்...டிக்.... என்று விநாடிகள் நகர்ந்தன.

உள்ளே சந்திரநாத் மெல்லக் கட்டிலில் புரண்டான். ஒற்றைக் கண்ணைத் திறந்து நடங்கல் ஏதும் இல்லை என்று நிச்சயம் செய்து கொண்டான். போர்வையை விலக்கினான்.

இடது புஜத்தைத் தொட்டுப் பார்த்தான். சருமத்தின் அதே நிறத்திலேயே சுற்றியிருந்த துணிப்பட்டையை விலக்கினான். அதனுள் அவனுடைய புஜத்தோடு சேர்ந்து கட்டப்பட்டிருந்த கெட்டித்த ஸ்பான்ஜ் கருணை உருவி எடுத்தான். நர்ஸ் போட்ட இன்ஜெக்ஷன் மருந்தை முற்றிலும் உறிஞ்சிக் கொண்டிருந்த அந்த ஸ்பான்ஜ் குட்டைத் தொட்டிக்குப் போனது.

எழுந்தான். தலையணைகளை அடுக்கிப் போர்த்தினான்.

பாத் ரூமிற்குள் நுழைந்தான். குழாயின் பின்னே கை வைத்து தடவி அரைசாண் நீளமிருந்த சின்ன ரம்பத்தை எடுத்தான்.

## 4

ர்....ர்....

சிறு சிறு இடைவெளி விட்டு என்ன சத்தம் இது! சந்திரநாத்தின் அறை வாசலில் ஸ்டூலில் அமர்ந்திருந்த கான்ஸ்டபிள் விறைப்பானார். எழுந்தார். கதவுக் கண்ணாடி வழியே உள்ளே பார்த்தார். கட்டிலில் பார்த்தால்..... ஓர் உருவம் படுத்தபடி போர்த்திக் கிடந்தது தெரிந்தது. மனித உடல் இப்படியா சீரான உயரத்துடன்தானா இருக்கும்! ஒருவேளை...

லத்தியை உயர்த்திப் பிடித்தபடி கதவைத் திறந்தார்.

ர்...ர்...ர்... சப்தம் இப்போது முற்றிலும் நின்று விட்டது. இருந்தாலும் கட்டில்வரை சென்று பார்த்துவிடுவது நல்லது. இன்ஸ்பெக்டர் சந்தேகித்தபடி சந்திரநாத் வெளியே போய்வ

ஏதாவது திட்டமிட்டிருந்தால் அதை உடனடியாகக் கண்டுபிடித்து விடுவதுதான் புத்திசாலித்தனம்.

கட்டிலை நெருங்கினார். போர்வையைச் சந்தே... விலக்கினார். தலையணைகள்! சந்திரநாத் எங்கே? போர்வையை முழுவதும் விலக்கினார். சந்திரநாத்தைக் காணவில்லை என்ற செய்தி அவர் மூளையில் பதிவாகிக் கொண்டிருந்த அந்த நொடியில் அவருடைய மூச்சுப் பிடித்த வத்தி பின்புறமிருந்து இழுக்கப்பட்டது. அவர் திரும்புமுன் அவர் மண்டையில் இரும்புக்கரம் இறங்கியது.

கீழே சரிந்த கான்ஸ்டபிளை சந்திரநாத் தாங்கிப்பிடித்தான். அவரைத் தூக்கிக் கட்டிலில் படுக்க வைத்துப் போர்த்தினான். கதவை உட்புறம் தாளிட்டான். குப்பைத் தொட்டியில் தான் எறிந்த ஸ்பான்ஜை எடுத்துக் கொண்டான். பாத்ரூமினுள் நுழைந்து அதன் கதவையும் உட்புறம் தாளிட்டான். ஜன்னல் கம்பிகளைப் பற்றி விலக்கினான். ஏற்கனவே சிறு ரம்பத்தால் வேர்கள் அறுக்கப்பட்ட கம்பிகள் சுலபமாக வளைந்தன. சந்திரநாத்திற்கு வழி விட்டன.

* * *

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் பூட்ஸ் காலைத் தரையில் ஓங்கி மிதித்தார்.

"எப்படி... எப்படி இவ்வளவு பொறுப்பில்லாமல் நடந்து கொண்டாய் நீ?"

அவருக்கு எதிரே இருந்த கான்ஸ்டபிளின் எலும்புகள் கீருடைகள் நடுங்கின.

"ரம்பத்தால் கம்பி அறுக்கும் சத்தம் கேட்டது. சந்திரநாத்தான் ஏதோ செய்கிறான் என்று கதவைத் திறந்து உள்ளே போனேன்."

"தனியாக ஏன் போனாய்? உன்னுடன் துணைக்கு இருக்க வேண்டிய 704 எங்கே?"

"அவன்..... அவன்...."

"சிகரெட் வாங்கப் போய்விட்டானா?"

கான்ஸ்டபிள் தலையைக் குனிந்து கொண்டார்.

"சந்திரநாத் எப்பேர்ப்பட்டவன் என்று உனக்குத் தெரியுமா, தெரியாதா? நிரூபிக்கப்பட்டவை நான்கு கொலைகள். சந்தியாவையும் கொன்றவன் அவனாகத்தான் இருக்க வேண்டும் என்று நான் சந்தேகித்துக் கொண்டிருக்கிறேன். இந்தச் சமயம் பார்த்து இப்படி முட்டாள்தனம் செய்யலாமா?"

"மன்னிக்க..."



பால்ராஜ் சந்திரநாத் படுத்திருந்த கட்டிலை ஆராய்ந்தார். நோயாளியுடன் இன்னொருத்தர் தங்கினால் படுப்பதற்காகப் போடப்பட்ட சோபாவைப் புரட்டினார்.

"இதன் அடிப்பாகம் கிழிக்கப்பட்டிருக்கிறது. ஸ்பான்ஜ் ஒரு துண்டம் வெளியே எடுக்கப்பட்டிருக்கிறது. எதற்காக?"

டாக்டர் பதைப்புடன் இன்ஸ்பெக்டரை பார்த்துக் கொண்டிருந்தார்.

"தூங்குவதற்கான இன்ஜெக்ஷனை நான் போட்ட அரைமணி நேரத்திற்குள் அவன் தப்பியிருக்கிறான். இது எப்படி நடந்தது?"

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் கோபத்துடன் நர்ஸின் புறம் திரும்பினார்.

"நீங்கள் போட்டது கரெக்டான இன்ஜெக்ஷன்தானே?"

நர்ஸ் உதடுகளை நாவால் ஈரப்படுத்திக் கொண்டாள்.

"ஆமாம். சந்தேகமே இல்லை."

"இன்ஜெக்ஷன் போடப்பட்ட பின் நோயாளி எத்தனை மணி நேரம் அமைதியாகத் தூங்குவான்?"

"குறைந்த பட்சம் மூன்று மணி நேரம்."

"நீங்கள் இன்ஜெக்ஷன் போட வந்தீர்களா அல்லது சந்திரநாத்திற்கு சிறு ரம்பம் கொண்டு வந்து கொடுத்தீர்களா?"

"இன்ஸ்பெக்டர்!" நர்ஸின் உதடுகள் நடுங்கின. அழுகைக்குத் தயாராயின. "என்னையா சந்தேகப்படுகிறீர்கள்? எனக்கு இந்த ஆஸ்பத்திரியில் பன்னிரண்டு வருஷ சர்வீஸ்...."

"நாற்பது வருஷ சர்வீஸ் இருப்பவர்களைக்கூட விலைக்கு வாங்கி விடலாம். போலீஸில் இருப்பவன் யாரையுமே சந்தேகப்பட்டுத்தான் ஆக வேண்டும்."

"இன்ஸ்பெக்டர் என் குழந்தை மேல் சத்தியமாக நான் சரியான மருந்தைத்தான் இன்ஜெக்ட் பண்ணினேன். சந்திரநாத்தைக் கண்டாலே எனக்குப் பயம்... அப்படியிருக்க அவனை நான் தப்பிக்க விடுவேனா?"

"ஒரு கேள்விதான் என்னைக் குழப்புகிறது. சந்தியாவின் கொலையில் இவனுக்குத் தொடர்புண்டா என்பது பற்றித் தெரிந்து கொள்ளக் காலையில் நான் வந்தபோது இந்த ரூமை முற்றிலும் சோதனை போட்டுப் பார்த்து விட்டேன். எந்த ஆயுதமும் ஒளித்து வைக்கப்படவில்லை. அப்புறம் ஜன்னல் கம்பிகளை அறுக்க அவனுக்கு சிறு ரம்பம் எப்படிக் கிடைத்தது? இன்றைக்கு யார் யாரெல்லாம் சந்திரநாத்தைப் பார்த்தார்கள்?"

"நீங்கள் வந்துவிட்டுப் போன பிறகு டியூட்டி டாக்டர் இரண்டு

நர்ஸ்கள், கான்ஸ்டபிள் இவர்களைத் தவிர யாரும் இந்த ரூமுக்குள் அனுமதிக்கப்படவில்லை.''

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் பாத்ரூமினுள் நுழைந்தார். ஜன்னலை ஆராய்ந்தார். இரண்டு மாடிகளைப் புறம் அவன் மிக சுலபமாக டிரெயினேஜ் குழாய்களைப் பிடித்து இறங்கியிருக்கிறான்.

ஆபத்தானவன். சிறையில் இருக்க வேண்டியவன். அவனுடைய சுதந்திரம் இன்னும் எத்தனை பேருக்கு மரண மணி அடிக்கப் போகிறதோ!

சந்திரநாத்..... நீ எங்கே இருக்கிறாய்?

* * *

சந்திரநாத் பிரம்பு நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்து கால்களை இன்னொரு நாற்காலியின் மீது நீட்டியிருந்தான். மின்விசிறி ஓசையில்லாமல் தலைமீது சுழன்று கொண்டிருந்தது. ஜன்னல் வழியே அடுத்த வீடு அரை கிலோமீட்டர் தொலைவில் தெரிந்தது.

தனிமையான வீடு. மொத்தம் இரண்டே அறைகள். காரேஜில் நிற்கும் கார்.

சந்திரநாத் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான். கையிலிருந்த ரிமோட் பட்டனைத் தட்டினான். டெலிவிஷனுக்கு உயிர் வந்தது. செய்திகள் வாசித்துக் கொண்டிருந்த பெண்ணைப் பார்த்தான். சற்றே முன்தள்ளி உட்கார்ந்தான்.

இவள்கூட அழகாயிருக்கிறாள்! செழுமையான கழுத்தில் கிறுப்பு மணிகளால் ஆன நெக்லஸ் இவளுக்கு எவ்வளவு எடுப்பாக இருக்கிறது! அந்த நெக்லஸை உருவிவிட்டு அந்தக் கழுத்தில் இரும்புக் கம்பியைப் போட்டு பின்புறமிருந்து சரேலென இழுத்து நெறித்தால் இந்த சிரித்த முகம் எப்படி மாறும்.... இந்தப் பெரிய கண்களில் எப்படிப் பயம் கொப்பளித்து வரும்! சந்திரநாத்தின் முகத்தில் குரூரப் புன்னகை பரவியது. அவனுடைய கை நாற்காலியின் கைப்பிடியை இறுக்கியது.

இது என்ன? சந்திரநாத்தின் புருவம் மேலுயர்ந்தது. அவனுடைய புகைப்படத்தை ஏன் டெலிவிஷனில் காட்டுகிறார்கள்.

''இந்தப் புகைப்படத்தில் காணப்படும் சந்திரநாத் என்ற மனநோயாளி நேற்றிரவு மருத்துவமனையிலிருந்து தப்பி விட்டார். இளம் பெண்களைத் தனிமைப்படுத்திக் குரூரமாக முறையில் கொலை செய்யும் வெறி இவருக்கு உண்டு. ஏற்கனவே நான்கு கொலைகளுக்காக கைதானவர். ஐந்தாவது



கொலை ஒன்றின் தொடர்பாகச் சந்தேகிக்கப்படுபவர். மர்மமான முறையில் இவர் தப்பி விட்டார். சந்திரநாத்தை விரைவில் கண்டுபிடித்து விடுவோம் என்று போலீஸ் கமிஷனர் சுந்தர்ராஜன் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். இருந்த போதிலும் பொதுமக்கள் கவனமாக இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். குறிப்பாக இளம் பெண்கள் இரவில் தனியே செல்வதைத் தவிர்ப்பது நலம். சந்திரநாத்தின் வெவ்வேறு புகைப்படங்கள் இதோ........''

காவல்துறைக் கோப்பிலிருந்து வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்ட தனது பல்வேறு புகைப்படங்களை சந்திரநாத் ரசித்துப் பார்த்தான். எழுந்து சென்று டெலிவிஷன் திரைக்கு ஒரு முத்தமிட்டான். காட்சி மாறி செய்திகள் வேறெதையோ பேசத் துவங்க, அணைத்தான்.

சுவரில் பதிந்திருந்த சிறு அலமாரியின் மரக் கதவைத் திறந்தான். மேலறையில் நிறுத்தி வைக்கப்பட்ட போட்டோவைப் பார்த்தான். ஜெயபுரீ. அவனுடைய ஜெயபுரீ வண்ணப் புகைப்படத்தில் கண்களை வெயிலுக்குச் சுருக்கி நின்றிருந்தாள். அவளைப் பார்க்கையில் அவன் முகத்தில் இருந்த புன்னகை ஒதுங்கிக் கொண்டது. மெலிதான சோகம் கன்ன மேடுகளில் ஏறியது. புருவங்கள் உயர்ந்தன. கண்களில் நீர் சேர்ந்தது.

''ஜெயபுரீ, நான் இல்லாமல் நீ ரொம்பக் கஷ்டப்பட்டாயா? பார், தப்பித்து வந்து விட்டேன். இனிமேல் என்னை யாரும் பிடிக்க முடியாது. உன்னிடமிருந்து பிரிக்க முடியாது.''

அவனுடைய பார்வை ஜெயபுரீயின் புகைப்படத்திலிருந்து தாழ்ந்தது. அங்கே இன்னொரு ஃபோட்டோ.

ஒரு இளம்பெண் தோளில் மாட்டிய பையோடு தெருவைக் கடந்து கொண்டிருக்கும்போது எடுக்கப்பட்ட புகைப்படம். அதன் கீழே வெள்ளைத் தாளில் எழுதப்பட்டிருந்ததைப் படித்தான்.

**மாயா. டைப்பிஸ்ட். எல்.ஜே. கம்ப்யூட்டர்ஸ். என் அடுத்த பலி.**

* * *

மாயா உதடுகளுக்கு லிப்ஸ்டிக்கால் வர்ணமிட்டாள். பொடித்திருந்த வியர்வைத் துகள்களைக் கைக்குட்டையின் நுனியால் கவனமாக ஒற்றி எடுத்தாள். பின்னலை அவிழ்த்து மறுபடி பின்னிக் கொண்டாள். சுரிதாரின் ஊசங்கல்களை நீவிவிட்டுக் கொண்டாள். காம்பாக்டிலிருந்து ரோஸ் பவுடரை கழுத்துப் பட்டையில் தொட்டுக் கொண்டாள்.

''மாயா, அசத்தலாயிருக்கிறாயடி இன்றைக்கு. கோபி இன்றைக்கு பஸ்ஸின் படிக்கட்டிலிருந்து நழுவி விழுந்தாலும் விழப் போகிறான் பார்.''

அவள் பஸ் ஸ்டாண்டு போகும்வரை அங்கிருக்கும் தூண்களில் ஒருத்தன்போல் கோபி அசையாமல் நிற்பான். வருகின்ற பஸ்களையெல்லாம் போகவிட்டு அவளுடைய பஸ்ஸிற்காகக் காத்திருப்பான். அவள் படிகளில் ஏறும்போது மெல்லியதாய் ஒரு புன்னகையை வீசிப் பார்ப்பான். அவள் கவனிக்காததுபோல் ஏறிவிட்டாலும் படிக்கட்டுகளில் தொங்கிக் கொண்டு வருவான். பஸ்ஸை ஒட்டி விரையும் காற்று அவன் தலைமுடியைச் சிலுப்பிப் பின்னால் தள்ளும். சட்டையை முதுகுப்புறம் பலூன் போல் ஊதும். அந்த எதிர்காற்றில் அவன் சொகுசாக, கவலையில்லாதவன் போல முகத்தை வைத்துக் கொண்டு ஜன்னல் வழியே அவளுடைய பார்வைக்காகத் தன் பார்வையை நொடிக்கொரு தரம் நூறு செலுத்துவான். கரிய விழிகள். அடர்த்தியாய் வில் புருவம். விரல் தடிமனுக்கு மீசை. முகவாய்க்குழி. அவளுக்கு அவன் முகம் வெகுவாய் பிடிக்கும். அவனை 'கோபி' என்று அவன் நண்பர்கள் அழைத்த ஞாபகத்தில் அவளுக்கு அவன் கோபி என்றே பெயர் சூட்டி விட்டாள். இன்றைக்கு அவன் என்ன உடைகளில் வருவான்?

மாயா ஒப்பனை அறையை விட்டு வெளிப்பட்டாள். [illegible]ஸ் முழுவதும் காலியாகி விட்டது. எல்லோரும் புறப்பட்டுப் போய்விட்டார்கள்.

தன்னுடைய ஹைஹீல்ஸ் ஒலிக்க 'டக்டக்' என்று வெளியே வந்தாள். படிகளில் இறங்கினாள். தெருவைக் கடந்தாள்.

பஸ் நிற்கும் பொதுக் குடைக்குக் கீழ் மனிதர்கள் சேர்ந்திருந்தார்கள். அதோ அவன். கோபி!

மாயாவின் உடலில் மெல்லிய சிலிர்ப்பு ஓடியது.

பஸ் ஸ்டாப்பை அடைந்தாள். அவனை கவனிக்காதவள் போல பஸ் வரும் வழியையே பார்த்து நின்றாள்.

பஸ் வரவில்லை. ஒரு போலீஸ் ஜீப்தான் வேகமாக வந்து நின்றது. அதிலிருந்து இன்ஸ்பெக்டர் இறங்கியதும், அனைவரும் ஆர்வமாக அவரையே பார்த்தனர்.

''எக்ஸ்க்யூஸ் மீ...''

இன்ஸ்பெக்டர் நேரே அவளிடம்தான் வந்து நின்றார்.

மாயா குழப்பத்துடன் நிமிர்ந்தாள்.

''நீங்கள் தினமும் இதே நேரத்தில்தான் பஸ் ஸ்டாப்பிற்கு வருவீர்களா?''



''அ... எ... ஏன் கேட்கிறீர்கள்?''

''நான் ஒரு கேஸ் சம்பந்தமாக விசாரித்துக் கொண்டிருக்கிறேன்.''

மாயா சற்றே நிம்மதியானாள். ''ஆமாம். ஆறரை மணிக்கு வருவேன்.''

''உடனே பஸ் கிடைத்து விடுமா?''

''ஏழு மணிவரைகூடச் சிலநாள் காத்திருக்க வேண்டிவரும்.''

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் அந்த போட்டோவை நீட்டினார்.

''இந்தப் பெண்ணைப் பாருங்கள். இவள் பெயர் சந்தியா. அதோ அந்தக் கட்டடத்தில் இருக்கும் டான்ஸ் ஸ்கூலில் பயிற்சி பெறுபவள். இரண்டு நாட்களுக்கு முன் கிளாஸிலிருந்து ஆறரை மணிக்குக் கிளம்பியவள் வீட்டை அடையவில்லை. இவள் இந்த பஸ் ஸ்டாப்பிற்கு வந்திருக்கலாமோ என்றுதான் கேட்டேன்.''

மாயா அந்த போட்டோவைக் கையில் வாங்கிப் பார்த்தாள்.

''டான்ஸ் ஸ்கூல் என்று நீங்கள் சொன்னதால் நினைவுக்கு வருகிறது. இந்தப் பெண் வந்தாள். ஆனால் பஸ் ஸ்டாப்பில் நிற்கவில்லை. தாண்டிப் போய்விட்டாள்.''

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் முகத்தில் உற்சாகம் சேர்ந்தது.

''எங்கே போனாள், தெரியுமா?''

''அதோ அங்கே டெலிபோன் எக்ஸ்சேஞ் அருகே ஒரு கார் நின்றிருந்தது. அதை நோக்கிப் போனாள். அதற்குள் என் பஸ் வந்துவிட்டதால் நான் அப்புறம் கவனிக்கவில்லை.''

''அம்பாஸிடரா, மாருதியா?''

''மாருதி வேன் என்று நினைக்கிறேன்.''

''என்ன கலர்?''

''நினைவில்லை.''

''தேங்க்யூ.''

ஜீப் புறப்பட்டதும்தான் மாயாவிற்குச் சட்டென்று நினைவுக்கு வந்தது. சந்தியாதானே அந்தப் பெண்ணின் பெயர்? அவளை நான் முன்பே சந்தித்திருக்கிறேனே! பேசியிருக்கிறேனே!

இன்ஸ்பெக்டரிடம் அதைப்பற்றிச் சொல்லாமல் விட்டு விட்டோமோ என்று நினைத்து ஒரு கணம் பதற்றப்பட்டு, ஜீப்பை நிறுத்தும் பாவனையில், 'இன்ஸ்பெக்டர்' என்று குரல் கொடுக்கப் பார்க்க, அவளிடமிருந்து விலகிப் போன ஜீப்தான்

தெரிந்தது.

மாயா நீட்டையே பார்த்துக் கொண்டு நிற்க....

எதிர்சாரியில் விறகுத் தொட்டியருகே ஒரு மாருதி வேன் வேகம் குறைத்து மெல்ல நிறுத்தத்திற்கு வந்தது. ஏற்றப்பட்ட கண்ணாடி ஜன்னலின் கருமை வழியே மாயாவை நோட்டமிட்டன சந்திரநாத்தின் இரு விழிகள்.

## 5

போலீஸ் கமிஷனர் சுந்தர்ராஜன் வளரத் துவங்கிவிட்ட தன் தொப்பையை போலீஸ் பெல்ட்டால் இறுக்கியிருந்தார். வட அடுத்ததில் விட்டுப் போன இரண்டு நரைத்த முடிகள் மட்டும் காது நோக்கித் திரும்பியிருந்தன. அன்றாட ஷேவின் காரணமாக கன்னம், முகவாய், மேல் கழுத்து இங்கெல்லாம் தோல் சொர சொரத்திருந்தது.

நாற்காலியிலிருந்து உட்கார்ந்து, ஜெம் க்ளிப்பால் நகத்து அழுக்கைச் சுரண்டிக் கொண்டார். நிமிர்ந்தார்.

எதிரே விறைப்பாக நின்று கொண்டிருந்து இன்ஸ்பெக்டர் பால்ராஜிடம் உட்காரச் சொல்லி சைகை செய்தார்.

பால்ராஜ் உட்கார்ந்ததும், தன் மேஜை மீதிருந்த வாரப் பத்திரிகையை அவர் புறம் தள்ளினார்.

"கவர் ஸ்டோரி படித்தீர்களா, பால்ராஜ்?"

நியூஸ் பிரிண்ட் காகிதத்தில் வர்ணத்தில் எங்கிருந்தோ பிடித்துப் போட்ட சந்திரநாத்தின் மசமசப்பான புகைப்படம்

**பெண் வேட்டை நாயகன் சந்திரநாத் தப்பித்ததில் போலீஸ் உடந்தையா?**

என்ற பலநிறப் பெரிய எழுத்துக்கள்.

"சந்திரநாத்தைப் பற்றிக் கட்டுரை வெளியாகியிருக்கிறது. என்னவோ தெருவுக்குத் தெரு இருட்டு மூலையில் ஒளிந்து கொண்டு சந்திரநாத் காத்திருப்பது போலவும், நடமாடும் பெண்கள் அத்தனை பேருக்கும் அவன் கையால் மரணம் என்பது போலவும் கலவரப்படுத்தியிருக்கிறது. அந்தக் கட்டுரையில் சந்திரநாத் தப்பியதற்குப் போலீஸின் கவனக் குறைவுதான் ஒரே ஒரு காரணம் என்று அழுத்தந் திருத்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் போலீஸா சந்திரநாத்திடமிருந்து பெண்களைக் காப்பாற்றப் போகிறது என்று பொதுமக்களுக்கெல்லாம் சந்தேகம் வந்திருக்கும் இந்த



நேரம், நமக்கு மறுபடியும் நல்ல பெயர் கிடைக்க வேண்டுமானால், அந்த சந்திரநாத்தை சீக்கிரம் மடக்க வேண்டும் பால்ராஜ்."

"இன்றைக்கு ஒரு சின்ன பிரேக் கிடைத்தது சார்."

"என்ன?"

"சந்தியா டான்ஸ் ஸ்கூலிலிருந்து வெளியே வந்த நேரத்தில் அவளைக் கவனித்திருக்கக் கூடியவர்கள் யார் யார் என்று யோசித்து, பஸ் ஸ்டாப்பில் விசாரித்தேன். சந்தியா ஒரு மாருதி வேனை நோக்கிப் போனாள் என்று விவரம் கிடைத்தது. மாருதி வேனின் நிறம் வெள்ளையாய் இருக்கலாம் என்று அங்கு பழங்கள் விற்கும் வண்டிக்காரன் சொன்னான்."

"வெள்ளை மாருதி வேன்களை எல்லாம் கவனத்துடன் பார்க்கச் சொல்லுங்கள். பால்ராஜ் அடுத்த ஞாயிற்றுக் கிழமை பிரைம் மினிஸ்டர் மெட்ராஸ் வருகிறார் தெரியுமில்லையா?"

"மகாபலிபுரம் அருகே கடற்கரையில் விஞ்ஞானக் கலைக்கூடம் ஒன்றிற்கு அடிக்கல் நாட்ட வருகிறார். மேடை அமைக்கவிருக்கும் இடத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் சுற்றளவிற்கு இப்போதே கயிறு கட்டிப் பொதுமக்கள்கூட வரமுடியாத அளவிற்குப் பந்தோபஸ்து பண்ணியிருக்கிறோமே, சார்."

"பந்தோபஸ்தைப் பற்றி விசாரிப்பதற்காகச் சொல்லவில்லை, பால்ராஜ். அந்த சந்திரநாத்தை உங்கள் போலீஸ் பிடித்து விட்டதா என்று கேட்கும் நிலைமை வந்துவிடக்கூடாது."

"சந்திரநாத்தை அதற்குள் பிடித்துவிட முயற்சி செய்கிறேன் சார்."

"இன்னும் இரண்டு நாட்கள், பாருங்கள்... உங்களால் முடியவில்லை என்றால், உதவிக்கு வேண்டுமானால் இன்னும் ஒன்றிரண்டு பேர் தருகிறேன்." கமிஷனர் உணர்ச்சியில்லாமல்தான் சொன்னார்.

ஆனால் இன்ஸ்பெக்டர் பால்ராஜிற்கு சொட்டேர் என்று நெற்றியில் தட்டியதைப் போலிருந்தது. உன்னால் முடியவில்லை என்றால் ஒதுங்கிக்கொள் என்கிற மறைமுகமான தொனி.

"யெஸ் சார்" என்றார் சுரத்தில்லாமல்.

கமிஷனரிடமிருந்து விடைபெற்று எழுந்தபோது, அவர் ரத்தம் 'ஜிவு ஜிவு' என்று சூடேறியிருந்தது. மூக்கு விடைத்து விட்டது.

"சந்திரநாத், நீமட்டும் என் கையில் சிக்கு... உன்னை பூட்ஸ் ...யே நசுக்கி விடுகிறேன் பார் நசுக்கி!"

* * *

[மா]யா பஸ்ஸிலிருந்து ஒயிலாக இறங்கினாள். அந்த நிறுத்தத்திற்கு வந்து சேர்ந்தபோது பஸ்ஸில் வெகு சிலரே மிஞ்சியிருந்தனர். சில இருக்கைகள்கூட நிரப்பப்படாமல் இருந்தன. இருந்தபோதிலும் கோபி பஸ்ஸினுள் ஏறாமல் இன்னும் படிக்கட்டிலேயே பயணம் செய்வது ஏன் என்று அவளுக்குப் புரிந்தும் புரியாமலுமிருந்தது. அவள் இறங்கியபோது, படிகளிலிருந்து இறங்கி, அவளுக்கு வழி விட்டான் கோபி. சுரிதாரின் மீது அவள் போட்டிருந்த துப்பட்டாவின் நுனி அவன்மீது உரசியபோது அவன் 'தேங்க்யூ' என்றான்.

அவளையறியாமல் அவள் முகத்தில் ஒரு புன்னகை வந்தது. பஸ் புறப்பட்டதும், கோபி தாவி ஏற, அவனைத் திரும்பிப் பார்த்துவிட்டு மாயா நடந்தாள்.

புன்னகை, திரும்பிப் பார்த்தாள். அதாவது இரண்டு பச்சை விளக்குகள் கொடுத்தாயிற்று. வரட்டும். அவனே வரட்டும்.

மாயா அந்தத் தெருவில் நுழைந்து தன் வீடு நோக்கி நடக்கத் தொடங்கினாள். மலிவாகக் கிடைக்கிறது என்று இந்தக் கண்காணாத வனாந்திரத்தில் ப்ளாட் வாங்கி, ஆபீஸ் லோனில் தனியான வீடு கட்டியிருக்கும் அண்ணன் மேல் கோபமாக வந்தது. அங்கங்கே ஒன்றிரண்டு வீடுகள் முளைக்கத் துவங்கியிருந்தன.

தனிமையான தெரு. கடைசி வீட்டில் ஜன்னலில் தெரிந்த வெளிச்சத்தைத் தவிர வேறு வெளிச்சமில்லை.

டக்டக்.....டக்டக்.....

மாயாவிற்குச் சிலிர்த்தது. அந்தத் தெருவில் இப்போது இன்னொரு ஜோடிச் செருப்பின் சப்தம். அவளுக்குப் பத்தடி தள்ளிப் பின்புறமிருந்து வந்தது.

கோபியாயிருக்கும். புரிந்து கொண்டுவிட்டானா! இன்றைக்காவது தைரியம் வந்துவிட்டதா அவனுக்கு!

திரும்பிப் பார்க்கலாமா என்று எழுந்த ஆவலை மிகுந்த சிரமத்துடன் அடக்கிக் கொண்டாள்.

இப்போது காலடிகள் சமீபித்து விட்டன.

அவள் வேகத்தை சற்றே மட்டுப் படுத்தினாள்.

இதோ கோபி. அவளை நெருங்கி விட்டான். நேர்ப்பக்கத்தில் வந்து விடுவான். வந்து அவளிடம்...



திடீரென்று அவளுக்கு உணர்வு உந்தியது. திரும்பிப் பார்த்து விட்டாள்.

ஐயோ. இது கோபி இல்லை. இவன் யார்? ஏன் இப்படி இவனுடைய முகம் வியர்த்துக் கிடக்கிறது? கண்களில் தெரியும் கொடூரமான வெறி ஏன்? என்னை... என்ன செய்யப் போகிறான்.

அவனுடைய இரண்டு கைகளும், சுரிதாரின் துப்பட்டாவைப் பற்றின. குதிரையின் லகானைப் போல சரேலென இழுத்தன.

மாயாவிற்குப் பயத்தில் நாக்கு ஒட்டிக் கொண்டது. அலற வாய் திறந்தபோது அவனுடைய சதுரமான உள்ளங்கை அவள் முகத்தில் ஓங்கி அறைந்தது.

மாயா மடங்கிச் சரிந்தாள்.

* * *

கோபி போக்குவரத்து விளக்கில் பஸ் வேகம் குறைந்தபோது உதிர்ந்து கொண்டான். அவன் உடம்பு சிலிர்த்துக் கொண்டிருந்தது. காதல் உணர்வுடன் நடந்தான்.

இன்றைக்கு அந்தப் பெண் சிரித்தாளல்லவா? மாயா! எவ்வளவு போதையான பெயர்! எத்தனை சினிமாக்கள் பார்க்கிறேன். எத்தனை பத்திரிகைகளில் படிக்கிறேன். எனக்கு ஏன் தைரியமே இல்லை?

இதைவிட ஒரு பெண்ணிடமிருந்து என்ன ஊக்கம் வரும்? இன்றைக்கு அவள் வீடு எங்கே இருக்கிறது என்றாவது தெரிந்து கொண்டுவிட வேண்டும்.

மாயா வழக்கமாக எந்தத் தெருவில் நுழைவாள் என்று அவனுக்குத் தெரியும். அவன் அதே தெருவில் நுழைந்தான். மாயா எங்காவது தென்படுகிறாளா என்று பார்வையை தெருமுனை வரை ஓட்டியவன் அரண்டான்.

மாயா கீழே சரிந்து கிடக்க, அவள் மீது ஒருத்தன் குனிந்திருந்தான். பக்கத்திலேயே ஒரு மாருதிவேன் நின்றிருந்தது. அதன் பின் கதவுகள் திறந்திருந்தன.

மாயாவின் அருகிலிருந்தவன், அவள் கைகளுக்குக் கீழ் தன் கைகளைக் கொடுத்துத் தூக்கினான். மாருதி வேனுக்குள் அவளைத் தூக்கி ஏற்றினான்.

''ஏய்!'' கோபி கத்தினான்.

அந்த ஆள் அரண்டுபோய்த் திரும்பினான். அவன் முகம் இருட்டில் தெளிவாகத் தெரியவில்லை. கோபி சத்தமிட்டதும் அவன் விரைந்து செயல்பட்டான். மாயாவை உள்ளே நெட்டித்

தன்னி வேனின் கதவை மூடினான். மூன்றும் ஓடிப்போய் ஏறினான். வேன் புறப்பட்டது. விருட்டென்று வளைந்துத் திரும்பியது.

கோபி வேனைத் தடுத்துவிடும் முட்டாள்தனமான எண்ணத்தோடு ஓடினான். வேன் கொஞ்சம்கூட இரக்கமில்லாமல் முன் விளக்குகளைப் போட்டுக் கொண்டு விரைந்து வந்தது. சற்றும் தயக்கமில்லாமல் கோபியின் மீது மோதியது. அவனைத் தூக்கி எறிந்துவிட்டு திரும்பாமல் பறந்தது.

***

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் தன் வாட்சைக் கழற்றி ரேடியோ நேரத்துடன் சரி செய்து கட்டிக் கொண்டார். மேஜைமீது ஆறிக் கொண்டிருந்த தேநீரை எடுத்து உறிஞ்சிக் கொண்டே அன்றைய தினசரியைப் புரட்டினார். பூட்ஸ்கள் ஒலி கேட்டு நிமிர்ந்தார்.

கான்ஸ்டபிள்.

"சார், நீங்கள் சொன்ன ஆளை அழைத்து வந்திருக்கிறேன்."

தினசரியை மடித்து வைத்தார் பால்ராஜ்.

"குட் மார்னிங் இன்ஸ்பெக்டர்" என்று சல்யூட் வைத்தான் பத்திரிகை நிருபர் இளங்கோ. "இவ்வளவு காலையில் சந்திக்க வேண்டும் என்று கூப்பிட்டு அனுப்பியிருக்கிறீர்கள், என்ன காரணம் இன்ஸ்பெக்டர்?"

"உட்கார் இளங்கோ. சந்திரநாத்தைப் பற்றிய பத்திரிகைக் கட்டுரைகளைப் படித்தாயா?"

"படித்தேன். பரபரப்பாக இருக்க வேண்டும் என்று சந்திரநாத்தின் உண்மையான பிரச்னையைப் பற்றித் தெரியாதவர்கள்கூட எழுதிக் கொண்டிருக்கிறார்கள்."

"சந்திரநாத்தின் வாழ்க்கையைப் பற்றி எழுதி முடித்து விட்டாயா?"

"ஏன் இன்ஸ்பெக்டர்?"

"போலீஸ் விசாரணையில் வெளிவராத சில விவரங்கள்கூட உன்னிடம் அவன் சொல்லியிருக்கலாம்!"

"அவனைப் பற்றி எழுதி ஹீரோவாக்குகிறேன் என்றுதானே அன்றைக்குக் கோபம் வந்தது உங்களுக்கு"

"இதோ பார் இளங்கோ! சந்திரநாத்தை உடனடியாகப் பிடித்தாக வேண்டும் நான். அவன் தப்பித்து எங்கே போயிருக்க முடியும்? அவனுடைய நெருக்கமான ஒன்றிரண்டு



உறவினர்களைத் தேடி அவன் போகவில்லை. வேறு எங்கே போனான்? அவன் உன்னிடம் தன்னைப் பற்றிச் சொல்லும்போது நண்பர்கள், தெரிந்தவர்கள், நெருக்கமானவர்கள் என்று யாரையாவது குறிப்பிட்டுச் சொன்னானா? போலீஸ் விசாரணைக்குத் தேவைப்படுகிறது என்றுதான் கேட்கிறேன்."

"அவன் மறுபடியும் பேசியதெல்லாம் அவன் காதலி ஜெயஸ்ரீயைப் பற்றித்தான்."

"சந்திரநாத்தின் நண்பர்கள் யாரிடமாவது மாருதி வேன் இருப்பதாக அவன் சொல்லியிருக்கிறானா?"

"ஏன் இன்ஸ்பெக்டர்?"

"சந்தியா கொலையான அன்றைக்கு அவன் ஒரு மாருதி வேனில் ஏறினான் என்று விவரம் கிடைத்திருக்கிறது."

"அப்படியா?"

இளங்கோ ஆர்வத்துடன் தன் ஜோல்னாப் பையிலிருந்து நோட்டுப் புத்தகமும், பேனாவும் எடுத்தான்.

பால்ராஜ் அவனைக் கையமர்த்தினார்.

"நான் பத்திரிகைக்குப் பேட்டி கொடுக்கவில்லை இளங்கோ. விசாரணை முடியும்வரை அந்த விவரமெல்லாம் பத்திரிகைகளில் வரவேண்டாம். சந்திரநாத்துடன் ஓரளவு நட்பாக இருந்தாய் நீ என்பதால் உன்னிடம் புதிய தகவல்கள் கிடைக்கலாம் என்று எனக்குத் தோன்றியது."

இளங்கோ பதில் சொல்லுமுன் மேஜை டெலிபோன் ஒலித்தது.

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் எடுத்தார். எதிர்முனைச் செய்தி அவர் முகத்தில் பரபரப்பைக் கொண்டு வந்தது.

"அப்படியா! இதோ வருகிறேன்" என்று ரிசீவரை வைத்தார்.

"இளங்கோ, நான் அவசரமாகப்போக வேண்டியிருக்கிறது நாம் அப்புறம் பேசுவோம்...."

இளங்கோ அவரைக் குழப்பத்துடன் பார்த்தான்.

***

ஆஸ்பத்திரி காரிடாரில் சப்-இன்ஸ்பெக்டர் மோகன் பால்ராஜைச் சந்திக்க காத்திருந்தார்.

"நேற்று எங்கள் ஏரியாவில் ஓர் ஆக்ஸிடெண்ட்" என்று பால்ராஜுடன் வேகமாக நடந்து கொண்டே பேசினார். "அடிபட்டவன் பெயர் கோபி. பலமான அடி. இன்றைக்குக் காலையில்தான் கண் திறந்தான். அவனை மோதிவிட்டுப்

போன ஒரு வெள்ளை மாருதி வேன் என்று அவன் சொன்னது எனக்கு உங்கள் நினைவு வந்தது.''

''இப்போது அவனுக்கு எப்படியிருக்கிறது?''

''தொடர்ச்சியாகப் பேச முடியவில்லை. ஆனால் விட்டு விட்டுப் பேசுகிறான்.''

வார்டினுள் நுழைந்தனர்.

கோபியின் உச்சந்தலையிலிருந்து முகவாய் வரை மஃப்ளர் கட்டியதுபோல் பாண்டேஜ் துணி.

பால்ராஜைப் பார்த்ததும் அவன் கண்கள் கிட்டே வரச்சொல்லி கெஞ்சின. அவன் உதடுகள் அசைந்தபோது வெ... மிக மெல்லியதாய்த்தான் வந்தது.

''மாயா..... மாயாவைக் காப்பாற்றுங்கள்.''

''எந்த மாயா?''

''அவளைத்தான் அவன் வேனில் வலுக்கட்டாயமாகத் திணித்துக் கொண்டு போனான்.''

பால்ராஜிற்குக் காதோரம் சூடானது.

வெள்ளை மாருதி வேன். அடுத்த பெண்.

தன் பாக்கெட்டிலிருந்து சந்திரநாத்தின் ஃபோட்டோவை வெளியே எடுத்தார்.

''ஆளைப் பார்த்தாயா? இவன்தானா பார்.''

கோபி தளர்ந்த பார்வையால் அந்தப் ஃபோட்டோவைப் பார்த்தான்.

''இருட்டில் சரியாகத் தெரியவில்லை. ஆனால் இவன்தான் என்று நினைக்கிறேன். வேன் நம்பரைக்கூட பார்க்க முயன்றேன். நம்பர் பிளேட் இல்லை.''

''மாயா என்று யாரைப் பற்றியோ சொல்கிறானே?''

''ஆமாம்'' என்றார் எஸ்.ஐ. மோகன். ''மாயா என்று ஒரு பெண் நேற்று மாலை வீடு திரும்பவில்லை என்று எங்கள் ஸ்டேஷனுக்கு கம்ப்ளெயிண்ட் வந்துள்ளது.''

''மை காட்!'' பால்ராஜ் வெளியே வந்து காரிடாரில் நின்று தீவிரமாக யோசித்தார்.

''சப்பக் சப்பக்' என்று செருப்பொலி கேட்டு கலைந்தார். நிமிர்ந்தார்.

இளங்கோ.

''இன்ஸ்பெக்டர் சந்திரநாத்தைப் பற்றிக் கேட்டீர்களே. முக்கியமான ஒரு தகவல் நினைவுக்கு வந்தது. உடனே உங்களிடம் தெரிவிக்க வேண்டும் என்று தேடிப் பிடித்து வந்து



விட்டேன்.''

பால்ராஜ் பதில் சொல்லாமல் அவனைப் பார்த்தார்.

''நான் சொல்லும் தகவலை வைத்து சந்திரநாத்தை நீங்கள் நிச்சயம் பிடித்துவிட முடியும்'' என்றான் இளங்கோ.

6

இன்ஸ்பெக்டர் பால்ராஜின் முகத்தில் ஒளி வந்தது. ''என்ன சொல்கிறாய், இளங்கோ?''

''சந்திரநாத்தைப் பிடித்துவிட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது, இன்ஸ்பெக்டர்.''

''எப்படி?''

''நான் பதிலைச் சொல்வதற்குமுன் இதைப் படித்துப் பாருங்கள்''

''என்ன இது?''

''சந்திரநாத்தின் சரித்திரம் பற்றி நான் எழுத ஆரம்பித்த முதல் அத்தியாயம்.''

பால்ராஜ் அவனைக் குழப்பத்துடன் பார்த்துவிட்டு, வெளிச்சம் வரும் திசையில் நின்று அதைப் படிக்க ஆரம்பித்தார்.

***

'துருவும், அழுக்கும், சிறுநீர் நாற்றமும் நிறைந்த அந்த இரும்பு கேட்டின் மீது கால் வைத்து அவன் ஏறினான். உள்ளே குதித்தான். குதித்த இடத்திலிருந்து எழும்பியது. ஓய்வாய்ப் படுத்திருந்த ஒரு நாய் மிரண்டு குரைத்துக் கொண்டு ஓடியது. தாழ்வாக ஒரு வௌவால் பறந்து போனது.

செருப்பில்லாத கால்களில் கோரைப்புற்கள் உறுத்தின.

சிறுகற்களின் முனைகளும், முட்களின் கூரான முகங்களும் பாதங்களைக் காயப்படுத்தின. இருட்டில் பாம்போ, எதுவோ சரசரத்துப் போனது.

அவனுக்கும் எதுவும் உறைக்கவில்லை. அவன் கவனமெல்லாம் அந்தச் சுடுகாட்டின் ஒரு மூலையை நோக்கியே இருந்தது. நடந்தான். மாலையில் எரிந்த ஒரு பிணத்திலிருந்து இன்னும் அடர்த்தியான புகை, காற்றை அசுத்தம் செய்துக் கொண்டிருந்தது. காற்று 'உய்ய்ய்' என்று இருட்டில் பயமுறுத்திப் பார்த்தது. அவன் நடந்தான்.

காம்களில் உறுதி இருந்தது. சற்றே அவசரம் இருந்தது. கண்கள் இடது வலது நோக்காமல் அந்த மூலையையே குறி பிடித்துப் பார்த்திருக்க... அவன் நடந்தான்.

இதோ வந்து விட்டது. அவனுடைய சொர்க்கத்திட்டு இல்லை நரகத் திட்டு.

மண்டியிட்டு உட்கார்ந்தான். மரியாதையில்லாமல் முளைத்திருந்த புற்களைப் பிடுங்கினான். எறிந்தான். உள்ளங்கை சிராய்க்க, அந்த இடத்தைத் துடைத்துச் சுத்தம் செய்தான்.

"ஜெயஸ்ரீ" அவன் உதடுகள் முனகின. குனிந்து மண்ணில் [illegible] அந்த இடத்து பூமியை உதடுகள் வலிக்க முத்தமிட்டான்.

"ஜெயஸ்ரீ இன்றைக்கு பிப்ரவரி பதினைந்து. நினைவிருக்கிறதா இந்தக் கரிய நாளை? உன்னை என்னிடமிருந்து பிரித்த இரக்கமற்றவர்களுக்குக் கொடுத்த தண்டனையாய், நீ உன்னையே அழித்துக் கொண்ட பிப்ரவரி பதினைந்துதானே! உன் ஆசையையும், உன்னையும் விறகுக் கட்டைகளில் வைத்து இங்கே எரித்தது பிப்ரவரி பதினைந்துதானே! உன்னுடைய சாம்பல் இந்தப் பூமியில் கலந்துவிட்டது. இங்கே முளைக்கும் ஒவ்வொரு புல்லிலும் நீ பிறக்கிறாய்.... பிறப்பாய்.... பிறந்து கொண்டே இருப்பாய். உயிரோடு இருந்தபோது உன் நிழலைத் தொடுவதற்குக் கூட எனக்குத் தடை விதிக்கப்பட்டதே! இனிமேல் ஒவ்வொரு பிப்ரவரி பதினைந்தும் இங்கே வந்து பகிரங்கமாக உனக்கு முத்தமிடப் போகிறேன், என்னை யாரால் தடுக்க முடியும்?"

அவனுடைய ஜீவனில்லாத கண்களிலிருந்து விழிநீர் திரண்டு இறங்கி, அந்த மண்ணை ஈரப்படுத்தியது.

"ஜெயஸ்ரீ, அந்தஸ்தையும், செல்வாக்கையும் காரணம் காட்டி ஓர் இளம் பெண்ணை சந்தோஷமாய் வாழவிடாமல் சாகடித்த இந்தச் சமூகத்தில் இனி எந்த இளம் பெண்ணுமே சந்தோஷமாய் வாழப் போவதில்லை...... வாழ விடப் போவதில்லை நான்...."

அவனுடைய நரம்புகள் முறுக்கேறின. நகங்கள் பூமியைக் கிழித்தன. ஆவேசமாய் எழுந்தான். அவன் கண்களில் இப்போது காதல் இல்லை. சோகம் இல்லை. இழப்பு இல்லை.

இருந்ததெல்லாம் ஒரே உணர்வுதான். கொலை வெறி.

* * *

பால்ராஜ் படிப்பதை நிறுத்திவிட்டு இளங்கோவை நிமிர்ந்து பார்த்தார்.



"சுவாரசியமாய் கதை போல் எழுதியிருக்கிறாய்!"

"சுவையாய் எழுதினால்தானே படிப்பவர்கள் ரசிக்க முடியும் இன்ஸ்பெக்டர். என் எழுத்தைப் பாராட்டுவதற்காக உங்களிடம் இதை நான் கொடுக்கவில்லை. சந்திரநாத் மனநோயாளியாக மாறி இளம் பெண்களை வேட்டையாடிக் கொல்வதற்கு மூல காரணமே அவன் காதலியின் தற்கொலைதான் என்பது உங்களுக்குப் புதிய செய்தி இல்லை என்பதும் எனக்குத் தெரியும்" என்றான் இளங்கோ.

"பின்னே?"

"ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி பதினைந்து சந்திரநாத் அவனுடைய காதலி எரிக்கப்பட்ட இடத்திற்குப் போவது என்பதைத் தீர்மானமாக வைத்திருக்கிறான்."

"ஜீஸஸ்! அந்த பாயிண்ட்டையே நான் மிஸ் பண்ணி விட்டேன். இன்றைக்கு பிப்ரவரி பதினைந்து. இன்றைக்கு அவன் அங்கே...." பால்ராஜ் இளங்கோ எழுதிய அந்த காகிதங்களை மறுபடியும் பிடுங்கி வேகமாகப் படித்தார்.

"எங்கேயிருக்கிறது அந்தச் சுடுகாடு?"

"செங்கல்பட்டைத் தாண்டி, வள்ளித்தோப்பு என்ற கிராமத்தில்."

பால்ராஜ் இளங்கோவின் கைகளைப் பற்றினார். "தேங்க்யூ இளங்கோ. ஆனால் இன்றைக்குக் காலையிலேயே அவன் வந்திருந்தால் இந்நேரம் நழுவியிருப்பான்."

"ஊரே அமைதியான பிறகுதான் அவன் ஜெயஸ்ரீயைத் தேடிப் போவான்."

"இரவில் அவன் வந்தால் அவனை வரவேற்க நிச்சயம் நான் அங்கே இருப்பேன்."

"இன்ஸ்பெக்டர்....." இளங்கோ சற்றே கெஞ்சுதலாகக் குரலை இறக்கினான். "நீங்கள் பர்மிஷன் கொடுத்தால் நானும் உங்களோடு வந்திருந்து நீங்கள் சந்திரநாத்தை மடக்குவதை நேரில் பார்த்து, ஒரு பரபரப்பான ரிப்போர்ட் எழுத ஆசைப்படுகிறேன்."

"ஸாரி, இளங்கோ. நானே பெரிய போலீஸ் படையை எல்லாம் அழைத்துப் போகப் போவதில்லை. அவ்வளவு பேர் இருந்தால் அவன் உஷாராகி விடக்கூடும். அங்கே கை கலப்பு நடக்கலாம். துப்பாக்கியை நான் உபயோகப்படுத்த வேண்டி வரலாம். சட்ட திட்டங்களுக்கு மாறாகக்கூடச் செயல்பட்டு அவனைப் பிடிக்க முயற்சி செய்யலாம். ஒரு நிராயுதபாணியான ரிப்போர்ட்டர் அங்கே இருந்தால்

அவனுக்கு ஆபத்து. வேண்டுமானால் சந்திரநாத்... பிடித்ததும், முதல் பேட்டி உனக்குத் தருகிறேன்.''

இளங்கோவின் முகத்தில் மெலிதான ஏமாற்றம். ''இன்ஸ்பெக்டர்....'' என்றான்.

''ஒரு விபத்து கேஸில் அடிபட்ட கோபி என்ற ஆளை பார்க்க நீங்கள் ஆஸ்பத்திரிக்கு வந்ததாகச் சொன்னார்களே. அவனுக்கும், சந்திரநாத்துக்கும்....?''

''இன்னும் எதுவும் முடிவாகவில்லை'' பால்ரா... கவனமாய்ப் பதிலைச் சொன்னார். ''வீவில் மீட் எகெய்ன்'' என... இளங்கோவைக் கத்தரித்தார். அறைக்குள் நுழைந்தார்.

கோபி மீண்டும் மயக்கமாகியிருந்தான். சப்-இன்ஸ்பெக்... மோகனை பால்ராஜ் அருகே அழைத்தார்.

''இவன் வீட்டிற்குத் தகவல் சொல்லியாகி விட்டதா?''

''ஹாஸ்டலில் தங்கிப் படிக்கிறான் சார்... ஊரில் இருக்கு... அவன் அப்பாவிற்குக் கடிதம் எழுதியிருக்கிறோம்.''

''கூடவே இருங்கள், இவன் கொடுக்கும் எல்லா... விவரங்களையும் குறித்துக் கொள்ளுங்கள்,'' என்றார் பால்ரா... விலகிக் கிளம்பிக் கொண்டே.

***

அந்தப் பெரியவர் இரண்டு கைகளிலும் கறிகாய்கள் நிரம்பிய பாரமான பைகளை வைத்திருந்தார். மூக்கு... கண்ணாடி வழியே இருட்டில் இருபுறமும் பார்த்தார்.

எந்த வெளிச்சமும் இல்லை.

தைரியமானார். இருநூறு மீட்டர் தள்ளி இருக்கும் ரயில்வே கேட் வரை நடந்து செல்ல உடம்பில் தெம்பில்லை.

ரயில் வராத நேரம் பார்த்து இந்தக் குறுக்கு வழியில் கடந்து விட்டால், சரிவில் இறங்கி வீட்டிற்குப் போகும் பாதையைப் பிடித்து விடலாம்.

சரளைக் கற்களின் மீது ரப்பர் செருப்பைப் பதிய வைத்து கவனமாக ஏறினார். தண்டவாளத்தைத் தாண்டினார். அடுத்த தண்டவாளத்தைத் தாண்டுமுன் தூரத்தில் ஒரு வெளிச்சப் புள்ளி, திருப்பத்தில் தெரிந்தது. பதட்டமானார். தண்டவாளத்தை விரைந்து தாண்டினார். யாரோ அவர் காலைப் பிடித்து இழுத்தார்கள். அப்படியே குப்புறடித்து விழுந்தார். கையிலிருந்த பைகள் விடுபட்டன. பார்த்துப் பார்த்து பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில் பொறுக்கியெடுத்து வாங்கிய வெண்டைக்காயும், கத்தரிக்காயும், நூல்கோலும், முட்டைகோஸும் சரிவில் உருண்டோடின. பெரியவர் உச்...



பயம் உச்சிமண்டையைத் தாக்க திமிறினார். கால் விடுபட்டது. யார் என்னைப் பிடித்து இழுத்தது?

தடுமாறி எழுந்து பார்த்தபோது, ரயிலின் வெள்ள வெளிச்சத்தில் அவர் தெரிந்தார்.

தண்டவாளங்களின் குறுக்கே, கிடத்தப்பட்டு, குளிர் மேகங்களை உயிரற்ற விழிகளால் வெறித்துக் கொண்டு...

ரயிலின் கூக்குரலை விடவும் கூடுதலான ஒலியுடன் பெரியவர் அலறினார். மயங்கிச் சரிந்தார்.

***

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் ஜீப்பை ஓரமாக நிறுத்தச் சொன்னார். இருட்டில் இறங்கினார். போலீஸ் உடுப்புகள் இல்லை. கட்டம் போட்ட லுங்கி, இடுப்பில் பட்டையான பெல்ட். பெல்ட்டில் ரிவால்வர். மேலே தொளதொளவென்று கதர்ச் சட்டை, தலையில் ஒரு முண்டாசு.

இரண்டு கான்ஸ்டபிள்கள் இறங்கினார்கள். அவர்களுக்கும் லுங்கி, பனியன், இடுப்பில் பெல்ட்.

''எல்லாம் நினைவிருக்கிறதா?''

''ம்'' என்றார் ஒரு கான்ஸ்டபிள்.

''நான்தான் முதலில் பாய்வேன். எனக்கு ஆபத்து என்று வந்தால்தான் நீங்கள் குறுக்கிட வேண்டும்.''

''சரி சார்.''

மூவரும் பிரிந்தனர். இருட்டில் நடந்தனர்.

முள்ளும் கள்ளியும் நிறைந்த புதர்களைத் தாண்டி சுடுகாட்டின் எல்லை தெரிந்தது. சிதிலமடைந்த சுவர்கள். துருவேறிய கேட். அங்கங்கே மனிதத் தத்துவமாகச் சாம்பல் குவியல்கள். இரவுப் பூக்கள். வேங்கை மரம், புளிய மரம். இருட்டில் விழிகள் மின்னும் நாய்கள்.

பால்ராஜ் அந்த வேப்ப மரத்தின் பின்னே மறைந்தார்.

வரப் போகிறானா, இல்லை வந்துவிட்டுப் போய் விட்டானா?

தெரியவில்லை.

காற்று குளிரைச் சுமந்து வீசியது. சாம்பலைச் சுழற்றியடித்தது.

தனிமையில், இருட்டில் சந்திரநாத்துக்காக அவர் காத்திருந்தார்.

***

முகத்தை மூடியிருந்த வெள்ளைத் துணி நீக்கப்பட்டது. 'ஹக்' என்று திடுக்கிடலோடு பின் நகர்ந்தான் மாபாவின்

அண்ணன். அவன் உதடுகள் உலர்ந்து விட்டன. பேச்
துக்கம் தொண்டையில் சிக்கிக் கொண்டன.

"மா...யா.... தான் என் தங்கை மாயாதான். அவளை
அவள்.... எப்படித் தாம்பரமருகில் ரயில் பாதையில்....."

சப்-இன்ஸ்பெக்டர் மோகன் அவன் தோளில் த
மார்ச்சுவரியை விட்டு வெளியே அழைத்து வந்தார்.

"ரயிலில் விழுந்து சாகவில்லை உங்கள் தங்கை. நேற்
இறந்திருக்கிறாள்"

"ஐயோ எப்படியெல்லாம் வளர்த்தேன்! இப்ப
ஒன்றுக்கும் உதவாதவளாக அனாதை மாதிரி செத்து
கிடப்பதற்காகவா இவளைக் கண்ணுக்குள் வைத்
வளர்த்தேன்!"

"தாம்பரத்தில் அவளுக்கு யாராவது நண்பர்கள், தோழி
உண்டா?"

"கிடையாது..."

"இன்ஸ்பெக்டர்!" டாக்டரின் குரல் கூப்பிட்டது.

"ஐ'ம் சப்-இன்ஸ்பெக்டர்......" என்று திருத்திவிட்
மோகன் 'ஒன் மினிட்' என்று மாயாவின் அண்ணனிடமிருந்
விலகி டாக்டரின் பின்னே நடந்தார்.

"இந்தப் பெண் நேற்றிரவு கொல்லப்பட்டிருக்கிறா
கழுத்தில் இரும்புக் கம்பி போட்டு நெரித்த அடையாள
இருக்கிறது!"

"மை குட்னஸ்!"

"அதைவிட ஆச்சரியமான விஷயம் இரண்டு நாட்களுக்கு
முன் சந்தியா என்ற பெண்ணும் இதே முறையி
சாகடிக்கப்பட்டிருக்கிறாள். கடத்திப் போனவன் ரேப் செய்
முயற்சிகூடச் செய்ததாகத் தெரியவில்லை. ஆனால் பயங்
சாடிஸ்ட், கொடூரமான மனப்பான்மை உள்ளவன். அவள
சாகடிப்பதற்கு முன் ஏகச் சித்திரவதை செய்திருக்கிறா
உடம்பில் நிறையச் சூடு போடப்பட்டிருந்தது. நகங்க
வளைத்துப் பெயர்க்கப்பட்டிருந்தன.

"கொடுமை!" மோகன் உடல் சிலிர்த்தது.

"சந்தியாவின் கேஸைக் கவனித்துக் கொண்டிருக்கும்
இன்ஸ்பெக்டர் பால்ராஜ் நிச்சயம் இந்தக் கேஸ் பற்றியு
தெரிந்து கொள்ள விரும்புவார்."

"ஆனால் இந்த நிமிடம் அவரைக் கூப்பிட முடியாது
டாக்டர்."

"ஏன்?"



"அவர் செங்கல்பட்டிற்கு ஏதோ காரியமாகப் போயிருப்பதாகத் தகவல்."

***

இன்ஸ்பெக்டர் பால்ராஜ், தன் கால் விரல்களுக்கு நடுவில் நெளிந்த மரவட்டையை சகித்துக் கொண்டார். ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்து நெஞ்சு நிறைய வெதுவெதுப்பான புகையை நிரப்பிக் கொள்ள வேண்டும் என்று எழுந்த பேரார்வத்தை அடக்கிக் கொண்டார்.

க்ரீச்ச.

சின்ன ஒலிக் குறிப்புதான். ஆனால் எதிர்பார்த்து எதிர்பார்த்துக் காத்திருந்த பால்ராஜின் காதுகளில் அந்த ஒலி உடனே பதிந்தது. முகத்தை சற்றே நகர்த்தி ஒற்றைக் கண்ணை மட்டும் மரத்திற்கு வெளியே நீட்டிப் பார்த்தார்.

சுடுகாட்டின் கேட்டைத் தாண்டி அவன் உள்ளே குதித்திருந்தான். இருட்டும், மிகச் சொற்பமான நட்சத்திர வெளிச்சமும் மட்டுமே இருந்த சூழலில் அவன் முகம் சரியாகப் புலப்படவில்லை. ஆனால் நடையின் வேகத்தில் தோள்களின் அசைவில் அடையாளம் புரிந்தது.

சந்திரநாத்தான்.

பால்ராஜின் ரத்தம் வேகம் பிடித்தது.

சந்திரநாத்தின் தோளில் ஒரு நீளமான பை தொங்கியது. காதலியின் நினைவிடத்திற்கு மாலை வாங்கி வருகிறானா என்ன?

பால்ராஜ் டார்ச்சை எடுத்துக் கொண்டார். பெல்ட்டை தளர்த்தி, ரிவால்வரில் கை வைத்தார்.

சந்திரநாத் பரபரப்பில்லாமல் நடந்து வந்தான்.

சுடுகாட்டின் அந்த மூலையில் மண்டியிட்டு உட்கார்ந்தான். கீழேயிருந்த குப்பையை அகற்றினான்.

பால்ராஜ் மறைவிடத்திலிருந்து ரிவால்வரோடு வெளிப்பட்டார்.

"கைகளைத் தூக்கு" என்றார்.

சந்திரநாத் சரேலெனத் திரும்பினான். புன்னகைத்தான்.

"கைகளைத் தூக்க வேண்டியது நீங்களா, நானா, இன்ஸ்பெக்டர்?" என்றான்.

அவன் கையில் அடக்கமான ஓர் இயந்திரத் துப்பாக்கி.

# 7

பால்ராஜ் விரைத்தார்.

சந்திரநாத்தைப் பற்றி அவருக்குத் தெரியும். இரக்
மாதவன்! மனநலம் குன்றியவன்! தனக்கு ஆபத்து
நினைத்து அவன் செயல்பட்டு விட்டால்? பால்ராஜ்
அவருடைய வேகத்தின்மீது நம்பிக்கை இருந்தது
நேரத்திற்குள் தோட்டாவைச் சந்திரநாத்தின் உடலுக்
அனுப்ப முடியும். ஆனால் உயிர் பிரிவதற்குள் அ
இயந்திரத் துப்பாக்கியைப் பிரயோகித்து விட்டால்?
உடல் சல்லடையாகி விடும்!

''உங்களுடன் இன்னும் இரண்டு கோமாளிக
அழைத்து வந்திருந்தீர்களே. என்னை மடக்க வந்த அவ
இரண்டு பேரும் இப்போது சாம்பலில் புர
கொண்டிருப்பார்கள்.'' சந்திரநாத்தின் புன்ன
கோணலானது. ''ஒற்றை அடியில் போக போகச் ச
விழுந்து விட்டார்கள்! மாறு வேஷத்தில் வந்தால் கண்டுபிடி
முடியாது என்று நினைத்தீர்களா?''

''சந்திரநாத்! நீ தப்பிக்க முடியும் என்று நினைக்காதே''

''என்னை நீங்கள் உயிருடன் பிடிக்க விரும்பினா
துப்பாக்கியை கீழே போட்டு விடுங்கள் இன்ஸ்பெக்
இரண்டு பேரும் இங்கேயே செத்து மடிவோம் என்ற
சுடுங்கள் தைரியமாக......''

பால்ராஜின் கையிலிருந்த ரிவால்வர் நழுவியது.

சந்திரநாத் அவரைப் பின்னால் நகரச் சொன்னா
ரிவால்வரைக் கீழேயிருந்து எடுத்துத் தன் தோள் பை
போட்டுக் கொண்டான்.

''பெண்களுக்கு மட்டும்தான் இன்ஸ்பெக்டர் இரும்பு
கம்பி. மற்றபடி என்னைத் தொலைத்துவி
நினைப்பவர்களுக்காக இந்த மெஷின் கன்.''

''அந்தத் துப்பாக்கி ஆபத்தானது என்று உனக்கு
தெரியுமா?''

''துப்பாக்கியை எப்படிக் கையாள வேண்டும் என்
கற்றிருக்கிறேன், இன்ஸ்பெக்டர். ஆனால் உங்களைச் சுட
போவதில்லை.''

''ஜெயஸ்ரீக்கு நீ செய்வது பிடிக்கும் என்று நினைக்கிறாயா
சந்திரநாத்?'' ஜெயஸ்ரீ என்ற பெயரை உச்சரித்தாலே



சந்திரநாத்தின் போக்கில் ஒரு மாறுதல் இருக்கும் என்று
இன்னும் சொன்னதை பால்ராஜ் நினைவில் வைத்திருந்தார்.

''ஜெயஸ்ரீ எனக்குப் பிடித்ததை செய்யவில்லை இன்ஸ்பெக்டர்'' சந்திரநாத்தின் குரல் கரகரப்பானது. உதடுகள் நடுங்கின. கண்ணோரம் தனியே துடித்தது. ''உங்களுடன் வீணாக நேரமில்லை. கீழே குப்புறப் படுங்கள்.''

பால்ராஜ் படுத்தார்.

''கைகளை உயரத் தூக்கிக் கோர்த்துக் கொள்ளுங்கள்.''

கோர்த்தார்.

சரசரவென்று சப்தம் கேட்டது. சருகு மிதிபடும் சப்தம். பளிச்சென்று புரண்டு திரும்பினார். அதற்குள் சந்திரநாத் இருட்டில் கலந்திருந்தான்.

ஜீப் புறப்படும் ஒலி உறுமலாகக் கேட்டது.

ஓடினார். போலீஸ் ஜீப்பின் டிரைவர் கீழே கிடந்தான். கைகள் பின்புறம் கட்டப்பட்டு.

அவரை அவசரமாகப் பிரித்தார்.

''என்ன ஆயிற்று உனக்கு?''

''மிக திடீரென்று பின்புறமிருந்து தாக்கப்பட்டேன், சார்.''

''தாக்கியவனைப் பார்த்தாயா?''

''இல்லை. அவன் மிக வேகமாக செயல்பட்டான். இந்தத் தாக்குதல் முறைகளில் மிகவும் பயிற்சி பெற்றவன் போல இருந்தது அவன் வேகம்.''

பால்ராஜ் அவன் கட்டுக்களை அவிழ்த்தார்.

''நம் இரண்டு நண்பர்கள் எங்கே கிடக்கிறார்கள். கண்டுபிடி......'' என்றார் குரலில் தோல்வி குமுற.

***

சந்திரநாத் கைகளில் முகம் புதைத்திருந்தான். முதுகு விம்மிக் கொண்டிருந்தது. விரல்களை நீக்கியபோது, அவன் விழிகள் மிகவும் சிவந்திருந்தன.

''ஜெயஸ்ரீ!'' என்றான் குரல் கம்ம.

எதிர் போட்டோவில் இருந்த ஜெயஸ்ரீ புன்னகையோடு மௌனம் சாதித்தாள்.

''என்னை மன்னித்துவிடு ஜெயஸ்ரீ. உன் நினைவிடத்தில் என்னால் இன்று நிம்மதியாகச் சற்று நேரம் கண்ணீர் விடக்கூட முடியவில்லை. போலீஸ் என்னைத் துரத்துகிறது. எத்தனை நாள் இப்படி என்னால் மறைந்து வாழ முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. நம்மைப் பிரித்த உன் அப்பா வெளிநாடு

போயிருக்கிறாராம். அவர் திரும்பி வர வேண்டும். இ விரல்களால் அவருக்குக் கடைசித் தண்டனையை கொடுக்க வேண்டும்... அதுவரை நான் சுதந்திரமாக இ விரும்புகிறேன் ஜெயஸ்ரீ. அதற்காகத்தான் இந்த போராட்டமெல்லாம்..."

மேஜை மீதிருந்த இயந்திரத் துப்பாக்கியை இன்ஸ்பெக்டரின் ரிவால்வரையும் எடுத்து அலமாரி வைத்தான். பார்வை அந்தக் காகிதத்தில் விழுந்தது.

எனது அடுத்த பலி?

***

நிழல் நீளமாக மேஜையில் ஏறியது.

கமிஷனர் நிமிர்ந்து பார்த்தார்.

"உட்காருங்கள் பால்ராஜ்" என்றார்.

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் கூசிக் குறுகி உட்கார்ந்தார்.

கமிஷனர் மேஜைக் கண்ணாடியில் ஒரு பழுப்பு காகிதத்தை பால்ராஜின் புறம் நகர்த்தினார்.

"மாயாவின் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட். சந்தியாவை போலவே இவளுடைய கழுத்திலும் கம்பி போட் இறுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது கொலை..... வாரத்திற்குள்ளாகவே."

"சந்திரநாத்தை எப்படியும் பிடித்து விடுவேன் என நம்பிக்கையுடன்தான் சார் நான் போனேன். ஆனால்....."

"ஆனால் அவன் தப்பி விட்டான்!"

"அவனிடம் இயந்திரத் துப்பாக்கி இருக்கும் என்று நா சற்றும் எதிர்பார்க்கவில்லை சார்."

"அவனிடம் ஏது துப்பாக்கி?" கமிஷனரின் புருவங்க சுருங்கின.

"அவனைப் பற்றி முற்றிலும் விசாரித்து விட்டேன் சா அவன் ஒரு சாதாரண இன்ஜினியராகத்தான் கம்பெனியி வேலை பார்த்திருக்கிறான். ஜெயஸ்ரீ என்ற பெண்ணை காதலித்து, அந்தக் காதலி தற்கொலை செய்து கொண்டது இளம் பெண்களைத் தனிமைப்படுத்திக் கொலை செய்ய துவங்கினான். எந்த சந்தர்ப்பத்திலும் அவன் மெஷின் கன்னை உபயோகித்திருக்க வாய்ப்பே இல்லை. ஆனால் அவ துப்பாக்கி பிடித்திருந்த விதம் மிகச் சரியாக இருந்தது. அதை பயன்படுத்தப் பயிற்சி பெற்றிருப்பதாகக்கூட அவன் சொன்னான்."

"என்னது?"



"அவனோடு ஜெயிலில் இருந்தவர்கள் யாராவது இந்த விவகாரங்களில் அத்துபடியாயிருக்கலாம் என்று னைக்கிறேன். அவன் வெளியே வந்ததும் அவனுக்கு உதவி ம்பும் ஆட்களை அவர்கள் சிபாரிசு செய்திருக்கலாம்."

"வாய்ப்பிருக்கிறது."

"சிறைச்சாலையில் அவனோடு பழகியவர்கள் ஒவ்வொருத்தரின் பின்னணியையும் ஆராய்ந்து கொண்டிருக்கிறேன் சார். ஆனால் சில கேள்விகள் என்னைக் குடைகின்றன."

"என்ன?"

"கழுத்தில் கம்பியைப் போட்டுக் கொலை செய்வது மட்டும்தான் முதல் நான்கு கொலைகளிலும் சந்திரநாத்தின் வழக்கமாய் இருந்திருக்கிறது. ஆனால் சந்தியாவும், மாயாவும் சாவதற்கு முன் மிகவும் துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள். அது ஏன்?"

"சந்திரநாத் மனநோயாளி. அவனைச் சிறையில் அடைத்து, கோர்ட்டில் கேள்விகள் கேட்டு, டாக்டர்கள் கண்காணிப்பில் வைத்து இருந்ததெல்லாம் அவன் கோபத்தைக் கூட்டியிருக்கலாம். அந்தக் கோபத்தைக் கொலை செய்யும் பெண்களிடத்தில் காட்டுகிறானோ என்னவோ!"

"அவனிடம் பணம் இல்லை. பெரிய செல்வாக்கு இல்லை. அவன் காதல் தோல்விக்கே அதுதான் காரணம். அப்படியிருக்கையில் அவன் வெளியே வந்தபின் மெஷின் கன் போன்ற விலையுயர்ந்த ஆயுதங்களை வாங்கி வைத்திருக்க ஏது பணம்? மாருதி வேன் எங்கேயிருந்து கிடைத்தது அவனுக்கு?"

"யார் அவனுக்கு உதவி செய்கிறார்கள் என்று கண்டுபிடிக்க வேண்டும் பால்ராஜ்."

"இரண்டாவதாக இறந்துபோன மாயாவை அவன் எதேச்சையாகக் கொலை செய்யவில்லை என்றுகூட எனக்கொரு சந்தேகம் இருக்கிறது சார்."

"ஏன்?"

"சந்தியாவைப் பற்றி டான்ஸ் ஸ்கூல் அருகே விசாரித்தபோது டெலிபோன் எக்ஸ்சேன்ஜ் அருகில் நின்றிருந்த மாருதிவேன் நோக்கிச் சந்தியா போனாள் என்று தகவல் தந்ததே இந்த மாயாதான் சார். என்னையும் சந்திரநாத் க்ளோஸாக கவனித்துக் கொண்டு வருகிறானோ என்று எனக்கு சந்தேகம். சுடுகாட்டிலிருந்து அவன் தப்பித்தபோது.

ஒயர்லெஸில் அவனைப் பற்றி நான் தகவல் தந்துவிடக் கூடா… என்று போலீஸ் ஜீப்பையே கடத்திப் போய் பத்து கிலோமீட்… தள்ளி நிறுத்திவிட்டுப் போய்விட்டான்."

"அவனை ஜீரோவாக்குகிறீர்கள், பால்ராஜ்."

சொட்டேர் என்று செருப்பு நுனியால் தொட்டது போல்… இருந்தது பால்ராஜிற்கு. சந்திரநாதனைப் பற்றி இளங்கோவி… அவர் அடித்த அதே கமெண்ட் இப்போது அவ… முகத்திலேயே மறுபடி அடிக்கப்படுகிறது.

"சந்தியாவைக் கல்யாணம் செய்துகொள்ள இருந்த… தேவகுமார், மாயாவின் அண்ணன் இரண்டுபேரும் என்னை… பார்க்க வந்திருந்தார்கள், பால்ராஜ்." கமிஷனர்… உள்ளங்கை ரேகைகளை ஆராய்ந்து கொண்டே பேசினார்.

"கோபி என்பவனையும் சற்றும் இரக்கமில்லாம… அடித்துப் போட்டுவிட்டுப் போயிருக்கிறான் சந்திரநாத்."

இன்னும் எத்தனை நாள் ஆகும் அவனை பிடிக்க என்று… நேரடியாக குத்தாமல் கமிஷனர் வார்த்தைகளில் விளையாடுவதை பால்ராஜால் உணர முடிந்தது.

பால்ராஜ் பதில் சொல்லுமுன், கமிஷனர் மேஜை மீதிருந்த டெலிபோன் அபஸ்வரமாகக் கூப்பிட்டது.

ரிசீவரை எடுத்துப் பேசிய கமிஷனரின் முகம் இறுகியது.

"பால்ராஜ்..... இன்னும் ஒரு கெட்ட சேதி. உங்க ஏரியாவில் இன்னும் ஒரு கொலை" என்றார்.

***

கொண்டை விளக்கு சுழன்று சுழன்று வெளிச்ச விளையாட்டுக் காட்டியது. சைரன் கூய்.... கூய்... கூய்... என்று ஒலித்தது ஜீப் வந்து பிரேக் அடித்ததும், கூட்டம் கலைந்து விலகியது.

பால்ராஜ் இறங்கினார். லத்தியை உள்ளங்கையில் தட்டிக் கொண்டு அந்தக் கட்டிடத்தை ஆராய்ந்தார். பிளாஸ்டிக் எழுத்துக்கள், பின்னணி ட்யூப் வெளிச்சத்தில் பிரகாசமாய்த் தெரிந்தன.

## BHARATHI TOURS AND TRAVELS

கறுப்புக் கண்ணாடிகள் கொண்ட முகப்பு. உடைக்கப்பட்ட பூட்டு. லத்தியால் கதவைத் தள்ளித் திறந்தார். ஏ.ஸி.யின் வாசம் மிச்சம் இருந்தது. சிகப்பு சனல் கார்ப்பெட். நான்கு பாலிமர் நாற்காலிகள். சிறிய மேஜை. அதன் ஓர் ஓரத்தில் டெலிபோன். ஆனால் ரிசீவர் விடுபட்டிருந்தது. மேஜையிலிருந்து கீழே தொங்கியது.





மேஜையின் கண்ணாடிப் பரப்பில் ரத்த ரேகைகள். அங்கங்கே ரத்தக் கறைகள். அன்றாடம் பார்த்துப் பழகிவிட்ட காட்சியாய் இருந்த போதிலும் அடிவயிற்றில் பட்டாம்பூச்சி பறந்தது. பார்க்கவிருந்த காட்சியைப் பார்க்க விருப்பமில்லாதவராய்க் குனிந்தார்.

மீண்டும் ரத்தம். கார்ப்பெட்டில் குப்புறக் கிடந்தவரின் கடைசி முயற்சி ரிசீவரில் சிகப்பாய்ப் படிந்திருந்தது.

பால்ராஜ் மண்டியிட்டு உட்கார்ந்தார்.

நாற்பத்தி ஐந்து வயதிருக்கலாம். பெரிய கன்னம். சிக்கனமான நரைமுடி. உதிர்ந்து தளர்ந்திருந்த மூக்குக் கண்ணாடி. நீளமான மூக்கு.

"அவர் பெயர் பரதன் சார்" என்றார் ஒரு கான்ஸ்டபிள்.

பால்ராஜ் நிமிர்ந்தார். கான்ஸ்டபிளின் அருகில் நின்றிருந்தவன் மிக இளைஞனாயிருந்தான். அதிகபட்சம் இருபத்தியிரண்டு வயது. ஐந்தடி உயரம். கண்கள் அதிர்ச்சியில் விரிந்திருந்தன. அவன் நின்றிருந்த கோணத்தில் கீழே கிடந்தவரை அவனால் பார்க்க முடியாது. பார்த்தால் இன்னும் பெரிதாக விரிந்திருக்கும்.

"என் பெயர் பரத். அவருடைய ஒரே மகன்" என்றான்.

அவனை தனியே நகர்த்திப் போனார் பால்ராஜ்.

"யார் முதலில் பார்த்தது?"

"ஸ்டேஷனுக்குப் போன் வந்தது சார்" என்றார் கான்ஸ்டபிள். "பாரதி டிராவல்ஸ்.... கொலை.... இந்த இரண்டு வார்த்தைகளை மட்டும் எப்படியோ உச்சரித்துவிட்டு இவர் செத்துப் போயிருக்கிறார். பாரதி டிராவல்ஸ் எங்கே இருக்கிறது என்று லொகேட் செய்து நாங்கள் வந்தபோது, கண்ணாடிக் கதவு வெளியே பூட்டியிருந்தது. கடை மூடப்பட்டது என்று போர்டு உள்புறம் தொங்கியது. பூட்டை உடைத்துத் திறந்தோம்."

"அப்பா ஒரு மணி நேரத்திற்கு முன்னால் எனக்குப் போன் பண்ணினார். பதினேழாயிரம் ரூபாய் சேர்ந்துவிட்டது. இங்கே இருந்தால் பாதுகாப்பு இல்லை. வீட்டிற்கு எடுத்துப் போய்விடு என்றார். நான் வருவதற்குள்...."

பதினேழாயிரம் ரூபாய்!


பால்ராஜ் மேஜையை கவனித்தார். இழுப்பறை தொங்கியது. சில்லறைக் காசுகள் சிதறியிருந்தன. பணம் எதுவும் இல்லை.

பையனை வெளியே போகச் சொல்லிவிட்டு பரதனை

மெல்லப் புரட்டினார். வலது வயிற்றில் பதிந்திருந்த கத்தி தென்பட்டது. அதே சமயம் அவருடைய முகவாய்க்கு அடிப்புறம் வட்டமாக இருந்த நெருப்புக் காயமும் தென்பட்டது. புதிய காயம். சிகரெட்டால் போட்ட சூடு. கன்னத்தில் ஒரு கத்திக் கோடு. பால்ராஜ் பரபரப்பாகப் பரதனின் கைவிரல்களைப் பார்த்தார். அங்கேயும் சூடுபட்ட அடையாளங்கள்.

சித்ரவதை செய்யப்பட்டிருக்கிறார்.

பரதனின் மார்புக்குக் கீழே ரத்தக் கறையுடன் அந்தக் காகிதம் எடுத்தார். கிறுக்கலாய், வலியின் வேதனையுடன் எழுதப்பட்டிருந்த மூன்று பெயர்கள் தெரிந்தன.




## 8

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் அந்த ரத்தம் தோய்ந்த காகிதத்தை மறுபடியும் வெளிச்சத்தில் படித்தார்.

சந்தியா

மாயா

அனுசூயா

மூச்சுப் பிரிந்த கடைசி விநாடிகளில் பரதன் எழுதியிருக்க வேண்டும். அவர் இறந்து விட்டார் என்று கொலைகாரன் நினைத்துப் புறப்பட்டுப் போனபின், மிச்சமிருந்த உயிர் ரேகைகளில் அவர் நகர்ந்து வந்து போலீஸுக்குப் போன் செய்து, இந்தப் பெயர்களை எழுதி...... பால்ராஜ் பரதனுக்காகப் பரிதாபப்பட்டார்.

கதவிடுக்கு வெளிச்சம் போலக் கிடைத்த நூலிழையான விவரங்கள் அவரை மிகவும் குழப்பின. சந்தியா, மாயா, அனுசூயா!

சந்தியா—தெரியும். மாயா—தெரியும். யார் இது-அனுசூயா? இந்த மூன்று பெயர்களைப் பரதன் எழுத வேண்டிய அவசியம்



என்ன? ராட்சஸ குடை ராட்டினத்தில் சுற்றுவது போல் எந்தக் காட்சியும் தெளிவில்லாத ஒரு நிலை.

பால்ராஜ் வெளியே மெல்ல வந்தார்.

இறந்துபோன பரதனின் மகன் பரத் வெளியே அழுது கொண்டிருந்தான். அவனை அவர் தாண்டியபோது மாருதி ஜிப்ஸி ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து தடயவியல் நிபுணர்கள் இறங்கினார்கள். பால்ராஜிற்கு வணக்கங்கள் பரிமாறப்பட்டன.

''கொலை நடந்து ரொம்ப நேரம் ஆகவில்லை. எனக்கு இந்த டிராயிங் ரூமின் கதவு, மேஜை, சுவர்கள், கத்தியின் கைப்பிடி – அத்தனையிலிருந்தும் கைரேகைகள் வேண்டும். மிகக் கவனமாக வேறு தடயம் ஏதும் கிடைக்கிறதா என்றும் முயற்சி செய்யுங்கள்.''

''யெஸ் சார்.''

***

வெள்ளை கோட் அணிந்த டாக்டர் கைகளை நாப்கினில் துடைத்துக் கொண்டே பேசினார்.

''மிகவும் வலுவான எதிரி. முதலில் அவரைத் தாக்கியிருக்கிறான். நாற்காலியோடு கீழே தள்ளியிருக்கிறான். பின்னங்கழுத்து எலும்பு முறிந்திருக்கிறது. உடம்பில் அங்கங்கே நெருப்புக் காயம். அவரிடமிருந்து ஏதோ உண்மையை வரவழைக்கச் சித்திரவதை செய்திருக்கக் கூடும். சந்தியா, மாயாவைப் போல......''

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் சிகரெட் புகையை ஜன்னலிருந்த பக்கம் ஊதினார். ''இல்லை டாக்டர், மேஜை டிராயரிலிருந்து பதினேழாயிரம் ரூபாய் திருடப்பட்டிருக்கிறது. சந்தியாவிடமிருந்தோ, மாயாவிடமிருந்தோ பணம் எதுவும் காணாமல் போகவில்லை. அதனால்....''

''ஆனால் சித்திரவதையின் முறை அதேபோல் இருக்கிறது. நெருப்புக் காயங்கள்.... நகத்தில் ஊசி.....''

''சந்தியாவும், மாயாவும் கழுத்தில் கம்பி போட்டு இறுக்கப்பட்டு இறந்தார்கள். ஆனால் பரதனின் வயிற்றில் கத்தி குத்தப்பட்டிருக்கிறது.''

''சந்திரநாத் பெண்களுக்கு ஓர் ஆயுதம், ஆண்களுக்கு ஓர் ஆயுதம் என்று வைத்திருக்கிறானோ என்னவோ!''

''உண்மைதான். அவனிடம் மெஷின் கன்கூட இருந்தது'' என்றார் பால்ராஜ். ''ஆனால் பரதனிடம் அவனுக்கு என்ன உண்மை தெரிய வேண்டியிருந்திருக்கும்?''

"சந்தியா, மாயா, அனுசுயா மூன்று பெயர்களிலும் ஓர் ஒற்றுமையைக் கவனித்தீர்களா, பால்ராஜ்?"

"மூன்று பெயர்களும் 'யா' என்ற எழுத்தில் முடிகின்றன."

"சந்திரநாத் முதல் கொலை செய்த நான்கு பெண்களின் பெயர்கள் 'யா'வில் முடிந்தன?"

"இல்லை."

"சந்தியா, மாயா – அடுத்தது அனுசுயா என்று போலீஸிற்கு முன்னெச்சரிக்கை கொடுக்க அந்தப் பெயர்கள் எழுதப்பட்டிருக்கலாமோ!"

"இந்த மூன்று பெயர்களுக்கும், பரதனுக்கும் என்ன தொடர்பு?" பால்ராஜ் சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் கசக்கினார். "சந்திரநாத் தனிமையாக மடக்கக்கூடிய பெண்கள் என்று தேர்ந்தெடுத்துக் கொலைகள் செய்திருக்கிறானே தவிர, இன்ன பெயர் உடையவர்களாக இருக்க வேண்டும் என்று தேர்ந்தெடுத்ததாகத் தெரியவில்லை. யார் அது அனுசுயா?"

**"அனுசுயா கவனிக்கவும்!**

**உங்கள் தோழிகள் சந்தியாவும், மாயாவும் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுவிட்ட நிலையில், அடுத்த குறி உங்களுக்குத்தான் என்று போலீஸிற்கு சந்தேகம். இந்த போட்டோக்களில் இருக்கும் மாயா, சந்தியாவை உங்களுக்குப் பழக்கமுண்டு எனில் உடனே தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கமிஷனர் ஆஃப் போலீஸ், எழும்பூர், சென்னை."**

குரல் விட்டு உரக்கப் படித்த கமிஷனர் அந்தக் காகிதத்தை மேஜை மீது போட்டார்.

"இதை விளம்பரமாகச் செய்தித் தாள்களில் போடலாம் என்கிறீர்களா, பால்ராஜ்?"

"ஆமாம் சார். அடுத்தது அனுசுயா என்று தெரிகிறபோது, அது எந்த அனுசுயா என்று நாம் குழம்பிக் கொண்டிருக்கும் நேரத்தில் சந்திரநாத் தாக்கிவிட்டால், அந்த அனுசுயாவைக் காப்பாற்ற முடியாமலேயே போய் விடலாம்."

"இல்லை பால்ராஜ். செய்தித் தாளில் போட்டு அனுசுயா யார் என்று கண்டுபிடிப்பது சுலபம் என்பதை ஏற்றுக் கொண்டாலும், இந்த விளம்பரத்தால், சமூகத்தில் அநாவசியமான பீதி கிளம்பும் என்று நினைக்கிறேன். எந்தவித விளம்பரமும் இல்லாமல் பரதன் குறிப்பிட்டிருக்கும் அனுசுயா யார் என்று நாம் கண்டுபிடித்துப் பாதுகாப்புக் கொடுப்பதுதான் புத்திசாலித்தனம்."



பால்ராஜின் முகம் சுருங்கிப் போனது. கமிஷனர் சொல்வதில்தான் நியாயம் இருக்கிறது என்று அவருக்குப் புரிந்தது.

"நாளைக்கு ஒரு நாள் இந்தக் கேஸிலிருந்து நீங்கள் விடுபட வேண்டும் பால்ராஜ்."

"ஏன் சார்?" பால்ராஜ் திகைப்புடன் கேட்டார்.

"அமெரிக்க அரசாங்கத்திலிருந்து ஒரு பெரிய அதிகாரி சென்னை வருகிறார். மாகாபலிபுரத்தை இன்னும் சிறப்பான சுற்றுலா மையமாக்க அவருடைய கருத்துக்களைக் கோரியிருக்கிறது நமது அரசாங்கம். தீவிரவாதிகள் திடீர் திடீரெனத் தாக்குதல்கள் நடத்துவது உங்களுக்கும் தெரியும். அந்த அதிகாரி நாளை இரவு தில்லை போகும் விமானத்தில் ஏறும் வரையில் அவருக்கு முழுப் பாதுகாப்பு அளிக்க வேண்டியது நம் பொறுப்பு. நீங்கள்தான் அவருடைய மெய்க்காப்பாளராக இருக்க வேண்டும்."

"ஆனால், சார், அனுசுயா..."

"அனுசுயா சற்று காத்திருக்கட்டும். அதைவிட அவசரம் இந்த செக்யூரிட்டி ஏற்பாடு."

"யெஸ் சார்" என்றார் பால்ராஜ் முழு மனதில்லாமல்.

* * *

அனுசுயா அலாரம் அடித்ததும் விழித்துக் கொண்டாள். எலக்ட்ரானிக் கடிகாரத்தின் தலையில் தட்டி அலாரத்தை நிறுத்தினாள்.

கண்களை விரல் மூட்டுகளால் கசக்கிக் கொண்டாள்.

"ஏய்!" என்றாள் செல்லமாக, பக்கத்தில் படுத்திருந்த பிரபுவைத் தட்டி. அவன் போர்வைக்குள் சுருண்டு கொண்டான்.

"பிரபு.... ப்ளீஸ் எழுந்திருங்கள். ஃப்ளைட்டிற்கு டயமாகி விடும்....."

"நான் உடனே எழுந்திருக்க வேண்டுமானால் நீ என்னை...." என்று பிரபு ஆரம்பித்ததும் அவன் வாயைப் பொத்தினாள். இரவு விளக்கில் அவளுடைய முகம் வெட்கத்தில் சிவப்பேறியதைப் பார்க்கப் பிரபுவுக்குக் கிளுகிளுப்பாக இருந்தது.

அவனிடமிருந்து போர்வையைச் சுண்டி இழுத்தாள். புடவையை இடுப்பில் செருகிக் கொண்டு ஒரு டீச்சரின் பாவனையுடன், "கமான், கெட் அப்.... ஒன்..... டூ.....த்ரீ......"

பிரபு பாய்ந்து எழுந்து அவளை எட்டுமுன் பாத்ரூமிற்குள் ஓடிவிட்டான்.

பிரபு சிரித்துக் கொண்டே கட்டிலுக்கடியிலிருந்து விமான நிலையத்திற்கு எடுத்துப் போவதற்கான பெட்டியை இழுத்தான். கொட்டாவியுடன் அதைத் திறந்து எல்லாப் பொருட்களும் பேக் பண்ணப்பட்டு விட்டனவா என்று பார்த்தான்.

''மாமா...''

குரல் கேட்டுத் திரும்பினான். அறை வாசலில் கார்த்திக், அனுசூயாவின் தம்பி. தூக்கம் தெளியாமல் கதவில் சாய்ந்து நின்று, ''கிளம்பி விட்டீர்களா, மாமா?'' என்றான்.

''நீ ஏன்டா அதற்குள் எழுந்து விட்டாய்? போ... போ... தூங்கு. அப்புறம் ஸ்கூலில் தூங்கி வழிவாய். நான் கிளம்ப இன்னும் அரைமணி நேரமாவது ஆகும். கிளம்பும்போது உன்னை எழுப்பி, டாட்டா சொல்லிவிட்டுப் போகிறேன்'' என்றான்.

''நிச்சயம்?'' கார்த்திக் மறுபடியும் தன் படுக்கைக்குத் திரும்பி குப்புறப்படுத்தான்.

நாற்பது நிமிடங்களில் பிரபு தயாராகி விட்டான். ஏற்கனவே சொல்லி வைத்திருந்த ஆட்டோ வாசலில் வந்து 'பாம்ப் பப்பாம்ப்' என்று குரல் கொடுத்தது.

அனுசூயா பிரபுவின் பெட்டியை எடுத்து வந்து வாசலறையில் வைத்தாள்.

''அனு.... நான் திரும்பி வர இரண்டு நாள் ஆகும். இதுவரை உன்னைத் தனியாக விட்டு போனதில்லை. எனக்கு கவலையாயிருக்கிறது.''

''தனியா எங்கே இருக்கப் போகிறேன்? அதுதான் கார்த்திக் இருக்கிறானே, துணைக்கு!''

''இந்த பத்து வயதுப் பொடிப் பயலா? பெரிய ஆண்பிள்ளை சிங்கம்தான் போ! கரப்பான் பூச்சிக்கு பயந்து போர்வைக்கடியில் ஒளிந்து கொள்ளும் தைரியசாலி!''

''நீங்கள் ஊரிலிருந்து திரும்புவதற்குள் என்னை எந்த அலாவுதீன் பூதமும் வந்து தூக்கிக் கொண்டு போய் விடாது. நீங்கள் இதையே நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்காமல், ஒழுங்காக ஊருக்குப் போய் வாருங்கள்'' என்று அவனுடைய பெட்டியை ஆட்டோவில் தூக்கி வைத்தாள்.

பிரபு மனமில்லாமல் மனைவியையும், அவள் பத்து



வயதுத் தம்பியையும் பிரிந்து கையசைத்துவிட்டு ஆட்டோவில் ஏறினான்.

* * *

சந்திரநாத் வியர்வையில் தொப்பலாக நனைந்திருந்தான். அணிந்திருந்த பனியன் உடம்போடு ஒட்டிக் கொண்டிருந்தது. காரேஜின் கதவைத் திறந்து புதிய காற்றை உள்ளே அனுமதிக்கலாமா என்று எழுந்த ஆவலைக் கஷ்டப்பட்டு அடக்கினான்.

நவீன பெயிண்ட்டின் வாசம் மூக்கில் பரிகசித்துக் கொண்டேயிருந்தது. களைப்படைவதற்கு இது நேரமில்லை. சந்திரநாத் ஸ்ப்ரே-கன் இயந்திரத்தை முடுக்கினான். பெயிண்ட் பூத்தூவலாகப் பீய்ச்சியடித்தது. வெள்ளை மாருதி சிவப்பு நிறமாக மாறத் துவங்கியது.

* * *

தொலைக்காட்சியில் தமிழ்ச் செய்திகள்.

அமெரிக்காவிலிருந்து வந்திருக்கும் அரசு அதிகாரி விமான நிலையத்தில் வரவேற்கப்பட்டுக் கொண்டிருக்கும் காட்சி முழுத் திரைக்குமாக வளர்ந்தபோது, கார்த்திக் களைப்பாக அக்காவின் மடியில் சாய்ந்தான்.

அவனுடைய தலையை ஆதரவாகப் பாசத்துடன் வருடிய அனுசூயா, திடுக்கிட்டு அவனை நிமிர்த்தினாள்.

''என்னடா உடம்பு இப்படிக் கொதிக்கிறது?''

''ஸ்கூலிலேயே டயர்டாக இருந்ததக்கா'' கார்த்திக் கண்கள், காய்ச்சலில் சிவப்பாயிருந்தன.

''வந்தவுடனே சொல்வதற்கென்ன?'' அனுசூயா பதறினாள்.

''மாமாவும் ஊரில் இல்லை. நீ தனியா இருக்கிறாய். என்ன செய்வாய் என்றுதான்....''

''முட்டாள். அதற்காக உடம்பையே கெடுத்துக் கொள்வார்களா? வா வா.... டாக்டரிடம் உடனே போகலாம்.''

''பரவாயில்லையக்கா...... காலையில் சரியாகி விடும்.''

''பெரிய மனுஷன் சொல்லிட்டான். எழுந்திருடா. அடுத்த தெருவில் இருக்கும் டாக்டர் வீட்டிற்குப் போய்க் காண்பித்துவிட்டு வந்து விடலாம். இன்னும் அரை மணியில் அவர் க்ளினிக்கை மூடிவிடுவார். கிளம்பு கிளம்பு.....''

புடவையை அவசரமாகத் திருத்திக் கொண்டு, கார்த்திக்கைக் கைத்தாங்கலாக எழுப்பினாள் அனுசூயா.

* * *

தெருக் கோடியில் அந்த சிவப்பு மாருதி வேன் இருட்டில் நின்று கொண்டிருந்தது.

சந்திரநாத் கண்ணாடி ஜன்னல் வழியே அந்த வீட்டையே கவனித்துக் கொண்டிருந்தான்.

வெளி விளக்குப் போடப்பட்டதும் நிமிர்ந்தான். அந்தப் பெண்ணும், அவள் தம்பியும் வெளிப்பட்டது நிழலாகத் தெரிந்தது. வீட்டின் கதவைப் பூட்டிவிட்டு, எதிர்சாரியிலிருந்த ரிக்ஷாவை அந்தப் பெண் கைதட்டி அழைப்பது தெரிந்தது.

''அனுருயா'' என்றான் சந்திரநாத் உள்ளங்கையில் தட்டிக் கொண்டு. ''தனியாக மாட்டுவாள் என்று பார்த்தால், துணைக்கு ஒரு தம்பி வேறு'' என்று முணுமுணுத்தான்.

ரிக்ஷா தேய்த்து தேய்த்துத் தெருமுனையில் திரும்பி மறைந்ததும், மாருதியின் இன்ஜின் மெல்லிய உறுமலோடு விழித்துக் கொண்டது. ரிக்ஷா போன திசையில் மெதுவாகத் தொடர்ந்தது.

அடுத்த தெருவில் டாக்டர் வீட்டு முகப்பறையில் ஐந்து பேர் காத்துக் கொண்டிருக்க, ஆறாவதாக தம்பியுடன் அனுருயா போய் உட்காரும்வரை, காத்திருந்துவிட்டு மாருதி வேன் விருட்டென்று வேகம் பிடித்தது. இருளான ஒரு பகுதியில் போய் நின்றது. இன்ஜின் அணைக்கப்பட்டது.

நீளமான மெல்லிய இரும்புக் கம்பியைக் கை விரல்களால் உருவிப் பார்த்துவிட்டு அவன் இறங்கினான்!

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் ஜீப்பின் மறைவில் இருட்டில் நின்று சிகரெட் புகையை அவசரமாக இழுத்து நெஞ்சில் நிரப்பிக் கொண்டார். மணிக்கட்டைத் திருப்பி வாட்சைப் பார்த்தார்.

மணி பத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. இமைகளுக்குள் தணலை வைத்து மூடியதுபோல் கண்கள் கனன்றன. அதிகாலையிலிருந்து அலைச்சல். அமெரிக்க அதிகாரியை காலையில் விமான நிலையத்தில் எதிர் கொண்டதிலிருந்து ஓய்வில்லாத வேலை. அவருடன் கவர்னர் மாளிகை. அங்கே காலை உணவு. அப்புறம் மகாபலிபுரம். மதியம் சுற்றுலா அதிகாரிகளுடன் சந்திப்பு. மாலை கவர்னர் விருந்து. கடற்கரை விஜயம். இப்போது மீண்டும் தமிழகச் சுற்றுலா அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்..... என்று



அமெரிக்க அதிகாரி ரிச்சர்ட் ஓய்வில்லாமல் ஒருநாள் இருந்தால் என்றால், அவருடைய தினப் பாதுகாப்பிற்கான முழுக் கவலையுடன் பால்ராஜிற்கும் ஓய்வில்லாமல் போயிருந்தது.

கலந்துரையாடல் முடிந்ததும், திரு. ரிச்சர்டை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் காத்திருக்கும் தனி விமானத்தில் டில்லிக்கு வழியனுப்பிய பிறகுதான் ஓய்வு என்ற வார்த்தையைப் பற்றிச் சிந்திக்கவே முடியும்.

பால்ராஜ் சிகரெட்டைக் காலுக்குக் கீழே போட்டு நசுக்கினார்.

ஜீப்பின் ஸ்டீயரிங்கை ஏதோ யோசித்துக் கொண்டேயிருந்தனர்.

அந்த அரசு மாளிகையின் முகப்பில், அமைச்சரின் காரும், அதிகாரிகள் வந்து இறங்கிய கார்களும் நிறுத்தப்பட்டிருந்தன. ஆயுத போலீஸ் கவனமாக விறைத்து நின்றார்கள்.

துப்பாக்கிகளைப் பார்த்ததும் பால்ராஜிற்கு சந்திரநாத்தின் நினைவு தட்டியது. அனுருயா என்ற பெண்ணுக்கு அவனால் ஆபத்து..... அவனால் ஆபத்து.... என்ற செய்தி மட்டும் மீண்டும் மீண்டும் மனத்திரையில் ஓடிக் கொண்டேயிருந்தது.

* * *

மருந்துச் சீட்டில் கிறுக்கி டாக்டர் நீட்டினார்.

''சாதாரணக் காய்ச்சல்தான். இந்த மாத்திரையை வீட்டிற்குப் போனதும் கொடுங்கள். நாளைக் காலையில் ஒன்று. டெம்பரேச்சர் இறங்காவிட்டால் நாளைக்கு மதியம் இன்னொன்று. சரியாகி விடும்.''

அனுருயா மருந்துச் சீட்டை உள்ளங்கையில் மடக்கிக் கொண்டாள். தம்பி கார்த்திக்கைத் தன்னோடு அணைத்துக் கொண்டாள்.

''அவர் வேறு ஊரில் இல்லை. இரண்டு நாளாகும் திரும்பி வர. அதுதான் பயம்.....'' என்றாள் கார்த்திக்கின் தலையைக் கோதிக் கொண்டே.

''பயப்படும்படி ஒன்றுமில்லை. என்ன கார்த்திக், உனக்கு பயமாய் இருக்கிறதா என்ன?''

''ஆமாம் டாக்டர்.''

''காய்ச்சலுக்குப் பயப்படலாமா?''

''காய்ச்சலுக்குப் பயப்படவில்லை டாக்டர். இப்படி ஒன்றுமில்லாததற்கெல்லாம் கவலைப்படுகிறாளே, நாளும் ஸ்கூலுக்குப் போனபின் அக்கா வீட்டில் தனியாக எப்படி இருப்பாள் என்பதை நினைத்துப் பயப்படுகிறேன்.''

அனுருயா அவன் தலையில் செல்லமாகக் குட்ட, டாக்டர்

சிரித்தார்.

வெளியே வந்து ரிக்ஷாவில் ஏறி மருந்துக் கடையில் நிறுத்தி, மருந்து வாங்கிக் கொண்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தபோது, காற்றில் குளிர் கூடியிருந்தது. பூட்டைத் திறந்து உள்ளே நுழைந்ததும், கார்த்திக் மூக்கை சுளித்தான்.

"அக்கா, என்னவோ வாசனை வரவில்லை?"

அனுசுயா நாசியை உறிஞ்சினாள். "ஆமாம், சிகரெட் வாசனை வருகிறது. இங்கே யார் சிகரெட் பிடிக்கிறவர்கள் இருக்கிறார்கள்?"

கதவைச் சாத்தி உட்புறம் தாளிட்டாள்.

"கண்ணா, நீ போய் கட்டிலில் படு. நான் பாலைச் சூடாக்கி எடுத்து வருகிறேன்."

கார்த்திக் படுக்கையறைக்குள் நுழைந்தான்.

அனுசுயா சமையலறையில் நுழைந்தாள். சுவரில் தடவி ஸ்விட்சைப் போடுமுன், முதுகுப்புறம் உஷ்ணமான மூச்சுக் காற்று ஸ்பரிசித்தது.

மின்னல் தாக்கியது போன்ற திகிலோடு திரும்பினாள். இருட்டில் அவன் முகம் தெரியவில்லை. ஆனால் கதவுக்குப் பின்னாலிருந்து அவன் வெளிப்பட்டதும் அவள் இருதயம் கசக்கப்பட்டது. திடுக்கிடல் அவள் நரம்புகளில் தாக்கி ஓடியது. அவன் கையிலிருந்த இரும்புக் கம்பியைச் சுழற்றி அவள் கழுத்தில் எறிந்தான். இழுத்தான்.

அனுசுயாவின் ரிஃப்ளெக்ஸ் துரித கதியில் இயங்கியது. வலக்கை நீண்டு, கதவைப் பற்றி வெகு வேகமாக இழுத்தது. கதவின் முனை அவன்மீது மோதியது. அவன் சற்றே நிலை குலைந்தபோது, அனுசுயா கழுத்தைச் சுற்றிய கம்பியை இரு கைகளாலும் விலக்கி, முகத்தை உருவி இழுத்துக் கொண்டு ஓடினாள். அவன் திகைத்து, சுதாரித்துத் துரத்தினான். அனுசுயா ஒரே பாய்ச்சலில் படுக்கையறைக்குள் நுழைந்தாள். கதவை அறைந்து சாத்தித் தாளிட்டாள். அவன் வெளியே வந்து கதவை மோதினான்.

"அக்கா" என்றான் கார்த்திக் அரண்டு எழுந்து —

அனுசுயாவின் வாய் உலர்ந்து விட்டது. உதடுகள் வறண்டு விட்டன. வார்த்தைகள் வெளிப்படாமல் ஹக்.... ஹக்.... என்று கையை மட்டும் வெளியே காட்டி, கழுத்தைத் தொட்டு.....

கார்த்திக்கிற்கு எதுவும் புரியவில்லை.

,படுக்கையறைக் கதவு யாரால் மோதப்படுகிறது? பயத்தில் அவன் அனுசுயாவைக் கட்டிக் கொண்டான்.



ஒவ்வொரு மோதலிலும் இரு கதவுகளுக்கும் இடையில் இடைவெளி தோன்றியது. தாழ்ப்பாள் எந்நேரமும் கழலக்கூடிய அபாயம் தெரிந்தது.

அனுசுயா கார்த்திக்கை நகர்த்திவிட்டு அறை மூலையிலிருந்த டெலிபோனுக்கு ஓடினாள்.

அதே நேரம், 'கணங்... கணங்...' என்று அழைப்பு மணி ஒலித்தது. அனுசுயா திடுக்கிட்டுத் திரும்பினாள்.

இப்போது படுக்கையறைக் கதவின் மீது மோதுவது நிறுத்தப்பட்டது. அவளைத் தாக்கியவன் அழைப்பு மணி ஒலியால் திகைத்துப் போயிருக்கக் கூடும். அவனுடைய காலடிகள் படபடப்பாக ஓடுவது அனுசுயாவிற்குக் கேட்டது.

அழைப்பு மணி மறுபடியும் ஒலித்தது. வெளியே போக அச்சமாயிருந்தது.

அனுசுயா தீர்மானத்திற்கு வந்தவளாக ரிசீவரை எடுத்து டயல் செய்தாள்.

"ஹலோ போலீஸ் ஸ்டேஷனா? நான் அனுசுயா...." மூச்சிரைத்தது முகவரியைச் சொன்னாள். "இங்கே என்னைக் கொலை செய்ய ஒருத்தன் முயற்சி செய்தான். ஆமாம்... கழுத்தில் கம்பியைப் போட்டு இறுக்கினான். நான் தப்பித்து விட்டேன். இப்போது வீட்டுக் கதவை யாரோ தட்டுகிறார்கள். எனக்கு பயமாயிருக்கிறது. உடனே வாருங்கள்."

ரிசீவரை வைத்தபோது, கார்த்திக் அவளை நெருங்கி இடுப்பைக் கட்டிக் கொண்டான்.

"சந்திரநாத் வந்திருந்தானா அக்கா?"

"யாருடா சந்திரநாத்?"

"டி.வி.யிலும் பேப்பரிலும் போட்டோவெல்லாம் போட்டார்களே..."

அந்த வினாடிதான் அனுசுயாவிற்கும் நினைவிற்கு வந்தது.

மனநிலை தவறிய கொலைகாரன். ஆஸ்பத்திரியிலிருந்து தப்பி விட்டான். ஏற்கனவே ஆறு பெண்களைக் கொன்றவன். இதோ, எப்பேர்ப்பட்ட ஆபத்திலிருந்து தப்பியிருக்கிறாள். நெஞ்சின் படபடப்பு அவளுக்குத் துல்லியமாகத் தெரிந்தது.

அழைப்பு மணி மீண்டும் மீண்டும் பொறுமையில்லாமல் ஒலித்தபோதும், அவள் கதவைத் திறக்கத் தயாராயில்லை. படுக்கையறை ஜன்னல் வழியே பார்த்தாள். வீட்டு வாசலில் ரிக்ஷா நின்றது. அவளும், கார்த்திக்கும் டாக்டர் வீட்டிற்குப் சென்ற அதே ரிக்ஷா. அது ஏன் இங்கே வந்து காத்திருக்கிறது?

ரிக்ஷாவின் பின்னாலேயே போலீஸ் ஜீப் வந்து நிற்க அடித்ததும்தான் அவளுக்கு நிம்மதி வந்தது
கதவுகளைத் திறந்தாள்.

''இன்னாம்மா நீ?'' என்றான் ரிக்ஷாக்காரன் கடுப்பாக. ராத்திரி நேரமா கதவைத் தட்டிக்கினுக்கீறேன்? தம்பிகிட்ட வாங்கின மாத்திரை கவுரா ரிக்ஷாவிலேயே வுட்டுட்டிபோயிட்டே. கொடுத்துட்டுப்போக வந்தேன்... நீ என்னடான்னா......''

''உனக்குத் தெரியாது நீ இன்னைக்கு அந்த நேரத்தில் வந்து பெல் அடித்ததால் என் உயிரைப் காப்பாற்றியிருக்கிறாய் தெரியுமா?'' அனுசுயாவின் கண்களில் நன்றி ஈரமாய் பூத்தது.

''இன்னாம்மா சொல்றே நீ?'' என்றான் ரிக்ஷாக்காரன் அவளை சூழ்ந்து கொண்ட போலீஸ்காரர்களைப் பார்த்துத் திகைத்து.

***

ஏ.ஸி. அறையிலிருந்து துண்டு போட்ட அரசியல் தன்பரை நெருங்கினார் பால்ராஜ். கொட்டாவிகளைத் தொண்டைக்குள் அடைத்துக் கொண்டு, ''மீட்டிங் முடிய இன்னும் நேரமாகுமா?'' என்றார்.

''நன்றாகக் கேட்டீர்கள்! அமெரிக்காக்காரன் தஸ்புஸ்ஸு என்று பேசுவது நம்ம ஆள்களுக்குச் சட்டென்று புரியவில்லை. இவர்கள் டக் மூடக் என்று தமிழில் பதில் சொல்வது அவன் மண்டையில் ஏறவில்லை. அதிகாரிகள் எல்லாம்கூட இருக்கிறார்களோ, பேச்சுவார்த்தை நடக்கிறதோ!''

பால்ராஜ் பொறுமையில்லாமல் ஜீப்பிற்கு நடக்கும்போது, எதிரே டிரைவர் ஓடிவந்து பிரேக் அடித்தார். ''சார், ஒயர்லஸ்ஸில் உங்களைக் கூப்பிடுகிறார்கள்.''

பால்ராஜ் ஜீப்பில் ஏறி ரிசீவரை எடுத்தார்.

''பால்ராஜ், சந்திரநாத் மீண்டும் தாக்கியிருக்கிறான்.''

''யாரை?'' என்றார் படபடப்பாக.

''அனுசுயா என்ற பெண்ணை. ஆனால் அவள் தப்பி விட்டாள்.''

''ஏசுவிற்கு நன்றிகள். எங்கே அவள்?''

''போலீஸின் முழுப் பாதுகாப்பில்தான் இருக்கிறாள்.''

''வெரிகுட். இங்கே நான் செக்யூரிட்டி ஏற்பாடுகளில் மாட்டிக் கொண்டிருக்கிறேன். மிஸ்டர் ரிக்சர்ட் கிளம்ப இன்னும் அதிக நேரமாகும்போல் தோன்றினால் ஓர் அரை மணி நேரம்



அழைத்துக் கொண்டு வரத்தயார். அனுசுயாவை நான் பார்க்க வேண்டும்.''

பரபரப்பு அவர் உடலில் தொற்றிக் கொண்டது.

ஜீப்பிலிருந்து விடுபட்டு அவர் இறங்கியதும் இளங்கோ எதிர்ப்பட்டான்.

''என்ன நிருபர் சார், எப்படி இருக்கிறீர்கள்? அமெரிக்க அதிகாரியின் விசிட்டில் சுவாரஸ்யமான விஷயம் எதுவும் இருக்கா?''

''அதற்காக வரவில்லை இன்ஸ்பெக்டர். உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்.''

இளங்கோ அவருடன் நடந்து கொண்டே பேசினான். ''சந்திரநாத் கட்டுரையின் அடுத்த பகுதி நாளைக்கு அச்சுக்குப் போக வேண்டும். ஏதாவது லேட்டஸ்ட் தகவல் இருந்தால் வாங்கிக் கொண்டு போகலாமே என்று உங்களைத் தேடி வந்தேன்.''

''இன்றைக்கு பூராவும் இந்த செக்யூரிட்டி ஏற்பாடுகளில் மிகவும் பிஸியாக இருந்து விட்டேன். ஆனால் சந்திரநாத்தை மறக்கவில்லை உனக்கு நியூஸ் தரமுடியுமா என்று நாளைக்குச் சொல்கிறேன்.''

''அப்படியென்றால் ஏதோ நடந்திருக்கிறது'' என்றான் இளங்கோ புன்னகைத்து.

''சந்திரநாத்தைப் பிடிக்க உன்னால் முடிந்த அளவு உதவியை நீ செய்தாய் என்பதை மறக்கவில்லை. நான்தான் கோட்டை விட்டு விட்டேன். எந்த நியூஸாயிருந்தாலும், மற்றவர்களுக்குச் சொல்வதற்கு முன்னால் உனக்குச் சொல்லி விடுவேன், சந்தோஷமா?''

''தேங்க்யூ''

இன்ஸ்பெக்டர் அவனிடமிருந்து விலகி, மீட்டிங் நடக்கும் ஹாலை நோக்கி நடந்தார்.

***

அனுசுயாவிற்கு இன்னும் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. கார்த்திக் கழுத்து வரை போர்த்திக் கொண்டு கட்டிலில் உட்கார்ந்திருந்தாள். வீட்டின் எல்லா விளக்குகளும் அகாலத்திலும் எரிந்து கொண்டிருந்தன. போலீஸ்காரர்களின் விறைப்பான நிழல்கள் சுவர்களில் படிந்திருந்தன. பூட்ஸ் கால்களின் சப்தம் கேட்டு நிமிர்ந்தாள்.

''ஐ'ம் இன்ஸ்பெக்டர் பால்ராஜ். சந்திரநாத் கேஸை நான்தான் கவனித்துக் கொண்டிருக்கிறேன். எனக்குப் பத்து

நிமிட அவகாசம்தான் இருக்கிறது. இங்கு நடந்ததையெல்லாம் ஏற்கனவே கேட்டுத் தெரிந்து கொண்டு விட்டேன்.''

அனுசுயாவின் உடம்பு ஒருமுறை உதறிக் கொண்டது.

''சந்திரநாத்திற்கும் உங்களுக்கும் எந்த விதத்திலாவது அறிமுகம் உண்டா, அனுசுயா?''

தலையை இடதும் வலதுமாக ஆட்டினாள். ''டெலிவிஷன் நியூஸிலும் பார்த்ததோடு சரி.''

''இவர்களை?''

பால்ராஜ் நீட்டிய போட்டோக்களை அனுசுயா கையில் வாங்கினாள்.

''சந்தியா, மாயா... இந்த இரண்டு பெண்களையும்?''

''பார்த்திருக்கிறேன்'' என்றாள். ''எனக்கு அறிமுகமானவர்கள் இல்லை. ஒருமுறை சந்தித்திருக்கிறோம் அவ்வளவுதான்.''

''ஒருமுறைதானா? எங்கே?''

''பாரதி டூர்ஸ் அண்ட் டிராவல்ஸ் கம்பெனியின் ஒரு சுற்றுலா பஸ்ஸில் சந்தித்திருக்கிறோம். சரியான அறிமுகம்கூட இல்லை. நான், கார்த்திக், என் கணவர் மூவரும் அந்தச் சுற்றுலாவில் கலந்து கொண்டோம். அதே பஸ்ஸில் வெவ்வேறு இருக்கைகளில் இந்தப் பெண்களை நான் பார்த்தேன்.''

''நன்றாக நினைவுபடுத்திச் சொல்லுங்கள். வேறெங்கும் பழக்கமில்லையா?''

''இல்லை.''

''பாரதி டிராவல்ஸின் முதலாளி பரதன் கொலை செய்யப்பட்டதை வைத்துப் பார்க்கும்போது அந்தச் சுற்றுலாவிற்கும் சந்திரநாத்திற்கும் ஏதோ ஒரு தொடர்பு இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. என்றைக்கு டூர் போனீர்கள்?''

அனுசுயா தேதியைச் சொன்னாள்.

பால்ராஜ் குறித்துக் கொண்டார்.

''உங்கள் கணவருக்கு அவசியமென்றால் நீங்கள் போன் செய்து வரச் சொல்லி விடுங்கள். உங்களுக்குப் பாதுகாப்பிற்காகப் போலீஸ் இன்றிரவு இங்கேயே இருக்கும். நாளைக்குக் காலை மறுபடியும் உங்களைச் சந்திக்கிறேன்.''

* * *

அரசினர் மாளிகைக்கு பால்ராஜ் திரும்பியபோது, சற்றுப் பரபரப்பாகியிருந்தது. கூட்டம் முடியும் தருவாயில் இருந்தது.

பால்ராஜ் திரு. ரிச்சர்டுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரத்யேக குண்டு துளைக்காத காரை நோக்கி நடந்தார். காரின்



கதவைத் திறந்து வைத்திருந்த டிரைவர் பால்ராஜைப் பார்த்ததும் மூடினான்.

''ரேடியேட்டரில் வாட்டர் போதுமா என்று செக் பண்ணினேன் சார்....''

''ஏன்யா, கடைசி நிமிஷம் வரைக்குமா இந்த விஷயத்தையெல்லாம் தள்ளிப் போடுவாய்?''

பால்ராஜ் ஹாலுக்குப் பரபரப்பாக ஓடினார். கலந்துரையாடல் முடிந்து எல்லோரும் கைகுலுக்கிக் கொண்டிருந்தார்கள்.

திரு ரிச்சர்ட், பால்ராஜைப் பார்த்து, ''போகலாமா?'' என்றார்.

* * *

முன்னால் ஒரு கொண்டை விளக்கு ஜீப்.

அடுத்தது அவர்களுடைய கார். முன்புறம் டிரைவர், பின்புறம் பால்ராஜ், ரிச்சர்ட்.

கிண்டியைத் தாண்டியதும் டிரைவர் கழுத்தைத் திருப்பினான்.

''பால்ராஜ்'' என்றான்.

அவரைப் பெயர் சொல்லி அழைத்ததும் பால்ராஜ் திடுக்கிட்டு நிமிர்ந்தார்.

''குண்டு துளைக்காத இந்தக் காரை இப்போது நான் கடத்தப் போகிறேன். அவசரப்பட்டு எதுவும் செய்துவிடாதீர்கள். காரில் ஒரு வெடிகுண்டைப் பொருத்தியிருக்கிறேன். காரை நிறுத்தினாலோ, கதவுகளைத் திறந்தாலோ, அது வெடிக்கும். நாம் மூவரும் க்ளோஸ். நீங்கள் என்னைச் சுட்டாலும், அதே கதிதான்.... உங்களிடமிருக்கும் துப்பாக்கியை காருக்கு வெளியே தூக்கிப் போட்டுவிட்டு ஜாலியாக சாய்ந்து கொள்ளுங்கள்.''

## 10

நேரமும், இடமும் பால்ராஜிற்குக் குழப்பமாயிருந்தன. வெப்பமான காற்று. வியர்வை. மூச்சுத் திணறல். உள் மண்டையின் சுவர்களில் சத்தியங்களின் 'கணங்' 'கணங்' என்ற மோதல் எல்லா உணர்ச்சிகளும் வேறு யாருக்கோ நடப்பது போன்ற தெளிவின்மை.

அலை அலையாய் நினைவுகள். காரில் அவரும் ரிச்சர்டும்.

துப்பாக்கியைத் தூக்கி அவர் வெளியே எறிந்ததும், டிரைவர் திரும்பி ஏதோ புகையடிக்க. மயக்கம். அதன்பின் இந்த ரூம்.

ரிச்சர்ட் எங்கே?

பால்ராஜ் எழுந்து உட்கார்ந்தார். பாரமில்லாதது போல் ஓர் உணர்வு. திரும்பியபோது முதுகெலும்பு வலித்தது. வெளியே எங்கேயோ தெளிவில்லாத குரல்கள்.

அவருக்கு கவனம் சிறிது சிறிதாகத் திரும்பியபோது, படகில் மிதப்பது போன்ற உணர்வு இருந்தது. கழுத்து விறைப்பாயிருந்தது. மூச்சு சீரில்லாமல் வந்தது. இருந்தபோதிலும் பொறுப்புணர்வு எல்லாவற்றையும் இறுக்கிப் பிடித்து உலுக்கியது.

ரிச்சர்ட் எங்கே?

எட்டுக்கு எட்டு என்ற சிறிய சதுர அறை. ஜன்னல்கள் இல்லை.

பசித்தது. தாகமெடுத்தது. உதடுகளும், தொண்டையும் உலர்ந்து போயிருந்தன. அறை இருட்டில் சுவரோரம் ஓர் அசைவு.

"பால்ராஜ்?"

முனகல் குரல். ரிச்சர்டுடைய குரல். ரிச்சர்டை நெருங்க பால்ராஜ் காட்டிய வேகத்தில் மூச்சு இரைத்தது. காற்றில்லாத அறை என்பதால் இந்த மூச்சு திணறல் என்று பால்ராஜிற்குப் புரிந்தது. அவருடைய தொப்பி, வத்தி, ரிவால்வருடன் இருந்த சிறு கத்தி எல்லாம் நீக்கப்பட்டிருந்தன.

ரிச்சர்ட் கண்களைத் திறந்து பால்ராஜைப் பார்த்தார். வறண்ட புன்னகையில் நட்புத் தேடினார்.

மிக நீளமான ஆச்சரியக்குறி போன்ற வெளிச்சக் கோட்டை அப்போதுதான் கவனித்தார். நகர்ந்து நெருங்கித் தொட்டுப் பார்த்தார். மரக்கதவுகளின் இடைவெளி வழியே வெளிச்சம்.

கதவுகளில் சக்தியில்லாத தோள்களால் அழுத்தினார். எந்த அசைவும் இல்லை. கதவை மோதி வெளியிலிருப்பவர்களது கவனத்தைக் கவர்வது முட்டாள்தனம் என்று அவருக்குத் தோன்றியது.

"எங்கே இருக்கிறோம், பால்ராஜ்?"

"நரகத்தில்" என்றார் பால்ராஜ். "கடத்தப்பட்டிருக்கிறோம்."

"யாரால்?"

"நாட்டில் தீவிரவாதிகளுக்கா பஞ்சம்?"

"பால்ராஜ், நான் அப்போதே விழித்து விட்டேன். மிகச்



…ந்த மயக்க மருந்து என்று நினைக்கிறேன். உங்களுக்கு … வருமா, நினைப்பு வருமா, என்று விரல்களைக் கோர்த்துப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தேன்."

"பேசாதீர்கள், ரிச்சர்ட். காற்றில்லாத அறை. மூச்சுக்கே …ளால். இருக்கும் சக்தியில் ஒவ்வோர் அவுன்ஸையும் நாம் சேமிக்க வேண்டும்."

பால்ராஜ் கதவுகளை விரல்களால் தடவிப் பார்த்தார். சாவித் துவாரமோ… இல்லை. தாழ்ப்பாள்கள் எல்லாம் வெளிப்புறம் இருந்தன. உட்புறமாய்த் திறக்கும் வகைக் கதவுகள் என்பதால் உள்ளிருந்து மோதினால் எந்தப் பயனும் இருக்காது. கதவுகளை இழுத்துத் திறக்க வேண்டும். இழுத்துத் திறக்க எந்தப் பிடிப்பும் இல்லை.

வெளியே ஜீப் அல்லது கார் புறப்படும் சப்தம்.

பால்ராஜிற்கு இந்தச் சந்தர்ப்பத்தில் பொறுமையைத் தவிர வேறு எந்த உபாயமும் இல்லை. புரிந்து காத்திருந்தார்.

"எதற்காக நம்மைக் கடத்தினார்கள், பால்ராஜ்?"

"கமிஷனருக்குத்தான் தெரியும்" என்றார் பால்ராஜ், உலர்ந்த உதடுகளை நாவால் வருடிக் கொண்டே.

***

சூரியன் கண் திறக்க இன்னும் ஒரு மணி நேரத்திற்குமேல் ஆகும்.

கமிஷனர் அலுவலகத்தில் விளக்குகள் மும்முரமாய் எரிந்து கொண்டிருந்தன. போலீஸ் உடுப்புகளுடன் கூடியிருந்த அதிகாரிகள் அனைவரின் காதுகளும் ஸ்பீக்கரிலேயே பதிந்திருந்தன.

தீவிரவாதிகளிடமிருந்து அடுத்த போனிற்காகக் காத்திருந்தார்கள்.

போன் ஒலித்தபோது, சர்ச் மணி அடிப்பது போல் இருந்தது.

"மிஸ்டர் கமிஷனரா?"

"ஆமாம்."

"நாங்கள்தான் பேசுகிறோம். இளைஞர் மறுவாழ்வுப் புரட்சிக் குழு."

"அமெரிக்க அதிகாரி ரிச்சர்ட் எங்களுக்குப் பத்திரமாகத் திருப்பப்பட வேண்டும்" என்றார் கமிஷனர், படபடப்பாக.

"நாங்கள் கேட்ட பணம்?"

"இருபத்தைந்து இலட்சம் என்பது பெரிய தொகை."

"அரசாங்கத்திற்கா?"

"இன்னும் இரண்டு மணி நேரத்திற்குள் கேட்கிறீர்களே?"

"காற்றில்லாத அறையில் ரிச்சர்டையும், உங்கள் இன்ஸ்பெக்டரையும் அடைத்திருக்கிறோம். அதிகபட்சம் இன்னும் மூன்று மணிநேரம்தான் அவர்கள் தாக்குப் பிடிப்பார்கள். அதற்குள் எங்களுக்கு முடிவு தெரிய வேண்டாமா?"

"சரி.... பணம் எங்கே வேண்டும்?"

"பணம் தயாரா?"

"தயார்."

"பணத்தை மரப் பெட்டிகளில் வையுங்கள். போலீஸ் ஜீப்பில் பெட்டிகளை ஏற்றுங்கள். பெசன்ட் நகர் மாதா கோவிலருகே நிறுத்திவிட்டுப் போங்கள். ஜீப்பை அங்கிருந்து எங்களுடைய ஆள் ஓட்டிப் போவார். எங்கள் இருப்பிடத்திற்கு வந்ததும், பணத்தைச் சரிபார்த்துவிட்டு, ரிச்சர்டை ரிலீஸ் பண்ணுவோம். ஜீப்பை போலீஸ் தொடர்ந்தாலோ, வேறு முட்டாள்தனமான முயற்சிகளில் ஈடுபட்டாலோ, ரிச்சர்ட் உங்களுக்கு உயிருடன் கிடைக்க மாட்டார்."

தொடர்பு அறுந்தது.

"பப்ளிக் பூத்திலிருந்து பேசியிருக்கிறான், சார்."

"பணம் கொடுக்கப் போகிறோமா, சார்?"

"பணத்திற்கு பதில் பெட்டியில் துப்பாக்கிகளுடன் போலீஸ் ஒளிந்து போனால் ரிச்சர்டை மீட்டுவிடலாம், சார்."

"ஜீப்பில் ஒரு வெடிகுண்டு வைத்தால்..."

"ஸ்டாப்!" என்றார் கமிஷனர். "அமெரிக்க அதிகாரியின் உயிர் மிக முக்கியம். அவசியமென்றால் பணத்தைக் கொடுத்து மீட்கச் சொல்லி அரசாங்கம் சொல்லிவிட்டது. பணத்தைக் கேட்டபடி கொடுத்துவிட்டுக் காத்திருப்பதுதான் புத்திசாலித்தனம்."

போலீஸ் அதிகாரிகள் பரபரப்பாக எழுந்தார்கள்.

"எல்லா வசதிகளுடன் ஓர் ஆம்புலன்ஸைத் தயார் நிலையில் வைத்திருங்கள்."

"சரி சார்."

* * *

பால்ராஜிற்கு திடுக்கென்று மறுவிழிப்பு வந்தபோது, சுவரின் ஒரு மூலையில் சாய்ந்திருந்தார். சற்றுத் தள்ளி ரிச்சர்ட் சுருண்டிருந்தார். பால்ராஜ் விழிப்பதற்குக் காரணம் அந்த அறையில் கேட்ட மிகச் சன்னமான அந்த ஒலி. கதவுத்தாள் தேய்ந்து நகரும் ஒலி.

உடனடியாக அவருடைய அத்தனை செல்களும்



சுறுசுறுப்பாயின. ஆனால் கண்களை மெல்லத் திறந்ததைத் தவிர அவரிடமிருந்து எந்த அசைவும் இல்லை.

கதவு திறக்கப்பட்டு வெளிச்சம் உள்ளே தவழ்ந்தது. உடன் அதை மூடிக் கொண்டு ஒரு பெரிய நிழல். கதவின் ஃப்ரேமில் நின்றவனின் ஒரு கையில் டார்ச். மற்றதில் மெஷின் துப்பாக்கி.

"ஏய்!"

ரிச்சர்டுக்கும் புத்திசாலித்தனம் இருந்தது. அசைவின்றி இருந்தார்.

கதவருகில் நின்றவன், பின்புறம் திரும்பினான்.

"இருவருக்கும் இன்னும் மயக்கம் தெளியவில்லை."

"இன்ஸ்பெக்டர் இங்கே கிடக்கட்டும். அமெரிக்கனை மட்டும் வேறு ரூமிற்கு மாற்றச் சொல்லி உத்தரவு," என்று வெளியிலிருந்து குரல் வந்தது. இனி ஒரு சந்தர்ப்பம் கிடைக்கப் போவதில்லை என்று பால்ராஜிற்குப் புரிந்தது.

முட்டாள்கள், அவரிடமிருந்து எல்லா ஆயுதங்களையும் கவனமாக விலக்கியவர்கள், இடுப்பு பெல்ட்டை மட்டும் ஏனோ மறந்து விட்டார்கள்!

பால்ராஜ் வயிற்றை எக்கி, பெல்ட்டை விடுவித்தார். பக்கிளின் உலோக சப்தம் கேட்டுவிடாதபடி அந்த ஒலியை விரலால் அழுத்தி மூடமாக்கினார். பெல்ட்டின் இரு நுனிகளை இரு கைகளிலுமாகப் பற்றி இழுத்தார்.

அவன் உள்ளே நுழைந்து, ரிச்சர்டின் மீது குனிந்தபோது, ரிச்சர்ட் வெகு திடீரென்று தனது வலக்காலை உயர்த்தி அவன் முகத்தில் உதைத்தார். அவன் சுதாரித்துப் புரிந்து கொள்ளுமுன் பால்ராஜின் பெல்ட், அவன் கழுத்தில் விழுந்து இறுக்கியது.

மூச்சு முட்ட, அவன் கைகளை காற்றில் உதைக்க, அவனுடைய தளர்ந்த கையிலிருந்து ரிச்சர்ட் வெகு சுலபமாகத் துப்பாக்கியைப் பறித்தார்.

சப்தம் கேட்டு வெளியிலிருந்து ஓடி வந்த மனிதன் இயந்திரத் துப்பாக்கி நெஞ்செதிரே நீண்டதும் மிரண்டான்.

அடுத்த காரியங்களெல்லாம் நொடிகளில் நடந்தேறின.

எதிரிகள் இருவரும் அந்த சதுர அறையில் கைகளும், கால்களும் கட்டப்பட்ட நிலையில் எறியப்பட்டனர்.

கதவுக்கு வெளியே வந்ததும் பால்ராஜ் நெஞ்சு நிறையப் புதிய காற்றை இழுத்துக் கொண்டார். கண்களிலும், ரத்தக் குழாய்களிலும் இருந்த களைப்பு உருவிக் கொண்டு விலகத் துவங்கியது.

"ஜேம்ஸ்பாண்ட் படம் போலிருந்தது நீங்கள் செய்தது"

என்றார் ரிச்சர்ட்.

"இவ்வளவு சுலபமாகத் தப்பிப்போம் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை" என்றார் பெருமூச்சுடனேயே பால்ராஜ்.

"முதலில் ஒரு டெலிபோனைப் பிடிக்க வேண்டும் மிஸ்டர் ரிச்சர்ட். நீங்கள் இங்கே பத்திரமாக ஒளிந்திருங்கள். நான் இந்த கூடாரத்தில் இன்னும் யார் யார் இருக்கிறார்கள், என்ன நடக்கிறது இங்கே என்று சின்ன ரவுண்ட் அப் செய்து விட்டு வந்து விடுகிறேன்."

உள்ளறையில் யாருமில்லை. டெலிபோன் இருந்தது.

இது எந்த இடம்? மெட்ராஸா, செங்கல்பட்டா, அல்லது வேறு மாநிலமா? டெலிபோனில் லோக்கல் கால் செய்ய இயலுமா, அல்லது எஸ்.டி.டி. போட்டுத்தான் சென்னையைப் பிடிக்க முடியுமா?

பால்ராஜ் கமிஷ்னர் ஆபீஸின் எண்களைச் சுழற்றினார்.

"யெஸ்?" என்றது எதிர்முனை. கமிஷனரின் பழக்கமான குரல்.

"குட்மார்னிங் சார். பால்ராஜ் ஸ்பீக்கிங்..."

"பால்ராஜ்! எங்கிருந்து பேசுகிறீர்கள்?"

"இனிமேல்தான் கண்டுபிடிக்க வேண்டும். நானும் ரிச்சர்டும் தப்பிவிட்டோம்."

"எக்ஸ்லன்ட் செய்தி பால்ராஜ்! பால்ராஜ், கவனம்!"

"இடம் புரிந்ததும், மறுபடி போன் பண்ணுகிறேன் சார்."

"அதற்குள் இந்த காலை ட்ரேஸ் பண்ணி அட்ரஸைக் கண்டுபிடித்து விடுவோம் பால்ராஜ். தொடர்பைத் துண்டிக்காமல் ரிசீவரைக் கீழேயே வைத்து விடுங்கள்."

"யெஸ் சார்."

பால்ராஜ் ஒரு ஜன்னலை அங்குலம் அளவு திறந்து பார்த்தார். வெளியே விடியல் வெடித்துக் கொண்டிருந்தது. மரங்களும், நீளமான மசமசப்பான நிழல்களும், சுதந்திரப் பட்சிகளும் தென்பட்டன.

நேரம் அதிகமில்லை என்று பால்ராஜிற்குப் புரிந்தது.

ஒவ்வோர் அறையையும் தந்தி வேகத்தில் ஆராய்ந்தார்.

உள்ளறை டிராயரில் கிடைத்த விவரங்கள் அவரைத் திகைக்க வைத்தன.

ஒரு பிரவுன் நிறக் கவரிலிருந்து சந்திரநாத்தின் போட்டோக்கள். சிறைச்சாலையில் எடுத்தவை. பின்பு சிகிச்சையின் போது ஆஸ்பத்திரியில் எடுத்தவை. சிறியதாளில்



'சந்திரநாத் பழக்கக்கூடிய சிறுத்தை' என்ற வரிகள்.

தீவிரவாதிகளின் அறையில் சந்திரநாத்தின் போட்டோ! எதற்கு? பழக்கக்கூடிய சிறுத்தை என்ற வார்த்தைகளுக்கு அர்த்தம் என்ன? இன்னொரு காகிதத்தில் எழுதியிருந்ததைப் படித்தார்.

பால்ராஜ் போட்டோக்களையும், அந்தக் காகிதங்களையும் சட்டைப் பையில் பத்திரப்படுத்தினார். அடுத்த இழுப்பறைகளில் தேடியபோது ஒரு சிறு ஆல்பம் கிடைத்தது. புரட்டினார்.

கோயில் சிலைகள்.

நடராஜர், முருகன், சிவலிங்கம், காமாட்சியம்மன், கிருஷ்ணர்.

உலோகங்களால் செய்யப்பட்ட உற்சவ மூர்த்திகளின் புகைப்படங்கள். இவை எதற்காக இங்கே? பால்ராஜிற்குப் பளிச்சென்று உதயமானது. அந்த ஆல்பத்தையும் எடுத்துக் கொண்டார்.

அதற்கும் அடுத்த இழுப்பறையில் சில துப்பாக்கிகள். அப்புறம் மேஜை டிராயரில் சிவப்பு வட்டமிட்ட ஒரு வரி விளம்பரம் கிடைத்தது. அதையும் அள்ளிக் கொண்டார்.

தீவிரவாதிகள் இந்நேரம் கமிஷனருடன் பேரம் பேசப் போயிருக்கலாம். எந்நேரமும் அவர்கள் திரும்பி வரக்கூடும். அவர்களை எதிர்நோக்கிக் காத்திருக்க பால்ராஜிற்கு மிகுந்த ஆவலாயிருந்த போதிலும், கட்டுப்படுத்திக் கொண்டார். தனியானாய் இருந்தால் எதிர்கொள்ளலாம். இப்போது அதிமுக்கியம் திரு. ரிச்சர்டின் பத்திரம்.

ரிச்சர்ட் விட்டுப் போன இடத்திலேயே காத்திருந்தார்.

"என்னுடன் ஓடிவர உங்களுக்குத் தெம்பு இருக்கிறதா மிஸ்டர் ரிச்சர்ட்?"

"நியூயார்க் வரையிலும்கூட ஓடிவரத் தயார்!" என்றார் ரிச்சர்ட்.

அந்த வீட்டின் பின்புறம் இருந்த காம்பவுண்ட்டுச் சுவரை ஏறிக் குதித்துப் பிரதான சாலையை அவர்கள் அடைந்தபோது பகல் வெளிச்சம் பிரகாசமாயிருந்தது.

* * *

கமிஷனர் குலுக்கின குலுக்கலில் பால்ராஜின் கை வலித்தது.

"எக்ஸலன்ட் ஒர்க், பால்ராஜ்."

"தீவிரவாதிகளுக்குக் கொடுக்க இருந்த லட்சக் கணக்கான ரூபாய் கடைசி நிமிடத்தில் மீட்கப்பட்டது பால்ராஜ். இரண்டு

பேரை அரெஸ்ட் செய்திருக்கிறோம்.''

''பணத்திற்காக நடத்திய கடத்தலே தவிர, ரிச்சர்டின் மீது யாருக்கும் தனிப்பட்ட விரோதமில்லை என்று தெரிகிறது சார்.''

''தீவிரவாதிகள் இருந்த இடத்தையும் வளைத்து விட்டோம். நீங்கள் கொண்டு வந்த நட பங்களைத் தவிர வேறெதுவும் உருப்படியாகக் கிடைக்கவில்லை'' என்றார் கமிஷினர்.

''சந்திரநாத்தின் கையில் மெஷின் துப்பாக்கியைப் பார்த்து அன்றைக்கே ஆச்சரியப்பட்டேன் சார் - இது எது இவனுக்கு என்று. அந்தத் துப்பாக்கியில் அவனுக்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டிருக்கிறது. தீவிரவாதிகளுக்கும், சந்திரநாத்திற்கும் ஏதோ ஒரு தொடர்பு...''

''சிறையில் அவனுக்கு நண்பர்களாகியிருக்கலாம்!''

''செய்தித்தாள் வரி விளம்பரத்தில் வாடகைக்கு வீடுகள் என்ற பகுதியில் ஒரு முகவரி சுழிக்கப்பட்டு கிடைத்தது சார். அதுதான் சந்திரநாத் ஒளிந்திருக்கும் இடமாக இருக்க வேண்டும்.''

''படையுடன் போங்கள் பால்ராஜ்.''

''எனிவே...'' என்று குறுக்கிட்டார் திரு. ரிச்சர்ட். ''நாம் இருவரும் சேர்ந்து கழித்த இனிய மாலைப் பொழுதை நான் மறக்க மாட்டேன் இன்ஸ்பெக்டர்.''

* * *

போலிஸ் வேனிலிருந்து ஆயுதமேந்திய போலீஸார் இருபது பேர் பூட்ஸ்கள் ஒலிக்க இறங்கினார்கள்.

அந்தத் தனிமையான வீட்டை நாற்புறமும் சூழ்ந்து கொண்டார்கள்.

''சந்திரநாத்!'' என்று கூவினார் இன்ஸ்பெக்டர் பால்ராஜ். ''உன் இருப்பிடத்தை கண்டுபிடித்து விட்டோம். வெளியே வா...... சரணடைந்துவிடு.''

கதவுகள் அசையவில்லை, ஜன்னல்கள் திறக்கப்படவில்லை. அந்த வீட்டிலிருந்து எந்த சலனமும் இல்லை.

சந்திரநாத்திடம் இயந்திர துப்பாக்கி இருக்குமே என்றுதான் பால்ராஜ் மிகத் தயங்கினார். இருபது நிமிடங்களாகக் கூவியும் எந்த சலசலப்பும் இல்லாததால், உயர்த்திய துப்பாக்கிகளோடு அவர்கள் அந்த வீட்டின் கதவை நெருங்கினார்கள்.

சரேலென உதைத்து திறந்து உள்ளே நுழைந்தார்கள்.



தங்களை தோட்டாக்கள் வரவேற்கப் போகின்றன என்று நினைத்த பால்ராஜிற்கு ஏமாற்றம்.

எல்லோர் அறைகளிலும், மூலைகளிலும், ஒளியக்கூடிய இடங்களிலும் தேடிவிட்டார்.

சந்திரநாத் எங்கும் இல்லை.

## 11

பூட்ஸ் காலை ஏமாற்றத்துடன் தரையில் உதைத்தார் பால்ராஜ்.

''தப்பித்து விட்டான்!''

சந்திரநாத் தங்கியிருந்திருக்கக்கூடிய அந்த வீட்டின் ஒவ்வோர் அங்குலத்தையும் துருவிப் பார்த்துவிட வேண்டும் என்று தீர்மானம் செய்தார்.

உள்ளறையில் ஹேங்கரில் தொங்கிய பேண்ட்டும், சட்டையும், கட்டிலுக்குக் கீழே கிடந்த ஒரு ஜோடி தோல் செருப்புகளும் சந்திரநாத் திட்டமிட்டு இடத்தைக் காலி செய்யவில்லை. மிகக் குறுகிய அவகாசத்தில், அவசரமாக விலகி ஓடியிருக்கிறான் என்று சேதி சொல்லின. அந்த உடைகளை, செருப்புகளைக் கைபடாமல் ஒதுக்கினார். மர அலமாரிக் கதவைத் திறந்தார்.

திறந்தே வைக்கப்பட்டிருந்த போட்டோவில் அவருக்கு பரிச்சயமான முகம். இந்த இளம் பெண்ணின் பெயர்தானே ஜெயஸ்ரீ? சந்திரநாத்தின் காதலி! அங்கிருந்து பார்வை நகர்ந்து குப்புறக் கிடந்த மற்ற போட்டோக்களை நிமிர்த்தினார்.

சந்தியா! மாயா! கடைசியில் அனுசூயா! அனுசூயாவின் புகைப்படத்தின் அருகில் இருந்த காகிதத்தில் 'என்னுடைய அடுத்த பலி - அனுசூயா' என்ற கிறுக்கல்!

பால்ராஜ் போட்டோக்களையும் காகிதத்தையும் எடுத்துக் கொண்டார். அவர் உள்ளத்தின் குறுக்கில் கேள்விகள் நூறு ஓடின. எல்லாவற்றையும் அழுத்திக் கொண்டு, கொட்டை எழுத்துச் செய்தி நிமிர்ந்து நின்றது.

அனுசூயாவிற்கு ஆபத்து!

அந்த வீட்டின் காரேஜ் பகுதியை ஆராய்ந்தார். சுவர்கள் சந்திக்கும் மூலையிலிருந்த அந்த சிவப்பு பெயிண்ட் டப்பா அவர் கவனத்தைக் கவர்ந்தது. சுவர்களில் மிக மெலிதாய் அங்காங்கே ஸ்ப்ரே ஆகியிருந்த சிவப்பு பெயிண்ட், வெள்ளை

மாருதி இப்போது சிவப்பாகிவிட்ட கதையைச் சொன்னது
பல்ராஜ் பரபரப்பானார்.

* * *

"யார் நீங்கள்?" என்றார் வாசலில் நின்றிருந்த கான்ஸ்டபிள்.

"யார் நானா? நான் பிரபு!" என்றான் ஆட்டோவிலிருந்து இறங்கிய பிரபு திகைப்புடன்.

"என்ன வேண்டும் உங்களுக்கு?"

"இதென்ன சார் கூத்தாயிருக்கிறது? என் வீட்டிற்குள் நுழைவதற்கு உங்களிடம் நான் விளக்கம் சொல்ல வேண்டும் போலிருக்கிறதே."

அப்போதுதான் ஆட்டோ சத்தம் கேட்டு வெளியே வந்த அனுருபா, "பிரபு! நீங்களா?" என்றாள். "அவர் என்னுடைய ஹஸ்பெண்ட். அவரை உள்ளே விடுங்கள்."

கான்ஸ்டபிள் "ஸாரி" யை முனகிவிட்டு வழியை விட்டு விலகினார்.

பிரபு பெட்டியை ஒரு மூலையில் போட்டான். "என்ன அனு இது, நம் வீட்டு வாசலில் போலீஸ்! நான் இல்லாதபோது திருடன் எவனாவது வந்தானா?"

"சந்திரநாத் வந்தான் மாமா" என்றான் கார்த்திக் அக்காவிற்கு முன்புறம் வந்து நின்று.

பிரபு குழப்பத்துடன் சோபாவில் உட்கார்ந்தான்.

அனுருபா அவனுக்கு எல்லாவற்றையும் விளக்க ஆரம்பித்தாள்.

* * *

சிவப்பு மாருதி வேன் நிழலில் ஒதுங்கியது. அதன் பக்க கதவு நழுவித் திறக்க, பூட்ஸ்கள் அணிந்த இரு கால்கள் இறங்கின. தலையைக் குனிந்து பார்த்துக் கொண்டான் அவன். முற்றிலும் போலீஸ் உடுப்பு. தலையின் தொப்பியைச் சரிசெய்து கொண்டு வேனின் கதவைச் சாத்தினான். சருமத்தின் நிறத்திலேயே இருந்த இரண்டு கிளவுஸ்களை அணிந்தான். நடக்கையில், பாக்கெட்டில் அந்த நீலக் கம்பி இருக்கிறதா என்று தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

அதோ அனுருபாவின் வீடு. முகத்தின் பெரும் பகுதியை மறைத்த பொய் மீசையைத் தொட்டு அழுத்திவிட்டு அனுருபாவின் வீட்டை நோக்கி விரைவாக நடந்தான்.

அவனுடைய மிடுக்கான நடையைப் பார்த்ததும், கான்ஸ்டபிள் விறைத்தார். நிமிர்ந்தார். இந்தக் கண்களை



எங்கேயோ பார்த்திருக்கிறோமே என்ற மெல்லிதாகக் குழப்பம் அவர் கண்களில் தெரிந்தது.

"அனுருபாவின் வீடுதானே இது?"

"ஆமாம் ஸார்..." என்றவர், ஆழமான குரல்.

"அனுருபாவின் பாதுகாப்பிற்காக அனுப்பப்பட்டிருக்கும் ஸ்பெஷல் ஆபீஸர் நான். கூப்பிடு... அவளை."

அனுருபாவை அழைக்கும் எண்ணத்துடன் கான்ஸ்டபிள் வீட்டிற்குள் அடி எடுத்து வைத்ததும், அவருடைய பின் கழுத்தில் அவனுடைய கை செங்குத்தாக இறங்கியது. கான்ஸ்டபிள் முன்புறம் சுருண்டு விழுந்தார். அவரை அவன் ஓரமாக இழுத்துப் போட்டுவிட்டு, உள்ளறைக் கதவைத் தட்டினான்.

கதவு அனுருபாவைத் திறந்தது. பிரபு எட்டிப் பார்த்தான். போலீஸ் உடுப்பைக் கண்டதும் திறந்து விட்டான்.

அனுருபா நாற்காலியில் உட்கார்ந்திருந்தவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். அந்தப் பெரிய மீசைக்குப் பின்னே முகம் மறைந்திருந்த போதிலும், அந்தக் கண்கள் அவளைக் குழப்பின. இந்த இன்ஸ்பெக்டரை எங்கே பார்த்திருக்கிறேன்.

அவன் பிரபுவின் புறம் திரும்பினான். "நான் மிஸஸ் அனுருபாவிடம் தனிமையில் சற்றுப் பேச வேண்டும்."

பிரபு தயங்கிவிட்டு கார்த்திக்கையும் அழைத்துக் கொண்டு அந்த அறையை விட்டு வெளியேறினான். அனுருபா கேள்விக் குறியோடு அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் பாக்கெட்டில் கைவிட்டு இரும்புக் கம்பியை விரல்களுக்குள் பதுக்கிக் கொண்டு அவளை மெல்ல நெருங்கினான்.

கேள்வி கேட்பதற்கு இன்ஸ்பெக்டர் எதற்கு நெருங்கி வர வேண்டும் என்று அவள் புரியாமல் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்தபோது, அவள் மீது அவன் பாய்ந்தான். இடது கை அவள் வாயைப் பொத்தியது. வலது கை அவள் தலை முடியைப் பற்றிக் கீழே சரித்தது. சட்டென்று அவன் கையிலிருந்த கம்பி அவள் கழுத்தில் போடப்பட்டு இறுக்கப்பட்டது.

அனுருபா அலற நினைத்தாள். இயலவில்லை. கண்கள் பிதுங்கின. கடைசி முயற்சியாக அவள் கால்களை உயர்த்தி மேஜையை உதைத்தாள்.

மேஜை மீதிருந்த கண்ணாடி ஜாடி அப்படியே கவிழ்ந்து சிலீர் என்ற பெரும் ஒலியுடன் உடைந்தது.

அவன் திடுக்கிட்டான். அந்த அறையின் கதவை உட்புறம் தாளிட்டான். அந்த செய்கையில் அனுருபா எச்சரிக்கப்பட்டு

வி. கேட்டும் என்று தாளிடாமல் விட்டது எப்பேர்ப்பட்ட தவறு என்று அவன் உணருமுன் கதவு திறந்து பிரபு நுழைந்தான். நிலைமையை நொடியில் புரிந்து கொண்டான் பாய்ந்தான்.

அனுருபாவை மட்டுமில்லாமல், அவன் கணவனையும் சமாளிக்கும் பொறுப்பில் அவன் கவனம் கலைந்த போது அனுருபாவின் பற்கள் அவன் கையில் பதிந்தன. கடித்தன.

அவன் கையுதறினான். பிரபு அவனைப் பிடித்து இழுக்க மல்லாந்தான். அனுருபா சுதந்திரமாகிவிட்ட போதிலும், கழுத்தில் மெல்லிய கோடாக கயிறு பதிந்த இடம் எரிச்சலாய் எரிந்தது. அந்த அதிர்ச்சியில் அவள் மயக்கமாய்ச் சரிந்தாள். கார்த்திக் பெருங்குரலெடுத்து "சந்திரநாத்... சந்திரநாத்..." என்று கூச்சலிடத் துவங்கினான்.

அவன் பிரபுவின் பிடியிலிருந்து திமிறினான். உள்ளங்கையில் ஒரே தள்ளு. பிரபு ஒருபுறம். இன்னொரு தள்ளு. கார்த்திக் மறுபுறம். கீழே கிடந்த கான்ஸ்டபிளை மிதித்துக் கொண்டு அவன் ராட்சஸ வேகத்தில் வெளியே ஓடினான். இரண்டு திருப்பங்கள். நிழலில் நின்ற மாருதி வேனில் ஏறி இக்னிஷனைத் திருகி... விர்ர்... மாருதி சீறிப் பாய்ந்தது.

* * *

உயரமான அறையின் உச்சியில் ஒற்றை விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இரும்புக் கதவுகள் கீச்சிட்டுத் திறந்தன. நீளமான நிழலை முன்னால் அனுப்பிவிட்டு பால்ராஜ் உள்ளே நுழைந்தார். கதவைக் காலால் மூடினார்.

அவரைப் பார்த்ததும் தரையில் கிடந்த அந்த இரண்டு பேருடைய முகங்களிலும் அதி தீவிரக் கலக்கம் சூழ்ந்தது. பால்ராஜ் ஒவ்வோர் அடியாக முன்னேறிய போது, பூட்ஸ் ஒலி சுவர்களில் மோதி எதிரொலித்தது.

மருட்சியுடன் பார்த்தவனை பால்ராஜ் சட்டைப் பகுதியில் கொத்தாகப் பற்றித் தூக்கினார். அவனுடைய உடல் ஈயின் இறக்கையைப் போலப் படபடத்தது.

"நல்லதனமாகக் கேட்டால் உண்மையைச் சொல்லமாட்டாயா?" பால்ராஜ் அவன் முகவாயை தன் வலுவான கையால் பற்றி நிமிர்த்தினார்.

"எனக்குத் தெரியாது....." என்றான், அவன் பற்களின் நடுக்கத்திலூடே.

"என்ன தெரியாது?"

"எதுவுமே தெரியாது...."



பால்ராஜின் கட்டை விரலும், நடு விரலும் கன்னங்களின் இரு புறங்களிலும் அழுத்தின. வலியின் வேதனை அவன் கண்களில் தெரிந்தது.

"என்னுடைய அடுத்த ஆயுதம் கையாக இருக்காது" என்றார் பால்ராஜ். "சொல், எதற்காக கிட்னாப் செய்தீர்கள்?"

"பணத்திற்காக.... எங்கள் இயக்கத்திற்குத் தேவையான துப்பாக்கிகளையும், வெடிகுண்டுகளையும் வாங்குவதற்குப் பணம் தேவையாயிருந்தது."

"இத்தனை நாள் எப்படிச் சமாளித்தீர்கள்?"

"தெரியாது."

"மறுபடி தெரியாது என்கிறாய்."

"சத்தியமாய்த் தெரியாது."

"யார் உங்கள் தலைவன்?"

"அவரை நான் பார்த்ததில்லை. எனக்குக் கொடுக்கப்பட்ட காரியங்களை மட்டும் செய்வதே என் பழக்கம்."

அவனை விடுத்துவிட்டு பால்ராஜ் அடுத்த ஆளிடம் நகர்ந்தார். இரும்புக் கதவு கீச்சிட்டது. திரும்பிப் பார்த்தார். "சார், ஒரு அர்ஜண்ட் போன் உங்களுக்கு" என்றார் கான்ஸ்டபிள் உள்ளே நுழைந்து. "அனுருபா வீட்டிற்கு சந்திரநாத் மீண்டும் வந்தானாம்."

* * *

அனுருபாவை ஒரு டாக்டர் கவனித்துக் கொண்டிருந்தார். இன்ஸ்பெக்டர் பால்ராஜைப் பார்த்ததும் அவள் கண்களில் கண்ணீர். அந்தக் கண்ணீரின் பின்னணியில் இருந்த பீதியும், அதிர்ச்சியும் பால்ராஜிற்குப் புரிந்தன.

"இன்ஸ்பெக்டர்!" பிரபு குறுக்கிட்டான். "என் மனைவி எனக்குப் பத்திரமாக வேண்டும். பெண்களைக் கொலை செய்பவன் என்று தெரிந்திருந்தும் ஒரு பைத்தியக்காரனைத் தப்பவிட்டது போலீஸின் கையாலாகாத்தனம். இரண்டாவது தடவையாக அவள் அவனிடமிருந்து தப்பி விட்டாள். மூன்றாவது முறையும் அந்த அதிர்ஷ்டம் இருக்குமா தெரியவில்லை."

"நானும் அதையேதான் சொல்ல வந்தேன். அனுருபாவை முற்றிலும் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன். அதற்கு உங்கள் வீடு ஏற்றதல்ல. கமிஷனரின் வீட்டில் மாடியில் அவளுக்கு இடம் ஒதுக்க ஏற்பாடாகியிருக்கிறது. சந்திரநாத் பிடிபடும்வரை அவள்

அங்கு இருப்பதுதான் நல்லது'' என்றார் பால்ராஜ்.

டெலிபோன் ஒலித்தது. அனுசூயா தூக்கிவாரிப் போட்டுத் திரும்பிப் பார்த்தாள். பிரபு விரைந்து போய் ரிசீவரை எடுத்தான். அவன் முகம் இருண்டு இறுகியது.

''டேய்.... உன்னை...., உன்னை''...'' என்றவனது குரல் நடுங்கியது.

ரிசீவரை வைத்தான்.

''சந்திரநாத்திடமிருந்து போன். போலீஸின் பாதுகாப்பை உடனே விலக்கிக் கொள்ளாவிட்டால் வெடிகுண்டு வீசி வீட்டையே நொறுக்கிவிடுவானாம். சொல்லிவிட்டுப் போனை கட் பண்ணிவிட்டான்.''

''பயப்படாதீர்கள்.....'' என்றார் பால்ராஜ். ''உங்கள் எல்லோருக்கும் கமிஷனர் வீட்டில் தங்குவதற்கு ஏற்பாடு செய்து விடுகிறேன்.''

அனுசூயா, நம்பிக்கையில் சொல்லிய பேதை திரும்பியவளாக, கண்களை மூடிக் கொண்டாள்.

* * *

கமிஷனர் வீடு.

பால்கனியில் நாற்காலிகள் எதிரெதிராகப் போடப்பட்டிருந்தன.

கமிஷனர் சிகரெட் பாக்கெட்டை எடுத்து பால்ராஜிடம் நீட்டினார்.

பால்ராஜ் சற்றே தயங்கிவிட்டு, ஒரு சிகரெட்டைப் பறித்துக் கொண்டார். வாயில் பொருத்திப் பற்ற வைத்தார்.

''சந்தேகத்திற்கிடமான ஆறு மாருதி வேன்களை மடக்கியிருக்கிறோம். ஆனால் தீவிரவாதிகள் பற்றியோ எந்தவித முன்னேற்றமும் இல்லை'' என்றார் கமிஷனர் புகையை வான் நோக்கி ஊதி.

''ஒன்றிரண்டு நாட்கள் என்றால் பரவாயில்லை சார். சந்திரநாத் சிக்குவதற்கு அதிக நாட்களானால் அதுவரை உங்கள் வீட்டில் அனுசூயாவின் குடும்பத்தைத் தங்க வைப்பது உங்களுக்குக் கஷ்டமாயிருக்காதா?''

''நோ ப்ராப்ளம்'' என்றார் கமிஷனர். ''என் கவலையெல்லாம் இன்னும் இரண்டு நாட்களில் பிரதமர் மெட்ராஸ் வரப் போகிறார். அதற்குள் சந்திரநாத்தை மடக்காவிட்டால் செக்யூரிட்டி ஏற்பாடுகளில் முழுக்கவனம் செலுத்த முடியாதே என்பதுதான்.''

''மிஸ்டர் ரிச்சர்டுக்குக் கொடுத்ததைவிட இன்னும்



அதிகமான பாதுகாப்பு பிரதமருக்குக் கொடுக்கப்பட வேண்டும் [illegible].''

''நாளைக் காலையில் என் ஆபீஸில் போலீஸ் ஆபீஸர்களின் மீட்டிங் இருக்கிறது பால்ராஜ். அங்கு நாம் எந்தக் குறைபாடுமின்றி செக்யூரிட்டி அமைப்பதற்குத் திட்டமிட வேண்டும்.''

''யெஸ் சார். பிடிபட்ட இரண்டு பேரிடமும் அதிகமான விவரங்கள் எனக்கு கிடைக்கவில்லை....''

பால்கனி வாசலில் நின்று விரைப்பாக சல்யூட் அடித்த கான்ஸ்டபிளை இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

''ஒயர்லெஸில் அர்ஜண்ட் மெஸேஜ் சார்....''

''என்னவாம்?''

''பல்லாவரம் அருகே இரயில்வே லைனில் இன்ஸ்பெக்டர் உடையில் ஒருத்தன் அடிபட்டுச் செத்துக் கிடக்கிறானாம். பொய் மீசையை விலக்கிவிட்டுப் பார்த்தால் அது சந்திரநாத் என்று தோன்றுகிறதாம்!''

## 12

அரசாங்க மார்ச்சுவரி. வாழ்க்கையில் பெரும் தத்துவத்திற்கு விளக்கமாக வரிசையாக உயிரற்ற உடல்கள்.

பிரபு பின்னால் தொடர பால்ராஜ் அந்தக் குளிரூட்டப்பட்ட அறையில் மார்ச்சுவரிப் பணியாளரின் பின்னால் நடந்தார். கடைசிக் கோடியில் இருந்த உடலருகே நின்றார். வெள்ளைத் துணி விலக்கப்பட்டதும், அந்த முகத்தைப் பார்த்தார்.

''சந்திரநாத்தான்..... சந்திரநாத்தேதான்'' என்றார் முனகலாக. பிரபுவின் பக்கம் திரும்பினார். ''இவன்தானா உங்கள் மனைவியைத் தூக்க வந்தவன்?''

பிரபு திடுக்கிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டான். ''வந்தவன் போலீஸ் உடுப்பில் இருந்தான். பெரிய மீசை இருந்தது. தலை முடியை மறைத்து தொப்பி....''

பால்ராஜ் அந்த பொய் மீசையை சந்திரநாத்தின் முகத்தில் பொருத்தினார். போலீஸ் தொப்பியை மாட்டிவிட்டார்.

''இப்போது பாருங்கள்.''

''எனக்கு அருவருப்பாயிருக்கிறது இன்ஸ்பெக்டர்.... குமட்டிக் கொண்டு வருகிறது....''

''அதனால்தான் நான் அனுசூயாவைக் கூட்டி வராமல்

உங்களைக் கூட்டி வந்தேன். நீங்கள் ஒத்துழைத்தால்தான் எங்களால் ஒரு முடிவிற்கு வர முடியும். மிஸ்டர் பிரபு....''

பிரபு தயக்கத்துடன் திரும்பிப் பார்த்தான்.

''அந்தக் கண்கள்! கண்களைப் பார்க்காமல் என்னால் உறுதியாகச் சொல்ல முடியாது இன்ஸ்பெக்டர். ஆனால் இவன்தான் என்று நினைக்கிறேன்.''

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் வெள்ளைத் துணியை இழுத்து மூடினார்.

பிரபுவின் முதுகில் கை வைத்து மெல்ல அவனை நகர்த்திக் கொண்டு வெளியே வந்தார்.

போலீஸின் பாதுகாப்பிலிருந்து தப்பினான். முட்டாள். எத்தனை பேருடைய கழுத்தை நெரித்துக் கம்பி போட்டு இறுக்கிக் கொன்றிருக்கிறான். கடைசியில் ரயில் சக்கரம் அவன் கழுத்தையே துண்டித்து விட்டது'' என்றார்.

''போலீஸாலும், சட்டத்தாலும் கொடுக்க முடியாத தண்டனையை கடவுள் அவனுக்குக் கொடுத்து விட்டார்'' என்றான் பிரபு.

''அனுசூயாவைக் 'கொலை' செய்ய முயற்சி செய்தபோது போட்டிருந்த அதே போலீஸ் டிரஸ்ஸுடன் அவன் அடிபட்டுச் செத்திருக்கிறான். இனி அவனால் இளம் பெண்களுக்கு ஆபத்தில்லை.''

''அனுசூயாவிற்கு இனிமேல் ஆபத்தில்லையே, இன்ஸ்பெக்டர்?''

''அப்சொல்யூட்லி நோ.''

''நான் அவளை எங்கள் வீட்டிற்கு அழைத்துப் போகலாமா?''

''அப்ஸொல்யூட்லி யெஸ்.''

பிரபு அவருடன் கை குலுக்கிவிட்டுத் தன் பைக்கை நிறுத்தியிருந்த இடத்திற்கு வந்தான்.

பால்ராஜ் ஜீப்பை நோக்கி நகர, ''இன்ஸ்பெக்டர்!'' என்ற அழைப்புக் குறுக்கிட்டது. திரும்பிப் பார்த்தார்.

இளங்கோ! அவனுடைய வழக்கமான ஜோல்னாப் பையுடன் இருட்டிலிருந்து வெளிப்பட்டான்.

''ஹலோ இளங்கோ..... என்ன இந்தப் பக்கம்?''

''என் மகனுக்குப் பத்து வயது. ஹார்ட்டில் சின்ன ஓட்டை. அதற்காக ஒரு டெஸ்ட் செய்ய ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தேன்.''

''தச.... தச.....'' பால்ராஜ் பரிதாபப்பட்டார்.

''உனக்குத் தெரியுமா, உன் ஹீரோ செத்து விட்டான்.''



''கேள்விப்பட்டேன் இன்ஸ்பெக்டர். எனக்கு மிகவும் வருத்தமாயிருந்தது. ஒரு தொடர் கதைக்குப் பாதியில் முற்றும் போட்டதுபோல் இருக்கிறது.''

''அவனைப் பற்றி நீ எழுதும் கட்டுரைத் தொடருக்கு இன்னும் மவுசு வந்து விட்டது. எல்லோரும் அதைப் பற்றித்தான் பேசப் போகிறார்கள் இனிமேல்....''

''எனக்கு எப்போதும் ஸ்பெஷல் சலுகை தருவதாகச் சொல்லியிருக்கிறீர்கள் இன்ஸ்பெக்டர்....''

''ஆமாம்....''

''சந்திரநாத்தின் முகத்தை நான் ஒரு தடவை பார்க்க வேண்டும். ஒரே ஒரு போட்டோ ப்ளீஸ்....''

''சந்திரநாத் செத்துக் கிடந்ததை எடுத்த போட்டோக்களைப் பத்திரிகைகளுக்குக் கொடுப்போம் இளங்கோ.''

''மற்ற பத்திரிகைகளுக்குக் கொடுக்கும் அதே போட்டோதானா எனக்கும்? எனக்காக மார்ச்சுவரியில் ஒரு போட்டோ ப்ளீஸ்.''

சந்திரநாத்தைப் பற்றிய முக்கியமான விவரங்களைத் தந்து உதவியவன் என்பதால், இளங்கோவின் கோரிக்கையை ஒட்டு மொத்தமாகத் தட்டிக் கழிக்க முடியவில்லை பால்ராஜால்.

''சரி வா'' என்றார்.

மார்ச்சுவரியிலிருந்து வெளிப்பட்டதும், ''இன்னொரு ஹெல்ப், இன்ஸ்பெக்டர்'' என்றான் இளங்கோ.

''என்ன?''

''சந்திரநாத்தால் கடைசியாக தாக்கப்பட்ட அனுசூயாவின் பேட்டி ஒன்று வேண்டும்.''

நோ.... நோ.... அவளே அரண்டு போயிருக்கிறாள். இன்னும் ஒன்றிரண்டு நாட்கள் போகட்டும். போலீஸ் பந்தோபஸ்தை விலக்கிக் கொண்டதே அவளும், அவள் குடும்பமும் நிம்மதியாக இருக்கட்டுமே என்றுதான்.''

''போட்டோவெல்லாம் வேண்டாம். நேரில்கூடப் போகவில்லை. போனிலேயே இரண்டு மூன்று கேள்விகள் மட்டும். இந்த இதழிற்கு எனக்குச் சூடான வரிகள் கிடைக்கும் இன்ஸ்பெக்டர். நீங்கள் போன் பண்ணி முன்னதாகச் சொல்லிவிட்டால் போதும்....''

''ஓ.கே.''

''நாளைக்கே மீண்டும் உங்களைச் சந்திக்கிறேன், இன்ஸ்பெக்டர்'' இளங்கோ விடைபெற்று நடந்தான்.

* * *

அனுசூயா ரிசீவரை காதிலிருந்து சற்று தள்ளியே வைத்துக் கொண்டாள். என்னமாய்ச் சுத்துகிறான் இந்த திருடன்!

"சந்திரநாத்தின் இருப்பிடம் கம்பியிலிருந்து தப்பித்ததைப் பற்றி என்ன சொல்கிறீர்கள் அனுசூயா?"

"ஒருமுறை இல்லை இரண்டு முறை தப்பித்திருக்கிறேன். கடவுள் என் பக்கம் இருக்கிறார் என்றுதான் எனக்குத் தோன்றியது."

"சந்திரநாத் இறந்து போனது பற்றி?"

"எத்தனை கொலைகள் செய்தவனாயிருந்தாலும் அவனுடையதும் ஒரு மனித உயிர் என்றுதான் நான் நினைக்கிறேன். ரயிலில் அடிபட்டுச் செத்தது மிகவும் துரதிர்ஷ்டவசமானது."

"ஷாக்கிலிருந்து பூரண விடுதலையாகி விட்டீர்களா?"

"ஓரளவிற்கு. என் கணவரும், தம்பியும் என்னுடன் இருக்கும் உற்சாகத்தில்தான் என்னால் சமாளிக்க முடிகிறது."

"நான் உங்களை எப்போது சந்திக்கலாம், அனுசூயா?"

"இன்னும் ஒரு வாரத்திற்கு நான் யாரையும் சந்திக்க விரும்பவில்லை."

***

மகாபலிபுரத்தில் உச்சி சூரியன் தகித்துக் கொண்டிருந்தது. ஜீப்பின் இருப்பிலிருந்தும் அனல்காற்று வீசியது. பால்ராஜ் இறங்கினார்.

சுற்றுலாப் பயணிகள் வரக்கூடாது என்று எல்லை கட்டியிருந்த பெரிய கயிறுகளைத் தாண்டிக் குதித்தார்.

கடற்கரையின் ஒரு சமயத்தில் போலீஸ் தலைகள் சேர்ந்திருந்தன. பிரதமரின் வருகை காரணமாக, பாதுகாப்பு ஏற்பாடு கருதி அந்த செவ்வகப் பிரதேசமே போலீஸாரின் கட்டுப்பாட்டில் இருந்தது. கயிற்று விளிம்புக்கு வெளியே ஆர்வமான டூரிஸ்ட்டுகள் எம்பி எம்பிப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"பிரதமர் பேசும் மேடை அமைப்பதற்காக, இங்கே தோண்டியபோது இது கிடைத்தது, சார்."

பெரிய அடர்த்தியான பாலிதீன் உறையைத் தாண்டி, சூரிய வெளிச்சத்தில் அந்த நடராஜர் சிலை மின்னியது.

"போன மாதம், திருநாராயணபுரம் கோயிலில் திருடுபோன உற்சவ மூர்த்தி சார்...."

"அ... ஆமாம்... அதேதான்" என்றார் பால்ராஜ். "இது எப்படி இங்கே வந்தது?"



"டூரிஸ்ட்டுகள் வந்துபோகும் இடம் சார் இது. முதுகில் பையை மாட்டிக்கொண்டு வரும் வெளிநாட்டுப் பயணிகளுக்கு வசதியாக இல்லை. பெரிய நகரை எடுத்துப் போக வேண்டும் என்று நினைத்தால் வசதியாக சமுத்திரக் கரை. சிலையைத் திருடியவன் இங்கே கொண்டு வந்து புதைத்திருக்கிறான், சார். இந்த இடம் பல வெளிநாட்டவர் நடமாட்டம் இருப்பதால் சாதாரணமாக யார் பார்வையிலும் தென்படாது."

தீவிரவாதிகளின் இருப்பிடத்தில் பார்த்த ஆல்பம் பாண்டியன் நினைவில் இடறியது. அந்த ஆல்பத்தில் இந்த நடராஜர் சிலையும் நிச்சயம் இடம் பெற்றிருந்தது.

"எத்தனை ஜனம் கூடிவிட்டது பார்... ஒரு கோணிப் பையில் போடுங்கய்யா, முதலில்.... அப்புறம் இதே ஏரியாவில் எல்லா சதுர மீட்டர்களையும் தோண்டிப் பாருங்கள். இன்னும் சிலைகள் கிடைத்தாலும் கிடைக்கலாம். நாளைக்கு பிரதமர் மீட்டிங் முடிந்துபோன பிறகுகூட இங்கே போலீஸ் பந்தோபஸ்து தொடர்ந்திருக்கட்டும்."

"யெஸ் சார்...."

***

சுபிக்ஷா டெலிவிஷன் கேமிராவிற்கு முன் அந்த நடராஜர் சிலையை முன்னும், பின்னும் திருப்பிக் காட்டினாள். குரலில் மெல்லிய பெருமிதம்.

"மகாபலிபுரம் கடற்கரையில் இன்றைக்கு இந்தச் சிலை கிடைத்தது. இது சென்ற மாதம் திருநாராயணபுரம் கோயிலிலிருந்து திருடப்பட்ட தும்பிமான் சிலை. கிட்டத்தட்ட முப்பது லட்ச ரூபாய் மதிப்புள்ள இந்த சிலையைத் திருடியவர்கள் யார் என்று போலீஸ் மிகவும் மும்முரமாகப் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளது."

குரல் மட்டும் பின்னணியில் தொடர்ந்து கொண்டிருக்க, கேமிரா இப்போது மகாபலிபுரம் கடற்கரையை வட்டமிட்டு சிலை கண்டெடுக்கப்பட்ட இடத்தைக் குறிப்பிட்டு முன்னேறியது.

"இதோ இந்த இடத்தில்தான் சிலை கண்டெடுக்கப்பட்டது."

டெலிவிஷனைப் பார்த்துக் கொண்டிருந்த அனுசூயா நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"இந்த இடம் ஞாபகமிருக்கிறதா, பிரபு?"

"எந்த இடம்?"

"நாமெல்லாம் சேர்ந்துதானே பிக்னிக் போனோம்?"

''ஆமாம், ஆமாம்...'' என்றான் பிரபு, நினைவு வந்தவனாக, ''மகாபலிபுரத்திற்கு டூர் போயிருந்தோம். ஆனால் இந்த இடத்தை நான் பார்க்கவில்லை...''

''நாங்கள் பார்த்தோம்'' என்றாள் அனுரூபா.

''நீங்கள் என்றால்?''

''நான், சந்தியா, மாயா, மூவரும்...''

* * *

''என்ன சொல்லுகிறீர்கள் அனுரூபா?'' என்றார் பால்ராஜ் சற்றே திகைப்போடு.

''பாரதி ட்ரேவல் ஏற்பாடு செய்திருந்த ஒரு சுற்றுலாவில் நாங்கள் கலந்து கொண்டோம் என்று உங்களிடம் சொன்னேனே, இன்ஸ்பெக்டர்!'' அனுரூபாவின் குரல் உணர்ச்சிகளால் கீச்சிட்டிருந்தது.

''ஆமாம்...''

''பல்லவர்கள் எழுப்பியிருந்த பெரிய பெரிய சிற்பங்களைப் பார்த்துப் பிரமித்திருந்தோம். காலையிலிருந்து சுற்றிச் சுற்றி வந்ததில் களைப்பாயிருந்தது. கால்கள் வலியெடுத்தன என்று எல்லோரும் கடற்கரை மணலில் உட்கார்ந்துவிட்டோம். எனக்கு... எனக்கு...'' அனுரூபாவின் முகம் சற்றே கூச்சத்தாலே சிவந்தது. ''எனக்கு பாத்ரூம் போக வேண்டும் போலிருந்தது. ஒதுக்குப்புறமான இடத்தில் வரிசையாய்த் தென்னை மரங்கள் வளர்ந்திருந்ததைப் பார்த்தேன். மாலை நேரம் முடிந்து இரவு துவங்குகிற நேரம் என்பதால் யாரும் கவனிக்க மாட்டார்கள் என்ற தைரியம் வந்தது. பிரபுவையும், கார்த்திக்கையும் விட்டு விட்டு மரத்தடிக்கு நான் போனேன். என்னைப் போலவே எங்கள் பஸ்ஸில் வந்த சந்தியாவும், மாயாவும் அங்கே வந்திருந்தார்கள்.''

பால்ராஜ் நாற்காலி நுனிக்கு நகர்ந்து வந்தார்.

''மூவரும் எழுந்தபோது, மரங்களினூடே இந்தப் பள்ளம் தெரிந்தது. அரை இருட்டில் ஒருவன் மணலை வாரியிறைத்து மூடிக் கொண்டிருந்தான். எதேச்சையாக அவன் நிமிர்ந்தான். எங்கள் மூவரையும் பார்த்தான். அவனை அங்கே பார்த்ததும் நாங்கள் மூன்று பேரும் திடுக்கிட்டோம். இன்றைக்கு டெலிவிஷனில் அந்தக் குறிப்பிட்ட இடத்தைக் காட்டியதும், எனக்கு அந்தக் காட்சி நினைவுக்கு வந்துவிட்டது. ஒருவேளை அன்றைக்கு அவன் மணலை வாரியிறைத்து மூடிக் கொண்டிருந்தது இந்த நடராஜர் சிலையைத்தானோ என்று தோன்றியது....''



இருக்கலாம். நிச்சயம் வாய்ப்பிருக்கிறது'' என்றார் பால்ராஜ்.

''அவனை நன்றாகப் பார்த்தீர்களா, அனுரூபா?''

''சூரியன் மறைந்து கொண்டிருந்த பொழுது. அவனை முழுத் தெளிவாகப் பார்த்ததாகச் சொல்ல முடியாது. ஆனால் அந்த ஆளை இன்னொரு தடவை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். மூக்கிப் பார்... அவன் கண்களை நன்றாகப் பார்த்து விட்டேன்.''

''இந்த போட்டோவைப் பாருங்கள்.''

[illegible]ந்தர்நாத்தின் புகைப்படம். ''கிட்டத்தட்ட இதே உயரம், இதே பருமன். ஆனால் இவன் இல்லை, இன்ஸ்பெக்டர்.''

''இந்தப் போட்டோக்களை கவனியுங்கள்.''

நிக்கர்ட்டைக் கடத்தி அவரிடம் சிக்கிய நீல்ரபாடிவேலின் போட்டோக்கள்.

''ஊஹ்ஹூம்... இது இல்லை, இதுவும் இல்லை'' என்று அனுரூபா தலையை இடதும் வலதுமாக ஆட்டினாள்.

''இந்த ஆல்பத்தில் சிலை திருட்டு ஸ்பெஷலிஸ்டுகளின் போட்டோக்கள் இருக்கின்றன. இவற்றைப் பாருங்கள்.''

அனுரூபா ஒவ்வொரு புகைப்படமாகப் பார்த்தாள். மெல்லத் தலையசைத்து மறுத்து ஒவ்வொன்றையும் ஒதுக்கினாள்.

''இந்த போட்டோக்களில் எதிலும் அவன் இல்லை இன்ஸ்பெக்டர்.''

''துரதிர்ஷ்டம்!'' என்றார் இன்ஸ்பெக்டர் பால்ராஜ். நாளைக்கு காலையிலிருந்து நான் பிரதமர் விசிட் காரணமாக ரொம்ப பிஸியாயிருப்பேன். அவர் தில்லி திரும்பியதும், கொஞ்சம் ஃப்ரீயானவுடன், இன்னொரு ஆல்பத்தை எடுத்து வருகிறேன்.''

பால்ராஜ் எழுந்தார்.

''இன்றைக்கு ராத்திரி இவள் தூங்குவாளா என்று சந்தேகம்தான், இன்ஸ்பெக்டர்'' என்றான் பிரபு. ''ரொம்ப எக்ஸைட்டாக இருக்கிறாள் இவள்.''

''கவனித்துக் கொள்ளுங்கள்'' என்று பால்ராஜ் புறப்பட்டார்.

* * *

அனுரூபாவிற்கு திடுக்கென்று விழிப்பு வந்தது. பார்வை தலைமாட்டில் இருந்த சிறிய அலாரம் டைம்பீஸிற்கு நகர்ந்தது. ரேடியம் வெளிச்சத்தில் நேரம் பன்னிரண்டு இருபது என்று

தெரிந்தது.

இரவு மெல்லிய இருட்டை ... திரும்பிப் படுத்திருந்தான்.

அனுசூயா கட்டிலிலிருந்து இறங்கினாள். பாத்ரூம் விளக்கைப் போட்டாள். உள்ளே நுழைந்து, கதவைச் சாத்தினாள்.

ஏதோ திடீரென்று உள்ளுணர்வு எச்சரிக்க, திரும்பிப் பார்க்குமுன் அவள் வாயைப் பின்புறமிருந்து ஒரு வலுவான கை பொத்தியது. அவள் கதவை உதைத்துச் சப்தமெழுப்ப முடியாமல் கூடவே பின்புறம் இழுத்தது. அனுசூயா மிரண்டு, நிலைமையைப் புரட்டிப் பார்த்தாள்.

அவனை உடனே அடையாளம் புரிந்தது.

''நீயா?'' என்றாள். ஆனால் வார்த்தைகள் வெளிவராமல் அவன் விரல்கள் தடுத்தன. அவன் கையில் முளைத்த கத்தி அவளுடைய வெண்ணிறமான கழுத்தில் பதிந்தது.

## 13

வாய் பொத்தப்பட்டிருந்ததால் விழிகளாலேயே ''நீயா?'' என்று தன் ஆச்சரியத்தை, அதிர்ச்சியைக் காட்டினாள் அனுசூயா.

''ஆமாம், நான்தான். இரண்டுமுறை தப்பி விட்டாய். இந்த முறை நீ தப்பிக்க போவதில்லை.'' அவன் கத்தியின் நுனியை அவள் கழுத்தில் பதித்தான்.

அனுசூயாவின் கண்கள் மிரட்சியில் விரிந்தன. தெறித்து விடுவதுபோல் பெரிதாயின.

''சொல். இன்ஸ்பெக்டரிடம் என்னென்ன சொன்னாய் இதுவரை?''

''அதை நேரடியாக என்னிடமே கேட்க வேண்டியதுதானே?'' என்று ஜன்னல் திறப்பிலிருந்து குரல் வந்தது.

இன்ஸ்பெக்டர் பால்ராஜ், கையில் ரிவால்வருடன்.

அவன் திடுக்கிட்டு திரும்பினான்.

''ஆட்டம் முடிந்து விட்டது இளங்கோ. கத்தியைக் கீழே போடு.''

அனுசூயாவின் கழுத்தில் கத்தியை வைத்திருந்த இளங்கோவின் முகத்தில் அதிர்ச்சி மெல்ல விலகியது. திமிரான ஒரு நிறம் வந்து சேர்ந்தது.



''இந்த நிமிடம்வரை என் கைதான் மேலோங்கியிருக்கிறது இன்ஸ்பெக்டர். நீங்கள்தான் ரிவால்வரைக் கீழே போட வேண்டும். இல்லாவிட்டால், அனுசூயாவின் கழுத்தைப் பனிக்கட்டியை சீவுவது போல சீவிவிடுவேன்... சீவி!''

பால்ராஜ் ஜன்னல் விளிம்பிலிருந்து உள்ளே குதித்தார்.

''இந்தா'' என்று ரிவால்வரைத் தூக்கி அவன் மீது எறிந்தார்.

மிகப் பழைய தந்திரம். ஆனால் இளங்கோ ஏமாந்தான். அனிச்சை செயல்களால் உந்தப்பட்டு, ரிவால்வரைப் பிடிக்கும் முட்டாள்தனமாக அவன் கை நீண்டுவிட்டது.

பால்ராஜ் அவன்மீது பாய்ந்தார். அவருடைய பூட்ஸ் கால் இளங்கோவின் வலது மணிக்கட்டை மோதியதில் கத்தி கீழே விழுந்தது.

அனுசூயா விடுபட்டுப் பாத்ரூம் கதவைத் திறந்து வெளியே ஓடினாள்.

இளங்கோ பால்ராஜ் மீது காண்டாமிருகம் போல பாய்ந்தான். கடைசித் தருணத்தில் அவர் விலக, அவன் வாஷ் பேஸினில் மோதி, பீங்கானை நொறுக்கிக் கொண்டு கீழே விழுந்தான். சரிந்தபோது அவன் நெற்றிப் பொட்டில் பால்ராஜின் ரிவால்வர் பதிந்திருந்தது.

***

இளங்கோ தன் உதட்டோரம் வழிந்த ரத்தத்தைத் தோளில் துடைத்துக் கொண்டான். இரு கைகளும் பின்புறம் கட்டப்பட்டிருந்தன. இடுப்பில் கிழிந்த அரை டிராயர் மட்டும். உடம்பெங்கும் வியர்வை ஊற்று. புருவத்தில் இருந்து இறங்கி விழிகளில் தொந்தரவு செய்யும் வியர்வைக் கோடு.

தலையைச் சிலிர்த்து நிமிர்ந்தான்.

''என்னை எப்படிக் கண்டுபிடித்தீர்கள், இன்ஸ்பெக்டர்?''

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் இருநூற்று ஐம்பது வாட் வெளிச்சம் அவன் முகத்தில் ஓங்கி அடிக்கிற மாதிரி விளக்கைத் திருப்பி வைத்தார்.

''உன் கையெழுத்து'' என்றார். ''சந்திரநாத் பற்றி நீ எழுதிய கட்டுரையை என்னிடம் ஒருமுறை படிக்கக் கொடுத்தாயே, அதே கையெழுத்தில் 'என்னுடைய அடுத்த பலி அனுசூயா' என்ற குறிப்பை சந்திரநாத் ஒளிந்திருந்த வீட்டில் கண்டுபிடித்தேன். முதல் சந்தேகம் வந்தது. கபிலனின் வீட்டில் பலத்த பாதுகாப்பில் அனுசூயா இருந்தாள். சந்திரநாத் இறந்ததும், இத்தனை நாள் அவனால்தானே அவளுக்கு ஆபத்து, இனிப் பாதுகாப்புத் தேவையில்லை என்று விலக்கிக் கொண்டபோதிலும், அனுசூயாவின் வீட்டை மிகரகசியமாகக்

கண்காணிக்க நான் செய்திருந்த ஏற்பாடு உனக்குத் தெரியாது. நீ குழாய் பிடித்து ஏறி, பாத்ரூம் ஜன்னலை அறுக்கத் தொடங்கியதும் எனக்குத் தகவல் வந்து விட்டது. உடனே நான் வந்து விட்டேன். உன்னைக் கையும் களவுமாகப் பிடித்து விட்டேன், சொல். நீதானே சந்தியாவைக் கொன்றவன்? மாயாவைத் தீர்த்தவன், பரதனை முடித்தவன்?"

"உங்களால் நிரூபிக்க முடியாது."

"முடியும். பரதனின் ஆஃபீஸில் சந்திரநாத்தின் கைரேகைகள் இல்லை. உன் ரேகை கிடைக்கும். மேலும் என்னிடமும் சிகரெட் லைட்டர்கள் இருக்கின்றன. நகக் கண்ணில் ஏறக் கூர்மையான குண்டூசிகள் இருக்கின்றன."

"இந்த சலசலப்பிற்கெல்லாம் பயப்பட மாட்டேன் இன்ஸ்பெக்டர்."

"சரி. இதை மட்டும் கேட்டுக் கொள். முதலில் இறந்து போனாளே சந்தியா. அவளைக் கல்யாணம் செய்துகொள்ள இருந்த தேவகுமார் பற்றிச் சொல்கிறேன். அவன் வெறியுடன் இருக்கிறான். தான் காதலித்த சந்தியாவைக் கொன்ற உன்னை அவன் மன்னிக்கத் தயாராய் இல்லை. உன் மகனுடைய கழுத்தை இரும்புக் கம்பி போட்டு அவன் கையாலேயே கொன்றால்தான் சமாதானமாவேன் எனத் துடிக்கிறான். அவனை நான் இதுவரை அடக்கி வைத்திருக்கிறேன். என்னை மீறி அவன் போய் விடுவான். என்னால் ஒன்றும் செய்ய முடியாது."

"இன்ஸ்பெக்டர்."

"முடிவு உன் கையில் இருக்கிறது இளங்கோ."

அன்றைக்கிரவு இளங்கோ பேசச் சம்மதம் தெரிவித்தான்.

***

"இந்தியாவில் உள்நாட்டுக் கலகத்தைத் தூண்டிவிட்டு ஆதாயம் தேடும் ஒரு வெளிநாட்டு ஏஜன்ஸியுடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. அவர்களுக்கு நான் உதவினால் எனக்கு அவர்கள் உதவுவதாகச் சொன்னார்கள். என்னைத் தலைவனாக்குவதாக வாக்குறுதி அளித்தார்கள்."

"நீ ஒப்புக் கொண்டாய்?"

"ஆம். எனக்கு இந்தியாவைப் பிடிக்கும். ஆனால் அதைக் கெடுக்கும் அரசியல்வாதிகளைப் பிடிக்காது. அவர்கள் சுயநலவாதிகள். இந்திய மக்களின் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் இவற்றையெல்லாம் அவர்கள் ஒழிக்கத் தவறிவிட்டார்கள். நான் ஒழிக்க நினைத்தேன். ஒரே வழி நான் தலைவனாவது. தலைவனான பின் சர்வாதிகாரியாவது.



ஹிட்லர் போல் முசோலினி போல் ஸ்டாலின் போல் சர்வாதிகாரியானால் மக்களுக்கு நன்மை செய்ய முடியும் என்று நினைத்தேன்."

"அதற்கும் மாயா, சந்தியாவைக் கொன்றதற்கும் என்ன தொடர்பு?"

"நான் நேராகப் போயிருக்கிறேன் இன்ஸ்பெக்டர். சந்தியா, மாயா, பரதன் எல்லாம் களையெடுப்புகள். என்ன நடந்தது என்று முதலில் இருந்து நான் சொல்கிறேனே."

"சொல்."

"நான் தலைவனாக விரும்பினேன். அயல்நாட்டு சக்திகளுடன் ஒப்பந்தம் கொண்டு, இளைஞர் மறுமலர்ச்சி புரட்சிக்குழு என்ற அமைப்பை என் தலைமையில் நான் திரட்டினேன். வேலையற்ற, வறுமையில் நம்பிக்கை இழந்து இருக்கும் இளைஞர்கள் என் குழுவில் சேர்ந்தார்கள். என் சிமெண்ட் தொழில், புரட்சிக்குழு உறுப்பினர்களைத் திரட்ட எனக்கு உதவியாய் இருந்தது."

இளங்கோ நீர் கேட்டான். கைகளால் அவன் வாயில் நீர் ஒரு கப்பாக ஊற்றப்பட்டது. பரிதாபமாகத் தெரிந்தான்.

"மேலே சொல்."

"வி.ஐ.பி.க்கள், அரசியல்வாதிகள் கலந்து கொள்ளும் விழாக்கள் பற்றி முன்கூட்டித் தெரிந்ததால் திட்டமிட்டு என்னால் குழப்பமேற்படுத்த முடிந்தது. வெடிகுண்டுகள், துப்பாக்கிகளை வழங்கினார்கள் அவர்கள். ஆனால் எங்கள் இயக்கத்திற்கான செலவுகளை நாங்களும் ஏற்க வேண்டும் என்ற சூழ்நிலை உருவானது. இந்தியச் சிலைகளுக்கு வெளிநாடுகளில் இருக்கும் அமோக மதிப்பை நான் ஆச்சரியத்துடன் கவனித்து வந்தவன். எங்கள் பணத் தேவையைச் சந்திக்க கோவில்களில் இருந்து சிலைகளைத் திருடினோம். சிலைத் திருட்டு எப்போதும் நடப்பது. ஆனால் போலீஸ் எப்படியும் பொதுவாகச் சிலை திருடுபவர்களைத்தான் கண்காணிப்பார்கள் என்று நம்பினேன். அதே போலத்தான் நடந்தது. சிலைத் திருட்டுக்காக நான் எங்கேயும் மாட்டவில்லை. சிலை திருட உபயோகித்த நவீன கருவிகளும் வெளிநாட்டு ஏஜென்சி கொடுத்ததுதான்."

"இன்னும் நீ சந்தியா, மாயா விவகாரத்தைத் தொடவில்லை."

"தெரியும். தென்னிந்தியாவில் மிகப் பெரிய ஜாதிக் கலவரத்தை அடுத்த மாதம் துவக்க நாங்கள் திட்டமிட்டிருந்தோம். செலவிற்கு இருபத்தைந்து இலட்ச

ரூபாய் தேவைப்பட்டது. திருநாராயணபுரத்திலிருந்து நடராஜர் சிலையைத் திருடினோம். கடல் வழியாகத்தான் சிலைகளை அயல் நாட்டுக்கு கடத்துவது வழக்கம். அதனால் சிலையை எப்போதும் போல் மகாபலிபுரத்தில் கடற்கரை மணலில் நான் புதைத்து வைத்தேன். மூன்று நாள் கழித்து அதை வெளிநாட்டிற்குக் கடத்த ஏற்பாடு. சிலையைப் புதைத்துவிட்டு நான் நிமிர்ந்தபோது தற்செயலாக மூன்று பெண்கள் என்னைப் பார்த்துவிட்டதைக் கவனித்தேன்."

"சந்தியா, மாயா, அனுசுயா?"

"ஆம். ஆனால் அந்த நிமிடம் அவர்களுக்கு என்மீது எந்த சந்தேகமும் வந்திருக்காது என்பதால் அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. இரண்டு நாட்கள் கழித்து ஒரு செய்தி கிடைத்தது. மகாபலிபுரம் கடற்கரையில் விருந்தினர்க் கலைக்கூடம் ஒன்றிற்கு அடிக்கல் நாட்டுவதற்காக, பிரதமர் சென்னை வரப்போகிறார் என்ற செய்தி. பிரதமரின் பாதுகாப்பு கருதி கடற்கரையைச் சுற்றிலும் கட்டுப்போலீஸ் பந்தோபஸ்து போட்டதும் அதிர்ந்தேன். எங்கே நான் நடராஜர் சிலையைப் புதைத்து வைத்தேனோ அங்கேயே பிரதமர் பேசும் மேடை அமைக்கப்பட இருந்தது. புதைத்து வைத்த நடராஜர் சிலை எப்படியும் கண்டெடுக்கப்படும். போலீஸ் விசாரிக்கத் தொடங்கினால், அந்த மூன்று பெண்களும் சாட்சி சொல்வார்கள். நான் மாட்டுவேன். என்னைப் பிடித்தால் சிலையோடு விவகாரம் முடிந்து விடாது. எங்கள் புராதனக் குழு பற்றி விவரங்களெல்லாம் வெளிச்சத்திற்கு வரும். சிலந்தி வலை போல மாபெரும் வலை விரியும். நூற்றுக்கணக்கானவர்கள் சிக்குவார்கள்."

"இதையெல்லாம் தவிர்க்க வேண்டுமானால் சிலை கண்டெடுக்கப்படும் முன்பே உன்னைப் பார்த்த பெண்களை மௌனமாக்க வேண்டும் என்று தீர்மானித்தாய் இல்லையா?"

"அதேதான். அந்தப் பெண்கள் யார்? எனக்குத் தெரியாது. முகங்கள் மட்டும் நினைவில் இருந்தன. எப்படிக் கண்டுபிடிப்பது என்று தவித்த நேரத்தில் அதிர்ஷ்டம் என் பக்கம் சாய்ந்தது. ஒரு சிக்னலில் நின்றிருந்த மோட்டார் சைக்கிளின் பின்னால் நான் தேடிய மூன்று பெண்களில் ஒருத்தி. தொடர்ந்தேன். சந்தியா. கல்லூரி மாணவி. டான்ஸ் கற்பவள். தேவகுமாரைக் காதலிப்பவள். அவனைக் கல்யாணம் செய்ய இருப்பவள். அத்தனை விவரங்களையும் அறிந்தேன். அவளைக் கொல்ல முடிவு செய்தேன். அவளிடமே மற்ற இரு பெண்கள் பற்றி தகவல் அறியவும் முடிவெடுத்தேன். அவளைக் கொன்று நான் மாட்டினால், பரமபத விளையாட்டில் பெரிய



பாம்பில் சறுக்கினவன் நிலைமையில் நான் இருப்பேன். மாட்டாமல் கொல்வது எப்படி? யோசித்தேன்..."

"உனக்கு சந்திரநாத் என்கிற 'டூப்' அகப்பட்டான் அப்படித்தானே?"

"கரெக்ட் இன்ஸ்பெக்டர். சந்திரநாத் ஒரு மனநோயாளி. இளம் பெண்களைக் கொன்றவன். அவனைப் பத்திரிகைக்காக அணுகியபோதுதான் அவனை ஒரு செஸ் காயினாக ஏன் பயன்படுத்தக் கூடாது என்று தோன்றியது."

"போலீசை திசை திருப்ப ஒரு வழி?"

"யெஸ். சந்திரநாத்தின் பெயரை எனக்குச் சாதகமாக நான் உபயோகப்படுத்த தீர்மானித்தபின், நான் சந்தியாவின் டான்ஸ் ஸ்கூலிற்கு போன் செய்து, தேவகுமாரின் நண்பன் சந்திரநாத் என்று அவளை அழைத்தேன். வந்தாள். என் காரில் ஏறினாள். கடத்திப் போனேன். அவளுடன் வந்த மற்ற இரண்டுபேர் யார் என்று கேட்டேன். பயந்தாள். மிரண்டாள். அவர்கள் மூன்று பேரும் தோழிகளில்லை. ஒரே டூரிஸ்ட் பஸ்ஸில் வந்தவர்கள் என்று அவள் சொன்னதை நம்பாமல் சித்ரவதை செய்தேன். சித்ரவதையில் நான் தெரிந்து கொண்டது அவளுடன் வந்த இருவரில் ஒருத்தியின் பெயர் மாயா. அப்புறம் அந்த மாயா வேலை செய்யும் ஆபீஸின் முகவரி. தெரிந்தவரை போதும் என்று தீர்மானித்து... சந்திரநாத் பெண்களைக் கொல்லும் அதே முறையில் அவளைக் கொன்றேன். அவள் கழுத்தில் கம்பி போட்டு இறுக்கினேன். சந்தியா செத்தபின் நான் அழுதேன். என்னைத் தற்செயலாகப் பார்த்த பாவம் தீர அவள் சாக வேண்டி இருக்கிறதே என்று வேதனைப்பட்டேன். அப்புறம் அவள் உடலை குரோம்பேட்டை - பல்லாவரம் தண்டவாளத்தில் தூக்கி எறிந்தேன்."

"சந்திரநாத் மீது எங்களுக்குச் சந்தேகத்தை வரவழைத்து விட்டாய்."

"ஆம். அதற்குக் கொஞ்சம் சிரமப்பட்டேன். சந்திரநாத் மீது போலீஸ் வலுவாகச் சந்தேகிக்க வேண்டுமென்றால் அவன் ஆஸ்பத்திரியிலிருந்து தப்பித்தாக வேண்டும். சந்திரநாத்தின் கதை எனக்குத் தெரியும். அவன் காதலி ஜெயஸ்ரீயை அவனிடமிருந்து பிரித்த அவளுடைய அப்பாவின் பேரில் அவன் தீராத கோபம் கொண்டிருந்தான். அவரைப் பழிவாங்க அவனுக்கு உதவுவதாக வாக்களித்தேன். ஆஸ்பத்திரியிலிருந்து அவன் தப்பிக்கத் திட்டமொன்றைச் சொன்னேன். சந்தியா கொலைபற்றி சந்தேகித்து நீங்கள் அவன் அறைக்கு வந்து ஆயுதமேதாவது ஒளித்து வைத்திருக்கிறானா

என்று பார்த்தபோது நான் வந்தேனே...''

''ஞாபகமிருக்கிறது.''

''அப்போதுதான் ஜன்னல் கம்பியை அறுக்கும் சிறு ரம்பத்தை அவனுக்குக் கொடுத்தேன். என் திட்டப்படி அவன் நர்ஸை ஏமாற்றி இன்ஜெக்ஷனைத் தவிர்த்தான். கான்ஸ்டபிளை அடித்துப் போட்டுவிட்டு ஜன்னல் வழியே வெளியேறினான். தீரே காத்திருந்த நான் என் மாருதி வேனில் அவனை அழைத்துப் போனேன். அவனுக்கென்று ஏற்பாடு செய்திருந்த வீட்டில் தங்க வைத்தேன். மாருதியை புரட்சிக் குழுவின் நடவடிக்கைகளுக்கு மட்டுமே நான் ரகசியமாக பயன்படுத்தியதால், என்னிடம் கார் இருப்பது யாருக்கும் தெரியாது.''

''என்னிடமே சந்திரநாத் அவன் காதலியின் கல்லறைக்கு வருவதைப் பற்றிச் சொன்னாயே. அவன் மாட்டாமல் இருப்பான் என்று எப்படி எதிர்பார்த்தாய்?''

''என்மேல் உங்களுக்கு லேசான சந்தேகம்கூட வரக்கூடாதில்லையா? அதனால்தான் அப்படி ஏற்பாடு செய்தேன். அவனிடம் மிஷின் கன்னைக் கொடுத்துவிட்டு மறைந்திருந்து பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். அவனை நீங்கள் கைது செய்திருந்தால் நீங்கள் உயிரோடு போயிருக்க முடியாது. என் கையில் இருந்த மிஷின் கன் உங்களைச் சுட்டிருக்கும். ஆனால் அநாவசியக் கொலைகள் கூடாது என்பதால்தான் உங்களைக் கொல்லவில்லை.''

''ஐ ஸீ''

''மாயாவை அவன் கொல்ல வேண்டும் என்று நான் எதிர்பார்த்து, மாயா மீது வெறுப்பு ஏறுவதற்காக, நான் மாயாவை எடுத்த ஒரு போட்டோவை அவன் பார்வையில் படும்படி வைத்தேன். நானும் அவனுமே மாயாவைத் தொடர்ந்தோம். அவளைக் கடைசியில் நான்தான் அடித்துப் போட்டேன். அவளை வேனில் ஏற்றும் நேரம் பார்த்துத்தான் கோபி எதிரே வந்து தொலைந்தான். அவன் என்னைப் பார்க்கக் கூடாதென்றுதான் ஹெட்லைட்டைப் போட்டு அவன் கண்களைச் செயல் இழக்கச் செய்து அவனை மோதினேன். அப்புறம் மாயாவுடன் வந்து சித்ரவதை செய்தேன். அனுசுயா பற்றி அவனுக்குத் தெரியவே இல்லை. அவனை உயிரோடு விடும் உத்தேசம் எனக்கு இல்லை. எனவே அவனையும் கொன்று உடலை ரயில்வே லைனில் வீசினேன்.''

''அன்றிரவுதான் நான் சுடுகாட்டில் சந்திரநாத்திற்காகக் காத்திருந்தேன்.''



''எக்ஸாக்ட்லி. மாயாவைக் கொன்றபின் மூன்றாவது பெண்ணைப் பற்றித் தெரிந்து கொள்ள பாதி ரூல் அண்ட் ஜாவலினிற்குப் போனேன். சித்ரவதைக்குப் பின்தான் அனுசுயாவின் பெயரை அந்த ஆள் சொன்னார். நானே அனுசுயா செத்த பின்னால், அந்த ஆள் சாட்சி சொல்லக் கூடாதல்லவா?''

''அதனால் ஆடு வெட்டுகிற மாதிரி அவரையும் கூறு போட்டாய்.''

''ஆமாம். பணத்திற்காக நடந்த கொலை என்று போலீசாரும் நம்ப வேண்டும் என்பதற்காகத்தான் கல்லாவைத் திறந்து காசு பணத்தையெல்லாம் அள்ளிக் கொண்டேன். கடையை வெளியே பூட்டிவிட்டுத் தப்பினேன். அவருக்கு உயிர் பிரியாமல் இருந்து போலீஸிற்கு ஃபோன் செய்வார் என்றோ, சந்தியா, மாயா, அனுசுயா என்று குறிப்பெழுதி விட்டுச் சாவார் என்றோ நான் எதிர்பார்க்கவில்லை.''

''ரிச்சர்டை எதற்குக் கடத்தினாய்? அதுவும் உன் வேலைதானே?''

''எங்கள் குழுவிற்கு அவசரப் பணத்தேவை. நடராஜர் சிலையால் உபயோகமில்லை. லட்சக் கணக்கில் பணம் புரட்ட வேண்டும். அதனால்தான் அமெரிக்க அதிகாரியையே கடத்தி அரசாங்கத்திடமே பணம் வசூல் செய்ய முடிவு செய்தோம். எங்கள் குழுவைச் சேர்ந்த போலீஸ் டிரைவர் சம்மதித்தான். வெற்றிகரமாக எல்லாம் நடந்து விட்டது. ஆனால் உங்கள் அதிர்ஷ்ட சாமர்த்தியத்தால் எங்களுக்குத் தோல்வி ஏற்பட்டு விட்டது.''

''முதல் தோல்வி என்று சொல்.''

''என் வீழ்ச்சியின் ஆரம்பம் அனுசுயா விவகாரத்தில்தான் பட்டு தோல்வி. அவளைத் தீர்க்க நான் சந்திரநாத்துடன் காரில் போனேன். அதிர்ஷ்டக்காரி முதல் முயற்சியில் தப்பிவிட்டாள். இரண்டாவது முறை போலீஸ் டிரஸ்ஸில் போனேன். அப்போதும் தப்பித்து விட்டாள். புதிய திருப்பமாக கமிஷனர் வீட்டிலேயே அவளுக்குப் பாதுகாப்பு. பிரதமருக்கு மேடை அமைக்கும் நாளிற்குள் அவளைத் தீர்த்தாக வேண்டிய கட்டாயம் எனக்கு. சந்திரநாத்தின் மீதுதானே சந்தேகம். அவனே இறந்து விட்டால்? அனுசுயாவிற்குக் கொடுக்கப்பட்ட பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்படுமே. அதனால்தான் என் டூப்பை அகற்ற நான் தீர்மானித்தேன். என் உயரம், என்னைப் போலவே வட்ட முகம், ஒவ்வொரு கொலைக்கும் அவன் பழி சுமக்கிறான் என்னும் பலன்

பாவிகளுடுகளையெல்லாம் மீறி அவனைக் கொன்று சமூகப் பாவத்தில் எறிந்தேன். அஜியுபாவிற்குக் கொடுக்கப்பட்ட பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டது. ஆனால் அது எனக்கு விதிக்கப்பட்ட வலையென்று தெரியாமல் மறந்துவிட்டேன்.

"இன்ஸ்பெக்டர் அடிப்படையில் நான் நல்லவன். மக்கள் நல்வாழ்வுக்காகத்தான் புரட்சிக்குழு அமைத்தவன். இதில் எத்தனை உயிர்களை வேண்டுமானாலும் பலி கொடுக்கத் தயார்தான். ஆனால் என் மகளையே அதற்குப் பலியாக்க வேண்டுமென்றால்... என்னால் அதைத் தாங்க முடியவில்லை இன்ஸ்பெக்டர்.... தாங்க முடியவில்லை."

இளங்கோ தலையை உள்ளங்கையில் புதைத்துக் கொண்டு அழத் தொடங்கினான்.

* * *

"ச்சே!" என்றாள் ரோஸ்லின் – பால்ராஜின் மனைவி. "மனநலம் இல்லாதவன் மீது பழிபோட்டு இப்படியா ஒருத்தன் கொலைகள் செய்வான்?"

"இந்தக் கொலைகளை எல்லாம் அவன் கண்காணிப்பு," என்கிறான் ரோஸ்லின். அவன் நினைத்த இலக்கு இந்தியாவின் சர்வாதிகாரி ஆவது. அதுதான் நிறைவேறாமல் போய் விட்டது."

"ஸ்வீட்! இத்தனை நாட்களாக ராத்திரி பகல் பார்க்காமல் இந்த கேஸ் பற்றியே மண்டையைக் குடைந்து கொண்டிருந்தீர்களே, இனிமேலாவது நேரத்திற்கு வந்து விடுவீர்களல்லவோ?"

"அதில்லை ரோஸ்லின்......" பால்ராஜ் தயங்கி தயங்கி இழுத்தார். "நாளைக்குப் பிரதமர் வருகிறார். செக்யூரிட்டி ஏற்பாடுகளைக் கவனிக்க நான்...."

"ஏதாவது [illegible] கல்யாணம் செய்து தொலைத்திருக்க வேண்டியதுதானே?" ரோஸ்லின் ஆத்திரத்துடன் தலையணையை எறிந்தபோது பால்ராஜ் குனிந்து கொண்டார்.



பரபரப்பான விற்பனையில்

# சூப்பர்நியூஸ்

ஜூலை '97 இதழ்

ஒரு சவரன் தங்கம் பரிசு!

டிப் ஐஸ்க்ரீம் பரிசுப்போட்டி

3 பக்கம் சூப்பர் ஷாட்

'மலரேரன்' சிறுகதை

தஞ்சை கோயில் டிடெய்ல்ஸ்

உலகை உலுக்கும் கன்னிவெடி பிரச்சனை – கவர் ஸ்டோரி

இது ஒரு பொது அறிவுப் பெட்டகம்!